இது

# நம்தேசம்

'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'


பார்வை-02 மார்ச், 23.2015 வியூகம்-07 பக்கங்கள்-24 விலை-ரூ.30.00

Web - www.ithunamthesam.com
Email - ithunamthesam@gmail.com



## ஏமாற்றவா வந்தீர்கள்?

# விக்கினேஸ்வரனை கணக்கெடுக்காத இந்தியா



இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்தபோது ஆரம்பத்தில் விக்கினேஸ்வரனையோ, வடமாகாணசபையையோ இந்தியா கணக்கெடுக்கவில்லை. இந்தியாவினால் உருவாக்கப்பட்ட வடமாகாணசபை இருக்கத்தக்கதாகவே மோடியின் வடபகுதிக்கான பயண நிகழ்ச்சி நிரலை புதுடில்லியிலுள்ள வெளிவிவகாரப்பிரிவே தீர்மானித்தது. இறுதி நேரம்வரை நிகழ்ச்சிநிரல் இரகசியமாக வைக்கப்பட்டது. இறுதி நேரத்திலேயே நிகழ்ச்சி நிரல் அறிவிக்கப்பட்டு பொது நூலக நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விக்கினேஸ்வரனிடம் கேட்கப்பட்டது. வரவேற்புரை நிகழ்த்துவதற்குக்கூட முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஆரம்பத்தில் அனுமதிக்கப்படவில்லை. அவர் தானாக யாழ் இந்தியத்துணைத் தூதுவரிடம் வரவேற்புரையை நாம் நிகழ்த்த முடியாதா? எனக் கேட்டதைத் தொடர்ந்தே இந்தியத் துணைத்தூதுவர் அவசரம் அவசரமாக டெல்லியுடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியை வாங்கிக்கொடுத்தார்.


விக்கினேஸ்வரன் பிரதமருக்கு வழங்கவெனக் கொண்டுவந்த பரிசுப் பொருளையும் இந்திய பாதுகாப்புப் படையினர் உள்ளே கொண்டு செல்லவிடவில்லை. விக்கினேஸ்வரனும், ஆளுநரும் இந்தியப் படையினரால் நன்கு சோதிக்கப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அதனைப் புகைப்படமெடுத்த இலங்கை ஊடகவியலாளர்களும் எச்சரிக்கப்பட்டனர். இந்தியப்படையினர் தமிழ் மண்ணில் மீண்டும் ஒருதடவை ஆதிக்கம் செலுத்தினர்.

விக்கினேஸ்வரனுடனான மோடியின் சந்திப்புக்கு நிகழ்ச்சிநிரலில் நேரம் ஒதுக்கப்படவில்லை. புகைப்படம் எடுப்பதற்கு மட்டுமே நேரம் ஒதுக்கப்பட்டது. மோடியைப் பொறுத்தவரை விக்கினேஸ்வரனின் கருத்துக்கள் முக்கியமல்ல. அவருடன் சேர்ந்து நிற்கும் புகைப்படம் தான் முக்கியம். தமிழக தேசிய சக்திகளை அடக்குவதற்கு அது அவசியப்பட்டது. தற்போது எங்களுடைய உண்மையான மனோநிலையினைக்கூட மோடிக்கு எடுத்துக்காட்ட முடியவில்லை என விக்கினேஸ்வரன் அங்கலாய்க்கின்றார்.

மோடி தமிழ் மக்களின் உண்மையான மனோநிலையினை அறிய இலங்கைக்குப் பயணம் செய்யவில்லை. இலங்கைத் தீவினை இந்தியாவின் செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதற்காகவே பயணம் செய்தார். வடபகுதிப் பயணம் தமிழ்த் தரப்பு தனது நிகழ்ச்சிநிரலை குழப்பாமல் இருப்பதற்காகவும், தமிழக மக்களை திருப்திப்படுத்துவதற்காகவுமே.

"மதியாதார் முற்றம் மிதியாதே" என்று எம் முன்னோர் சும்மாவா சொன்னார்கள்.

# புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழிக் கல்வியின் தந்தை நாகலிங்கம்



புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழிக் கல்வியை வளர்த்த பெரியார் நாகலிங்கம் கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார். தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஜேர்மனிக்குழு இவருக்கு "ஈழப்பெருந் தமிழன்" என்கின்ற விருதினையளித்து கௌரவித்தது.

பெரியார் நாகலிங்கம் யாழ்ப்பாணம் வசாவிளான் கிராமத்தைச் சேர்ந்தவர். கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி நெறியை முடித்து பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராக உரும்பிராய், பேராதனை, ஹட்டன் ஆகிய பகுதிகளில் பணியாற்றியவர். தமிழ்மொழி மீது பற்றுக்கொண்டவர். இவர் ஒரு நாடகக் கலைஞருங்கூட. இலங்கையில் பல இடங்களிலும் அவரது நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன.

இவர் தனது சொந்த முயற்சியால் 1986 ஆம் ஆண்டு ஜேர்மனியின் ஹேகன் நகரில் தமிழ்ப் பாடசாலை ஒன்றினை நிறுவினார். ஆரம்பத்தில் 10 மாணவர்கள் மட்டுமே அங்கு கல்வி கற்கிறனர். மூன்று வருடத்தில் தனது அயரா முயற்சியினால் 13 பாடசாலைகளை நிறுவினார். 1989 ஆம் ஆண்டு தமிழ்ப்பாடசாலைகளுக்கென பொதுத்தேர்வினையும் செயல்படுத்தினார். 1990 இல் இப்பாடசாலைகளை ஒன்றிணைத்து அவற்றிற்கு தமிழாலயம் எனப் பெயரிட்டார். தொடர்ந்து ஐரோப்பா முழுவதும் தமிழ்மொழிப் பாடசாலைகள் உருவாக ஊக்குவித்தார்.

தற்பொழுது ஜேர்மனியில் தமிழாலயம் என்ற பெயரில் 130 தமிழ்மொழிப் பாடசாலைகள் இயங்குகின்றன. அதில் 6500 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 650 ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர்.

பெரியார் நாகலிங்கம் அவர்களின் பணியைப் பாராட்டி உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ. நெடுமாறன் "உலகப் பெருந்தமிழன்" என்ற விருதினை வழங்கினார். தலைவர் பிரபாகரனும் யுத்த நிறுத்த காலத்தில் அவரை தாயகத்திற்கு வரவழைத்து அவரின் பணியினை நேரடியாக பாராட்டியிருந்தார். 1989இல் ஜேர்மனி தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் பொறுப்பாளராகவும் நாகலிங்கம் ஐயா பணியாற்றினார்.

தமிழே மூச்சாக வாழ்ந்த நாகலிங்கம் ஐயாவிற்கு "இது நம்தேசம்" தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவிக்கின்றது.

# ஆட்சிமாற்றம் காணிப்பறிப்பை நிறுத்தவில்லை



தமிழ் மக்கள் ஆட்சி மாற்றத்தினைக் கொண்டு வந்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரச பங்காளிக்கட்சியாகி அரசின் தேசிய நிறைவேற்றுச் சபையிலும் அங்கம் வகிக்கின்றது. கிழக்கு மாகாணசபையில் அரசாங்கக் கட்சியுடன் கொஞ்சிக் குலாவுகின்றது. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, அரசாங்கத்திற்கு கரைச்சல் கொடுக்காதீர்கள் எனப் போதித்து விட்டுச் சென்றிருக்கின்றார். ஆனால் தமிழர் தாயகத்தில் காணிப்பறிப்பு தொடர்கின்றது. அதுவும் காணி தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது படையினர் காணியைப் பறிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பில் மக்களின் உறுதிக் காணிகளை இராணுவத்தினர் பறித்து வைத்திருந்தனர். அதனை நிரந்தரமாகச் சுவீகரிக்க கிளிநொச்சி மாவட்ட செயலக காணி அதிகாரி எம்.எம்.திலகரட்ன முயற்சிகளைச் செய்தார்.

இந்தக் காணிகளுக்கான உறுதி ஜனாதிபதி சந்திரிக்காவினால் வழங்கப்பட்டது. அவ்வுறுதிகளை ரத்துச் செய்தே காணிப்பறிப்பு முயற்சி இடம்பெறுகின்றது.

குறித்த அதிகாரி திலகரட்னவை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தினுள் நுழைய விடாமல் வாயில் கதவுகளை மூடி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். போராட்டத்தையடுத்து படைமுகாமுக்குள் சென்ற காணி சுவீகரிப்பு அதிகாரி அங்கு பிரதேச செயலாளரையும், கிராம அலுவலரையும் அழைக்க முயன்றபோது மக்கள் அவர்கள் அங்கு செல்லவிடாமல் தடுத்ததுமல்லாமல் படைமுகாமுக்கு முன்னால் ஒன்று கூடி ஒளிந்திருக்கும் திலகரட்னவை வெளியே வருமாறு குரல் எழுப்பினர். பிரதேச செயலாளரிடம் மகஜரையும் கையளித்தனர்.

# சொந்த இடத்தில் குடியமர்த்த இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடு

கடந்த 14 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்று யாழில் நடத்தப்பட்டது. தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், பூந்தளிர் பெண்கள் அமைப்பு, மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கம், வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்குழு, வலி.வடக்கு பிரஜைகள் குழு என்பன இணைந்து இப்போராட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தன.


இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும். போரில் சரணடைந்தவர்களை மீள ஒப்படை, இழுவைப்படகினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கு, கடல் வளங்களை அழிக்கும் தொழில் முறைகளை முற்றாகத் தடைசெய், இடம்பெயர்ந்தவர்களைச் சொந்த இடத்தில் குடியமர்த்து, வீட்டுத்திட்டத்திற்குப் போதுமான நிதியினை வழங்கு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்னால் போராட்டம் காலை 10 மணிக்கு ஆரம்பமானது. போராட்டக்காரர்கள் பின்னர் ஊர்வலமாக நல்லூர் மருதடியிலுள்ள உதவி இந்திய தூதரகத்திற்குச் சென்றனர். தூதரகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு-கிழக்கு இணைப்பாளர் அன்றனி யேசுதாஸ் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை தூதரக அதிகாரியிடம் கையளித்தார். உதவித்தூதுவர் மகஜரைப் பெற முன்வரவில்லை. வேலைப்பளு காரணமாகக் கூறப்பட்டது.

நரேந்திரமோடி கோபிப்பார் எனக் கருதி கூட்டமைப்பைச் சேர்ந்த எவரும் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டுமே கலந்துகொண்டது. அதன் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் கட்சியின் இளைஞரணிச் செயலாளர் இன்னாசிமுத்து சத்தியசீலன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியிருந்தனர்.

நரேந்திரமோடி அன்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்ததால் செய்திகளைச் சேகரிக்க இந்திய, சர்வதேச ஊடகவியலாளர் பலர் யாழ்ப்பாணம் வந்தனர். அவர்கள் இந்தப் போராட்டச் செய்திகளையும் சேகரித்தனர்.

# தமிழ் மக்களுக்கு யமனாகப்போகும் அணுசக்தி உடன்படிக்கை



சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரி பால சிறீசேனா இந்தியாவிற்குச் சென்ற சமயம் இந்தியாவுடன் அணுசக்தி உடன் படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருக் கின்றார். சீனாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் அணுசக்தி ஒப்பந்தம் இருக் கின்றது. பாகிஸ்தானின் அணு ஆயுதத் தயாரிப்பிற்கும் சீனா உதவி வருகின்றது, அவ்வாறான ஒப்பந்தம் ஒன்றை சீனா இலங் கையுடனும் செய்து விடும் என்ற அச்சத்தி னால்தான் இந்தியா முந்திக்கொண்டது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஏற்கனவே சீனாவினால் அமைக்கப்பட்ட அணுமின்நிலையம் நுரைச்சோலையில் உள்ளது.

இந்த அணு சக்தி ஒப்பந்தத்தின் கீழ் மின்சக்தி வலுப்பயிற்சி, மின்சார விநியோகம், விற்பனைச் சேவை உள்ளிட்ட அணுசக்தி உட்கட்டமைப்பு சிறிய அள விலான அணு உலைகள் போன்றவற்றில் இலங்கைக்கு இந்தியா உதவவுள்ளது,

அணு உலைகளால் ஏற்படக் கூடிய தவறுகள், விபத்துக்கள், தொழில் நுட்பக் கெட்டித்தனங்களுக்குள் மட்டும் தங்கியிருப்பதில்லை. பருவநிலைமாற்றங் களும் விபத்தை ஏற்படுத்தும். இதனால் அணுசக்தி தொழில்நுட்ப வளத்தினைக் கொண்ட மேற்கு நாடுகள் கூட அணு சக்திகளிலிருந்து விலகி மாற்று வளங்களைத் தேடுகின்றன. ஜப்பானில் சுனாமித் தாக்கத்தினால் ஏற்பட்ட அணு விபத்திலிருந்து அந்நாடு இன்னமும் மீளவேயில்லை. ஏற்கனவே தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட அணுமின் நிலையத்தில் விபத்து ஏற் படின் இலங்கை பாதிப்படை யும் என அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கும் சூழலில் சம்பூரில் அணுமின் நிலையம் அமைக்க முயற்சிப்பது ஏன் என்ற கேள்வி எழுகின்றது.


சம்பூர் அணுமின் நிலையத்தில் விபத்து ஏற்படின் மூதூர் கிழக்கில் வசிக்கும் தமிழ் மக்கள் மட்டுமல்ல மூதூர் பிரதேசத் தில் வாழும் முஸ்லிம் மக்களும், சேருவல பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களும் பாதிக்கப்படுவர். சம்பூரிலிருந்து 17 கிலோமீற்றர் தொலைவில் திரு கோணமலை நகரம் இருப்பதனால் அதுவும் பாதிக்கப்படும். திருகோணமலை நகரத்தில் பெரும்பான்மையோர் தமிழ் மக்களே! இதனால் அதிகமாகப் பாதிக்கப்படப்போகின்றவர்கள் தமிழ் மக்கள் தான்.

விபத்தினால் மட்டுமல்ல நிலக்கரிக் கழிவினாலும், அணுக்கழிவினாலும் சுற்றுச் சூழலும் வெகுவாகப் பாதிக்கப்படும். குறிப்பாக அதிக மீன்வளத்தைக் கொண்டுள்ள மூதூர் கடற்பிரதேசம் பாதிக்கப்படும். மக்களின் வாழ்வாதாரமாகவுள்ள கடற்தொழிலும் வீழ்ச்சியடையும்.

மொத்தத்தில் இந்த அணுமின் நிலையமும் இனப்படுகொலையில் பங்களிக் கப்போகின்றது,

இந்தியா மீண்டும் ஒரு இனப்படுகொலைக்குத் தயாராகின்றதா?

# மோடியின் வருகையில் செய்தி சேகரிக்கவும் தடை



வடபகுதிக்கான விஜத்தை மேற் கொண்ட இந்தியப் பிரதமர் மோடிக்கு வழமையாக வெளிநாட்டுத் தலைவர் களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை விட சற்று அதிகமாகவே வழங்கப்பட்டுள்ளது. வடபகுதியில் மோடி செல்லும் பாதை எங்கும் நிரைக்கு நிரை இலங்கை பொலிஸாரும், இராணுவமும் காணப் பட்டாலும் அவர்களை இயக்கும் ரீமோட் டாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகளே செயற்பட்டனர். மோடியை பார்க்க பொது மக்கள் ஒன்றுகூடி நின்ற போது காரணம் சொல்லாமல் துரத்தி விரட்டப்பட்டனர். குறிப்பாக அன்றைய தினம் ஊரடங்கு போடப்பட்ட அமைதி நிலைபோன்றே மோடி பயணித்த பகுதிகள் காணப்பட்டன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மோடியின் வருகையை அனைத்து ஊடகவியலாளர்களும் போட்டி போட்டு செய்தி சேகரிப்பது என்பது வழமையான விடயம். ஆனால் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் பாதுகாப்புப் பிரச்சினை என புறந்தள்ளப்பட்டமையானது கருத்து சுதந்திரத்தை அடக்கியதாகவே பார்க்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் வடபகுதிக்கான மோடி வருகையை முன்னிட்டு இரண்டு கிழமை முன்பு ஊடகவியலாளர் விபரம் திரட்டப்பட்டு பதியப்பட்டது. அதன்படி மோடி யாழ் வந்த போது செய்தி சேகரிக்கச் சென்ற அனு மதியுடைய ஊடகவியலாளர்களுக்கும் உட்செல்ல மறுக்கப்பட்டது.

அத்துடன் பதிவினை மேற்கொள்ளாத போதும் உரிய அடையாள அட்டையை வைத்திருந்த உள்ளூர் ஊடகவியலாளர்கள், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் எனப் பலருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இந்த நிலையில் இலங்கைப் பொலிஸார் ஊடகவியலாளருக்கு அனுமதி வழங்கிய போதும் இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் ஊடகவி யலாளரைத் திருப்பியனுப்பினர்.

மோடியின் பாதுகாப்புக் கருதியே இவ்வாறான கெடுபிடிகள் காணப்பட்டாலும் ஊடகவியலாளர் தொடர்பான பதிவுகளிலும் குறைபாடுகள் காணப்பட்டன. அதாவது இந்திய துணைத்தூதரகத்தினால் சரியான முறைப்படி பதிவுகள் தொடர்பில் ஊடக நிறுவனங் களுக்கு அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்ட அனுமதி அட்டையிலும் சரியான பெயர் விபரம் பதியப்படவில்லை. இவ்வாறான குளறுபடியால் ஏராளமான ஊடகவியலாளர்கள் செய்தி கிடைக்காமல் ஏமாற்றமாகத் திரும்பிச் சென்றனர்.

வடபகுதிக்கு வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் வரும்போது விசேடமான அனு மதியுடன் ஊடகவியலாளர்களும் சோதனையின் பின்னர் பொதுமக்களும் செல்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

ஆனால் இந்தியப் பிரதமரின் வருகையின் போது ஊடகவியலாளருக்கு அதிக கெடுபிடிகள் மேற்க்கொள்ளப்பட்டன. இந்த நிலையில் பொதுமக்கள் நிலை கேள்விக் குறி தான். பொதுமக்கள் விருப்பத்தில் பார்ப்பது என்பது இரண்டாவது பிரச்சினை பொதுமக்களின் இயல்பு நிலையை மோடி பார்த்திராமையே பிரதான பிரச்சினையாக உள்ளது. கெலியில் பறந்து வந்தவர் சொகுசு வாகனத்தில் விரைந்து சென்ற நிலையில் வடபகுதி மக்களின் இயல்பு நிலைகளை மோடி பார்த்திருப்பார் என்பது சந்தேகமே.

# உக்ரெயின் போர்நிறுத்தம் நீடிக்குமா?



உக்ரெயின் அரசாங்கத்திற்கும் ரஸ்ய சார்பு கிளர்ச்சிக்காரார்களுக்கு மிடையே சமாதான உடன்படிக்கை பெப்ரவரி 12 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. பெப்ரவரி 15 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்தது.

ஜேர்மனியின் அதிபர் அஞ்செலா மெர்கெலும், பிரான்ஸ் ஜனாதிபதி பிராங் கோயிஸ் ஹோலண்டேயும் மேற்கொண்ட தீவிர இராஜதந்திர முயற்சிகளினாலேயே இந்த உடன்படிக்கை சாத்தியமானது. போர் நிறுத்த உடன்படிக்கையின்படி சகலவித கனரக ஆயுதங்களும் முன்னரங்க நிலையி லிருந்து அப்புறப்படுத்தப் பட இருக்கின்றன.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டாலும் அது நீடித்து நிலைப் பதற்கு இன்னமும் பல காரியங்கள் நடை பெறவேண்டியுள்ளன. குறிப்பாக ரஸ்யாவிற் குள்ள கவலைகளை போக்க வேண்டி யுள்ளது. ரஸ்யாவின் கோடிப்புறத்தில் அதற்கு இருக்கின்ற பாதுகாப்பு அச் சுறுத்தல்களை உதாசீனம் செய்துவிட முடியாது. அமெரிக்காவிற்கு உண்மை யாக அக்கறையுள்ள பாதுகாப்பு பிராந்தி யங்களில் தலையிடுவதில்லை என்ற ரஸ்யாவின் எழுதப்படாத கொள்கைக்கு அமெரிக்கா தலைசாய்க்கும் என்றே ரஸ்யா நம்பியிருந்தது. இந்த நம்பிக்கை தளர்ந்த போதுதான் ரஸ்யா மூர்க்கத்தனமாகச் செயற்பட்டது.

அமெரிக்கா நேசநாடுகளுடன் சேர்ந்து நேட்டோவை ரஸ்ய எல்லை களுக்கு விஸ்தரித்தபோது ரஸ்யாவினால் பொறுமை காக்க முடியவில்லை. கடந்த வருடமுற்பகுதியில் உக்ரெயினில் ஆட்சி மாற்றம் ஒன்றையும் அமெரிக்க மேற் கொண்டபோது ரஸ்யாவின் மூர்க்கம் உச்சத்திற்குச் சென்றது. உடனடியாகவே ரஸ்ய மொழி பேசுவோர்களை பெரும் பான்மையாகக் கொண்ட உக்ரெயினின் தென்கிழக்குப் பகுதியான கிரிமியாவை ஒரு சர்வஜன வாக்கெடுப்பொன்றை அங்கு நடாத்திதன்னுடன் இணைத்துக்கொண்டது. தொடர்ந்து கிழக்குப் பிராந்தியத்தில் கிளர்ச்சிக்காரர்களை ஏவிவிட்டது.

இந்தியாவிற்கு இலங்கை போன்று தான் ரஸ்யாவிற்கு உக்ரைன் உள்ளது. இலங்கையில் தமிழர் தாயகம் இருப்பது போல உக்ரைனில் கிரிமியா உள்ளது. இந்தியா தனது புவிசார் அரசியல் நலன்களுக்கு இலங்கைத் தமிழ் மக் களை பயன்படுத்தியது போல ரஸ்யா கிரிமியாவிலுள்ள ரஸ்ய மொழிபேசுவோரை பயன்படுத்தியது.

ஒரு வகையில் தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கை 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கையைப் போன்றது தான். ஒரேயொரு வித்தியாசம். அங்கு உக்ரெயின் அரசாங்கமும், கிளர்ச்சிக் காரர்களும் கைச்சாத்திட்டனர். இங்கு இந்தியத்தலைவரும், இலங்கைத் தலைவரும் கைச்சாத்திட்டனர்.

தற்போது உள்ள கேள்வி இந்த உடன்படிக்கை நீடித்து நிலைபெறுமா? என்பதே. அதற்கு ஒரே பதில் உக்ரைன் ஒருபக்கமும் சாராமல் நடுநிலையான நாடாக இருப்பது தான்.



# ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ.....

- முத்தர் அம்மான் -

தெற்கில நூறு நாள் ஆட்சி கலகலக்கத் தொடங்கியிட்டுது. ரணில் ஒரு பக்கம் தன்னுடைய ஆட்களோட இழுபட மறுபுறம் மைத்திரியர் தன்ரை ஆட்களோட இழுபடத்தொடங்கியிட்டார். ஏற்கனவே நூறுநாளில தமிழ் மக்களிற்கு ஒன்றுமில்லை, வெறுங்கையை நக்கி கொண்டிருங்கோவெண்டு சொல்லியாச்சு. ஆனால் இவ்வளவிற்குள்ளும் வலி.வடக்கில ஒரு துண்டினை விடுவித்து சர்வதேசத்திற்கு படம் காட்ட ரணில் – மைத்திரி இணைஞ்சு வருகினமாம். அப்பிடி தமிழர் தலையில மிளகாய் அரைக்கின்றதென்றால் ஒற்றுமை பாருங்கோ.

அரச பங்காளிக் கட்சியான கூத்தமைப்பின்ர சுரேஸ்பிரேமச்சந்திரனோ கோத்தா முகாம் பற்றி கதைக்கிறார். நல்ல விசயம். ஆனால் அந்த விசயத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு எழுத்து மூலம் அனுப்புறதுக்கு அவர் தயாரோ எண்டது தெரியேல்ல. அது கிடக்க பின்கதவு எம்பியோ வெறுமனே 275 அரசியல் கைதிகளே இருக்கினமெண்கிறார். அவர் இப்ப நம்பர் வண் புறோக்கர் ஆயிட்டாரெண்டது எல்லோருக்கும் தெரிஞ்சவிடயம் தான். பலவேளை அந்தாள் தமிழரசுக் கட்சியின் ஊடகப்பேச்சாளரோ அல்லது பங்காளி அரசாங்கத்தின்ர ஊடகப்பேச்சாளரோ என்று தெரியாமலிருக்குது. அப்புக்காத்து வக்காலத்து வாங்கிறதில் தூள் பறத்திறார் பாருங்கோ.

இந்தியப் பிரதமர் வந்தவேளை நடந்த கவனயீர்ப்பு போராட்டத்தில கூட்டமைப்பின்ர முக்கிய தலையள் ஒண்டையும் காணேல்ல. எல்லாரும் தலைமறைவாகிட்டினம். எல்லாம் எஜமான் கோபப்படுறமாதிரி எதையும் செய்யக்கூடாதெண்ட நல்லெண்ணம் தான் பாருங்கோ. அதில சிலரை கூப்பிட்டு துணைத்தூதரகக்காரர்கள் அன்பாக மிரட்டிவிட்டதாகவும் கேள்வி. இதனால் தான் பலரது கைத்தொலைபேசிகள் அன்று காலை முதல் செயலிழந்து கிடந்தது. ஆனாலும் தடையை தாண்டி சனம் போராட்டத்தை நடத்திப்போட்டுது. அந்தச் சனத்தோட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிகாரர்தான் முன்னுக்கு நிண்டவை. ஆனால் அவை சனத்தோட நிண்டவை என்ற விசயத்தை சில ஊடகங்கள் மக்களுக்குத் தெரியாம மூடி மறைச்சுப் போட்டுதுகள். அந்தப் போராட்டத்தை வேவு பார்க்க இந்திய–இலங்கை புலனாய்வு பிரிவுகள் போட்டிபோட்டு அலைஞ்சு திரிஞ்சது தனிக்கதை.

ரணில் ஐயா கூட்டமைப்பினை உடைக்க சதி செய்கிறதாக முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த கூட்டமைப்பின்ர தலைவர் சம்பந்தனும் சுமந்திரனும் ரணிலோட கூட்டுச் சேந்து தமிழினத்தின்ர இருப்புக்கும், விக்னேஸ்வரன் ஐயாவுக்கும் குழி பறிக்கினம் எண்ட விசயம் பாவம் அந்த ஐயாவுக்கு விளங்கேல்ல.

அண்டைக்கு புலிகள் பேச்சு மேசையில தமிழ்த் தேசத்துக்கு அங்கீகாரம் (தனிநாடு அல்ல) கேட்டபோது, அதுக்கு நேரெதிரா சம்பந்தர் அதிகாரப்பகிர்வு கேட்டு புலிகளை பிரிவினைவாதிகளாகவும், குழப்பவாதிகளாகவும் ஶ்ரீலங்கா அரசு சர்வதேச அரங்கில் சித்தரிப்பதற்கும், அரசுக்கு சர்வதேச ஆதரவை திரட்டிக்கொடுக்கவும் துணை நின்றவர். முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பிறகும் துவண்டுபோகாமல் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு இரண்டு தேசங்கள் ஒரு நாடு எண்ட கொள்கையை தொடர்ந்து முன்னகர்த்தியபோது உவையும் புலிகள் கேட்டதை தான் கேட்கினம் என்றும் அவர்கள் தனிநாடு கேட்கிறார்கள் என்பதுபோன்ற பொய்யான தோற்றப்பாட்டை ஏற்படுத்தி மக்களை அவர்களிடமிருந்து தனிமைப்படுத்தும் பிரசாரங்கள் சம்பந்தனின் அடிவருடிகளால் செய்யப்பட்டது. இப்ப எங்கட முதலமைச்சர் ஐயாவும் கஜேந்திரகுமார் தரப்பு கடந்த 5 வருசமா உறுதியாக வலியுறுத்தி வந்த அதே இரண்டு தேசம் ஒரு நாடு என்ற நிலைப்பாட்டை வலியுறுத்த தொடங்கியிருக்கிறார். அவரையும் தனிநாட்டுக்காரன் எண்டு பொய்கூறி தனிமைப்படுத்தப்போகிறதா சம்பந்தன் கோஷ்டி? என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

கூட்டமைப்பு ஒருநாளும் உடையாது. ஏனெண்டால் அதில இருக்கிற கட்சியள் எல்லாம் இந்தியாவிட்ட கடமைப்பட்டதுகள். அவை ஒருநாளும் இந்தியாவை மீறி தன்னிச்சையாக எந்த முடிவும் எடாயினம். ஆனால் சம்பந்தன் சுமந்திரன் தலைமையில விரக்தியடையிற மக்கள் முன்னணிக்குப் பின்னால் போய்விடக் கூடாதெண்டதால கூட்டமைப்புக்குள்ள இருக்கிற ஒருபகுதியை சம்பந்தனிடமிருந்து தனியா பிரிச்சு அவையள உண்மையான தேசியவாதியளாக மக்களுக்கு காட்டி அந்த மக்கள தொடர்ந்தும் தங்கட சொல்லுக்கு ஆடுற தலைமைக்கு கீழ வைச்சிருக்கிற நோக்கத்திற்காக இந்தியாவே பின்னுக்கு நிண்டு கூட்டமைப்பை பிரித்தால் ஒழிய கூட்டமைப்பு தானாக பிரியாது.

ரணில் ஐயா இந்திய மீனவரை சுடலாமெண்டு ஒன்றுக்கு இரண்டு தடவை பேட்டிகொடுத்திருக்கிறார். காரணம் தான் தமிழருக்கு எதிரி எண்டதை பகிரங்கமா நிரூபிக்க வேணும். அதாவது ராஜபக்ஸவை விடவும் நான் சிறந்த சிங்கள தேசியவாதி என்பதை நிரூபிச்சால்தான் சிங்கள மக்களிட்ட இந்தமுறை வாக்குபெற்று பிரதமராகலாம். அதுக்கான ஒத்திகை நிகழ்வுகள்தான் எல்லாம்.


இனஅழிப்பு பிரேரணை பிரதியை ஐ.நாகாரரிடம் கொடுத்ததாக முதலமைச்சர் சொல்ல இல்லை தரவில்லையெண்டு ஐ.நாகாரர் சொல்ல யாரை நம்புறதெண்டு ஒரே குழப்பம். ஆனால் அங்கு நின்றிருந்த பேப்பர்காரர் தாங்கள் கண்ணால கண்டனாங்கள். ஆனால் கொடுத்தது அது தானோவெண்டு தெரியாதென்கினம். உரியவை மனச்சாட்சிப் படி உண்மையை சொன்னாத்தான் வெளிக்கும் பாருங்கோ.

# அமுதவாக்கு



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை விரைவாக முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தினாலும் அதனைச் செய்ய வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு இல்லை.

**அஜித். பி. பெரேரா**
**பிரதி வெளிவிவகார அமைச்சர்**




திருகோணமலை கடற்படை முகாமில் உள்ள கோத்தா முகாம் தொடர்பில் முழுமையான விசாரணை வேண்டும். சாட்சிகளுக்கு உயிர் உத்தரவாதம் தரப்படுமானால் சாட்சிகளை வழங்கத் தயாராக உள்ளோம். கோத்தா முகாமில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 700 பேர் அடைக்கப்பட்டிருந்தனர். இதனை பாராளுமன்றத்தில் நான் தெளிவாகக் கூறினேன்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்.**
**பாராளுமன்ற உறுப்பினர்.**



இரு நூறு வருடங்களாக வாழ்வியல் கட்டமைப்புத் தேவைகளிலிருந்து பின் தள்ளப்பட்டுள்ள சமூகமாக அல்லற்படும் பெருந்தோட்டத்துறை தமிழ்த் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிரந்தரமான தூரநோக்கு சிந்தனையுடைய தேசிய கொள்கைத் திட்டம் உருவாக்கப்படல் வேண்டும்.

**ஆர். யோகராஜன்**
**பாராளுமன்ற உறுப்பினர்.**



வெல்லப்பட முடியாதவர் என்ற மோடியின் பிரதிமை இப்போது போய் விட்டது. மோடியும் அவரது சகாக்களும் பெரு முயற்சி எடுத்த போதிலும் கூட 70 ஆசனங்களைக் கொண்ட டில்லி சட்டசபையில் பாரதீய ஜனதாவினால் வெறுமனே மூன்று ஆசனங்களையே கைப்பற்ற முடிந்தது.

**எம்.பி. வித்தியாதரன்**
**இந்தியப் பத்திரிகையாளர்.**



அ.தி.மு.கவும், தி.மு.கவும் ஊழல் புகாரில் சிக்கியுள்ள நேரத்தில் 1967இல் காங்கிரசை எப்படி தி.மு.க வீழ்த்தியதோ அதே போல 2016 இல் அ.தி.மு.க, தி.மு.க வை வீழ்த்த ரஜினி என்ற ஆயுதம் உதவும் என்று பா.ஜ.காவின் மேலிடத்தவர்கள் கணக்குப் போடுகிறார்கள்.

**முத்தையா-காசிநாதன்**
**தமிழகப் பத்திரிகையாளர்.**




மாக்சியம் தொடர்பாக அதற்கு எதிராக விவாதங்களை முன்னெடுத்தவர்கள் மீது கால் மார்க்சோ, ஏங்கல்சோ அல்லது அவர்களுக்குப் பின் வந்த லெனினோ, ட்றொட்ஸ்தியோ ஆத்திரம் கொண்டதில்லை அமைதியாக அவற்றை உள்வாங்கி ஆணித்தரமான பதில்களை வழங்கினர். இத்தகைய பண்பு பேணப்படவில்லை.

**மு. பொன்னம்பலம்**
**ஈழத்து எழுத்தாளர்.**




பெண் குறித்த இழிவானதும் எதிர்மறையானதுமான கருத்துருவாக்கங்களைப் பரப்புவதில் ஊடகங்களின் பங்களிப்பு பெரிதாக உள்ளது. இதன் மூலம் வக்கிரமான உளப்பிறழ்வு நோய்வாய்ப்பட்ட சமூகத்தினை ஊடகங்கள் படிப்படியாகக் கட்டமைக்கின்றன. பெண் பற்றிய கொச்சையான சொல்லாடல்கள், பெண்ணை ஆபாசமாகவும் இழிவாகவும் அர்த்தப்படுத்தும் கதைகள் பெண்ணின் ஆளுமையை எள்ளி நகையாடும் காட்சிகள் என இவை பலவாறாக உள்ளன.

**திருமதி. வசந்தி தயாபரன்**
**பெண்நிலை எழுத்தாளர்.**



ஒரு வருடத்திற்கு முன் முன்பள்ளிக்கு கிளம்பிச் சென்ற நான் பின் வீடு திரும்பவே இல்லை. தாலிபான்களின் தோட்டாக்களால் சுடப்பட்டு, சுயநினைவில்லாமல் பாகிஸ்தானிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டேன். சிலர் நான் இனி வீடு திரும்பப் போவதில்லை எனக்கூறுகின்றனர். ஆனால் நான் நிச்சயமாக நாடு திரும்புவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நேசிக்கும் நாட்டைவிட்டுப் பிரிந்து செல்லும் கொடுமை எவருக்குமே நேரக்கூடாது.

**மலாலா யூ சுபா ஸாய்**
**அமைதிக்கான நோபல்**
**பரிசு பெற்ற பாகிஸ்தானிய சிறுமி**

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# தமிழர்கள் மகிழ்ச்சிப்பட எதுவுமில்லை

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை வந்து திரும்பியிருக்கின்றார். நாம் முன்னரே கூறியது போல அவரது பயணத்தின் இலக்கு தமிழ் மக்களல்ல. மாறாக இந்தியாவின் பிராந்திய, புவிசார் அரசியல் நலன்களே என்பதனை வெளிப்படுத்தியிருந்தோம்.

இந்தியாவின் இலக்கினைப் பொறுத்தவரை இந்தப் பயணம் அதற்கு வெற்றியே! இராஜதந்திரிகளுக்கு தடையற்ற விசா, சுங்க விடயத்தில் ஒத்துழைப்பு என மோடி இந்தியாவின் புவிசார் நலன்களுக்கான அடித்தளங்களை நன்றாகவே உருவாக்கியிருக்கின்றார். கூடவே சிங்கள மக்களின் மனங்களைக் குளிரச் செய்யும் பாராளுமன்ற உரை வேறு.

இந்தியா புவிசார் அரசியல் நலன்களைப் பெற்றுக்கொள்வது எமக்குப் பிரச்சினையல்ல. ஆனால் தமிழ் மக்களைக் கருவியாகப் பயன்படுத்தி புவிசார் அரசியல் நலன்களைப் பெறும்போது தமிழ் மக்களது நலன்களையும் கவனித்திருக்கவேண்டும் எனக்கூறும் உரிமை எமக்கு உண்டு.

ஒரு ஆட்சி மாற்றத்திற்கான பாதையை அமைத்துக் கொடுத்தவர்கள் தமிழ் மக்களே! இதற்குத் தமிழ் மக்கள் கொடுத்த விலையும் அதிகம். தமிழ் மக்கள் நம்பியிருந்த சர்வதேச விசாரணையும் ஆட்சி மாற்றத்தின் பயனாக கிடப்பில் போடப்பட்டிருக்கின்றது,

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன அழிப்பிற்கு சர்வதேச விசாரணை மூலமான நீதியையும், இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணயமுடைய அரசியல் தீர்வும் மிக அவசியம். தனது புவிசார் அரசியல் நலன்களுக்காக இந்தியா இது விடயத்தில் எந்த அழுத்தங்களையும் கொடுக்கப்போவதில்லை என்பது எமக்கு நன்றாகவே தெரியும்.

இன அழிப்பில் இந்தியாவும் பங்குதாரர் என்பதை மோடி பாராளுமன்றத்தில் நன்றாகவே தெளிவுபடுத்தியிருக்கின்றார். "நாங்கள் பயங்கரவாதத்தை தோற்கடித்திருக்கின்றோம் என மோடி மகிழ்ச்சிப்பட தெரிவித்துள்ளார்.

இது "இந்தியாவின் யுத்தத்தையே நாங்கள் நடத்தினோம்" என்ற மகிந்தரின் கூற்றிற்கு எந்தவகையிலும் குறைவானதல்ல. இந்தியாவும் சேர்ந்து எமது விடுதலைப்போராட்டத்தை அழித்தது என்பதும் நன்றாகத் தெரியும்.

அரசியல் தீர்வாக மீண்டும் 13வது திருத்தத்தை மோடி உயர்த்திப் பிடித்துள்ளார். 13க்கு அப்பால் என்பது வெறும் வார்த்தை ஜாலமே தவிர வேறொன்றுமல்ல. ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் நின்று கொண்டு "அப்பால்" எனக் கூறுவது வேறுஎன்னவாக இருக்கமுடியும்.

"சுத்தி சுத்தி சுப்பற்றை கொல்லைக்குள்" என்பது போல தொடர்ந்தும் 13ஐப் பற்றிப் பேசுவது இந்தியாவிற்கு உவப்பாக இருக்கலாம். அனுபவப்பட்டறிவு காரணமாக தமிழ்மக்களுக்கு இது ஒரு போதும் உவப்பாகப் போவதில்லை.

சர்வதேச விசாரணை, அரசியல் தீர்வு தொடர்பாக மோடி வாய்திறக்கமாட்டார் என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்றாக இருந்தாலும் இயல்பு நிலையினைக் கொண்டு வருதலில் மோடி பங்களிப்புச் செய்வார் என்ற நப்பாசை தமிழ்மக்கள் மத்தியில் இருந்தது.

நிலப்பறிப்பு, சிங்களக்குடியேற்ற நிறுத்துகை, இராணுவ அகற்றல், சிறைக்கைதிகள் விடுதலை, காணாமல் போனவர்கள் விவகாரம் என்பவற்றில் ஸ்ரீலங்கா அரசிற்கு மோடி அழுத்தங்களைக் கொடுத்து முன்னேற்றங்களைக் காண்பிப்பார் என்ற நம்பிக்கை இருந்தது. அகதி முகாம்களுக்கும், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற்கும் மோடி பயணம் செய்து மக்களுக்கு ஆறுதல் கூறுவார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அவை எதுவும் நடக்கவில்லை.

பிரித்தானியப் பிரதமர் டேவிட்கமரூன் அகதி முகாம்களுக்குச் சென்றார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். அழிக்கப்பட்ட ஊடகநிலையத்தைப் பார்வையிட்டு நடந்த அநியாயங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என இலங்கை மண்ணிலிருந்தே வலியுறுத்தியிருந்தார். அதன் பின்னர் தனதுவெளிவிவகார அமைச்சரை வலி வடக்கு மக்களின் முகாமுக்கு அனுப்பி நிலைமைகளை அறிந்து கொண்டார். அது மட்டுமன்றி அண்மையில் பிரித்தானியா சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரியிடம் இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறியிருந்தார். அதில் வலி வடக்கு மீள் குடியேற்றமும் அடங்குகின்றது. துரதிஷ்டவசமாக அவ்வாறான எந்தக் கருத்தையும் கூறும் துணிவு மோடிக்கு வரவில்லை. மீண்டும் ஒரு தடவை இந்தியப்படையின் வக்கிரத் தனங்கள் தான் வெளியில் தெரிந்தன.

மொத்தத்தில் மோடி பயணத்தினால் தமிழ் மக்கள் மகிழ்ச்சிப்பட எதுவுமில்லை.

# விடுதலைப் புலிகளின் மறைவுக்குப் பின்னர் தமிழ் மக்களை ஓரங்கட்டும் முயற்சி ஓங்கியுள்ளதா?

-வி.தேவராஜ்-

தமிழ், முஸ்லிம் மக்கள் இலங்கையின் அரசியல் தலைவிதியை பெப்ரவரி 8ஆம் திகதி மீள எழுதி வைத்தனர். இலங்கையின் அரசியல் வரலாற்றில் 20 வருடங்களுக்கு மேல் அரசாளும் திட்டத்துடன் பெப்ரவரியில் மஹிந்த தேர்தலில் களம் இறங்கினார். ஆனால் இந்தத் திட்டங்கள் அனைத்தையும் தமிழ் பேசும் மக்கள் முறியடித்துவிட்டனர். தமிழ் பேசும் மக்களிடையே எழுந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான அலையை சரிவரக் கணித்துக்கொண்ட தமிழ்பேசும் தலைமைகள் குறிப்பாக முஸ்லிம் தலைமைகள் தமக்கான அரசியல் பயணத்திற்கேற்ற வகையில் அறுவடையாக்கிக் கொண்டுள்ளனர்.

முஸ்லிம் தலைமைத்துங்களின் சந்தர்ப்பவாத அரசியலால் முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுகின்றதோ



இல்லையோ முஸ்லிம் அரசியல்வாதிகளின் அபிலாஷைகள் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் போன்று தற்போதும் நிறைவேறியுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தினைப் போன்று தற்போதைய மைத்திரிபால சிறிசேன ஆட்சிக் காலத்திலும் முஸ்லிம் தலைமைகள் அமைச்சுப் பதவிகளை வாரிச்சுருட்டிக் கொண்டுள்ளனர்.

இதற்கும் அப்பால் முஸ்லிம் தலைமைகள் கரையோர மாவட்ட அலகு கருத்தியலில் இருந்து மாறுபட்டு வடக்கு தமிழர்களுக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு என்ற எண்ணப்பாட்டை நிலை நிறுத்தத் தொடங்கியது மாத்திரமல்ல கிழக்கு மாகாண சபையின் முதல்வர் முஸ்லிம்களாகவே இருக்கவேண்டும் என்பதையும் உறுதிப் படுத்தியுள்ளன.

அது மாத்திரமல்ல சிங்கள இராஜதந்திரத்திடம் தொடர்ந்தும் தோல்விகளைச் சந்தித்து வரும் தமிழர் தலைமைகள் முஸ்லிம் இராஜதந்திரத்திடமும் மண்டியிடப் போகிறது என்று ஒட்டு மொத்த தமிழினமும் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளது.

முஸ்லிம் தலைமைகள் தமிழ்த் தலைமைகளுடன் இணைந்து போவதை விட சிங்களத் தலைமைகளுடன் இணைந்து போனதே வரலாறாக இருக்கின்றது. இவ்வாறான இணைந்த அரசியலால் முஸ்லிம் மக்கள் எந்தளவுக்கு நன்மைகளைப் பெற்றனர் என்பது கேள்விக்குறியாகும்.



ஆனால் முஸ்லிம் தலைமைகள் தமது அரசியல் பயணத்திற்கும் தமது சுயநலன்களுக்கும் சிங்களத் தலைமைகளுடனான இணைந்த அரசியலை மிக அதிகமாகவே பயன்படுத்திக் கொண்டது மாத்திரமல்ல பயனையும் அடைந்து கொண்டுள்ளன.

இது குறித்துப் பேச முற்படுவதானது தமிழர் தரப்பு இனவாத நோக்கில் சிந்திப்பதாக முஸ்லிம் தரப்பு கூறத் தொடங்குவர். ஆனால் இறுதிக் கட்டப்போரில் கொத்துக் கொத்தாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது கிழக்கு மாகாணத்திலும் கொழும்பு மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த, வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் பாற்சோறு சமைத்து கைகோர்த்து கொண்டாடினர். தமது உறவுகளையும் இழந்து இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த தமிழ் மக்களின் இதயங்களைப் பிளந்து மிளகாய்ப்பொடி தடவியது போன்ற உணர்வை வேதனையை தமிழ் மக்கள் அனுபவித்தனர்.

**முஸ்லிம் தலைமைகள் கரையோர மாவட்ட அலகு கருத்தியலில் இருந்து மாறுபட்டு வடக்கு தமிழர் களுக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு என்ற எண்ணப்பாட்டை நிலை நிறுத்தத் தொடங்கியது மாத்திரமல்ல கிழக்கு மாகாண சபையின் முதல்வர் முஸ்லிம்களாகவே இருக்கவேண்டும் என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளன.**

அதுமட்டுமல்ல தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற அநீதிகளை நியாயப்படுத்தி முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களுடன் கைகோர்த்து வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜெனிவாவுக்குச் சென்றும் தமிழர்களுக்கு நீதி கிடைத்துவிடக் கூடாதெனக் குரல் எழுப்பினர்.

ஆனால் இராகமையிலும் பேருவளையிலும் முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கியழிக்கப்பட்டபோதும் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டபோதும் தமிழ் மக்கள் சிங்கள அராஜகத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தனர். முஸ்லிம் மக்களுக்கு எதிரான சிங்கள பேரினவாதத்தின் காடைத்தனங்களுக்கு எந்த ஒரு தமிழ் மகனும் துணைபோகவில்லை. பேரினவாதச் சக்திகளுடன் தமிழர்கள் கைகோர்த்து நடக்கவும் இல்லை

(23 ஆம் பக்கம் பார்க்க)

# மோசமான ஏமாற்றத்தை தந்த மோடியின் பயணம்

-முத்துக்குமார்-

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கைப் பயணம் தமிழ்மக்களுக்கு ஏமாற்றத்தைத் தரும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். ஆனாலும் அது படுமோசமான ஏமாற்றத்தைத் தரும் என எதிர்பார்க்கப்படவில்லை. பொறுப்புக் கூறுதல், நல்லிணக்கம் ஆகிய விடயங்களில் இந்தியாவின் நிலைப்பாடு ஏற்கனவே தெரிந்தவிடயம். அதனால் மோடி எதுவும் செய்யப்போவதில்லை என்பது ஏற்கனவே தெரிந்திருந்தது. இதனால் இவ்விரண்டு விடயங்களிலும் தமிழ் மக்கள் பெரிய எதிர்பார்ப்புக்களைக்கொண்டிருக்கவில்லை. ஆனால் இந்தியாவினுடைய நலன்களில் நின்று கொண்டாவது இலங்கை - இந்தியா ஒப்பந்தத்திலும், 13 ஆவது திருத்தத்திலும் அதிக கவனம் செலுத்தவார் என்றும், இயல்பு நிலையைக் கொண்டு வருதலில் முன்னேற்றங்கள் நிகழும் என்றும், பச்சை ஆக்கிரமிப்புக்கள் சிறிதளவாவது நிறுத்தப்படும் என்றும் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் இவை எதுவும் பெரிதாக நடக்கவில்லை. மோடியின் பயண இலக்கு ஒன்றைப் பரிமாணமாக சீனாவை அகற்றுதல் என்பதாக இருந்தமையினால் இவற்றையெல்லாம் கிழறி தமக்குச் சார்பான அரசாங்கத்தை அவர் சங்கடப் படுத்த விரும்பவில்லை. சீனாவை அகற்றுவதற்கான முதலாம் கட்டப் பணிகளைச் செய்தல், சிங்கள மக்களின் நன்மதிப்பைப் பெறுதல், இந்தியாவின் விருப்பப்படி நடக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையை பலப்படுத்துதல், கூட்டமைப்புக்குள்ளிருந்து அரசுக்கு

அரசாங்கத் தலைவர்களுடனான சந்திப்பின்போது நரேந்திரமோடி 13 இற்கும் அப்பால் செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். ஏற்கனவே மகிந்த ராஜபக்ஷ கூறியதை திரும்பக் கூறியுள்ளாரே தவிர இதில் புதிதாக எதுவும் இல்லை. 13 இற்கும் அப்பாலான தீர்வு வடிவம் என்னவாக இருக்க வேண்டும் என்பது பற்றி எதையும் கோடிட்டுக்காட்டவில்லை.

கரைச்சல் கொடுப்பதை கட்டுப்படுத்தல். தமிழக தேசிய சக்திகளின் அழுத்தங்களைக் குறைத்தல் என்பனவே அவரது நிகழ்ச்சி நிரலின் பிரதான இலக்குகளாக இருந்தன.

உண்மையில் அரசாங்கம் மோடியிடம் இருந்து அழுத்தங்கள் வரலாம் என நினைத்து தமிழ்த் தரப்பு பிரச்சினைகளில் சிலவற்றையாவது செய்வதற்கு முனைந்திருந்தது. 1000 ஏக்கர் நிலப்பரப்பினை வலிகாமத்தில் விடுவிக்கப்போவதாக மோடியின் பயணத்தையிட்டுத்தான் அறிவித்திருந்தது. சம்பூரிலும் நிலங்கள் விடுவிக்கப்படும் என அரசின் பங்காளிக் கட்சியான கூட்டமைப்பின் ஊடாகவும் அறிவித்திருந்தது. சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படலாம் என்றும் கூட செய்திகள் வந்தன.

ஆனால் இந்திய வெளிநாட்ட மைச்சர் சுஸ்மாஸ்வராஜ் வந்து சென்றவுடன் மோடியிடமிருந்து பெரிய அழுத்தங்கள் வராது என்பதை இலங்கை தெரிந்து கொண்டது. இதன் பின்னர் காணிகளை விடுவித்தல், சிறைக்கைதிகள் விடுவிப்பு என்பதைக் கைவிட்டது. தேர்தல் காலமாக இருப்பதனால் இவ்விடயங்களில் முனைப்புக் காட்டி சிங்கள மக்களின் ஆதரவினை இழக்க அரசாங்கம் விரும்பவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக்கால தீவிர சிங்களத் தேசியவாதம் இவற்றைச் செய்யவிடவில்லை.

அரசாங்கத் தலைவர்களுடனான சந்திப்பின்போது நரேந்திரமோடி 13 இற்கும் அப்பால் செல்லவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். ஏற்கனவே மகிந்த ராஜபக்ஷ கூறியதை திரும்பக் கூறியுள்ளாரே தவிர இதில் புதிதாக எதுவும் இல்லை. 13 இற்கும் அப்பாலான தீர்வு வடிவம் என்னவாக இருக்கவேண்டும் என்பது பற்றி எதையும் கோடிட்டுக்காட்டவில்லை. 13க்கு அப்பால் என்பது 13இனை அபிவிருத்தி செய்வதாகவே பொருள்படும். 13 ஆவது திருத்தம் ஒற்றையாட்சிக்குட்பட்ட ஒரு வடிவம். அது ஏற்கனவே பல்வேறு சட்டங்களினாலும், சுற்றுநிருபங்களினாலும் கந்தலாகிப் போயுள்ளது. இதனை அபிவிருத்தி செய்து என்ன பயன்? என்பது மோடிக்குத் தான் வெளிச்சம். இங்கும் கூட காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படல் வேண்டும் என வலியுறுத்தவில்லை.

இந்தியா ஒரு போதும் 13 இனைக் கைவிடப்போவதில்லை. ஏற்கனவே பல தடவை கூறியது போல 13வது திருத்தம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்டது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் தான் இலங்கை மீது செல்வாக்கு செலுத்துவதற்கு இந்தியாவிற்குள்ள ஒரேயொரு சர்வதேச ஆவணம். இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியாவிற்கு எதிரான சக்திகள் இலங்கையில் காலூன்ற முடியாது. இவ் ஒப்பந்தம் நிலைக்கவேண்டுமாக இருந்தால் 13வது திருத்தம் நடைமுறையில் இருக்கவேண்டும். இது இருக்கவேண்டுமானால் வடமாகாண சபை இயங்குவது போல ஒரு தோற்றம் தெரிய வேண்டும். இந்தியா அண்மைக்காலமாக முயற்சிப்பது இதற்காகத் தான்.

பாராளுமன்ற உரையின் போது மோடி இனப்பிரச்சினை என்றோ. தமிழர் என்றோ வாயே திறக்கவில்லை. குறைந்த பட்சம் 13வது திருத்தம் பற்றியும்கூட எதுவும் கூறவில்லை. தான் சமஷ்டிக் கொள்கையின் ஆதரவாளன் என்று மட்டும்



கூறினார். சமஷ்டியிலும் பல வகையுண்டு. அவர் எந்தச் சமஷ்டியைப் பற்றிக் கூறினார் என்பதை அவரிடம் தான் கேட்கவேண்டும். இந்திய சமஷ்டியைப் பற்றியும் புகழ்ந்துரைத்திருக்கின்றார். அவ்வாறு புகழக்கூடிய அளவிற்கு இந்திய சமஷ்டி உயர்ந்ததாக இல்லை. அதனை அரை குறை சமஷ்டி என்றே அரசியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது எடுத்த உடனேயே "இந்தியாவை நம்புகின்றார்களா?" எனக் கேட்டார். கூட்டமைப்பின் தலைவர்கள் அனைவரும் "ஆம்" என்றனர். அப்படியாயின் எதிர்ப்பு அரசியலை நடாத்தி அரசாங்கத்திற்கு கரைச்சல் கொடுப்பதை நிறுத்தவேண்டும்" என்றார். கூட்டமைப்பினர் வாய் பொத்தி மௌனமாக அவரின் கட்டடளையை ஏற்றனர். இந்தியாவை நம்பி நாம் வரலாற்றில் ஏமாந்தோம் என அவர்களுக்குச் சொல்ல முதுகெலும்பு இல்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முதல்நாள் புதுடில்லியில் ராஜீவ்காந்தி - பிரபாகரன் சந்திப்பின்போது "வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைந்திருக்கும் அதற்கு தான் உத்தரவாதம் தருகின்றேன்" என ராஜீவ் காந்தி குறிப்பிட்டார். ஆனால் காங்கிரஸ் ஆட்சியிலேயே வடக்கு - கிழக்கினை நீதிமன்றம் பிரித்தபோது இந்தியா எதுவும் செய்யவில்லை. சட்டரீதியாக இணைக்கப்படவில்லை என்ற நீதிமன்றதின் குற்றச்சாட்டை நிவர்த்தி செய்வதற்குச் சட்டரீதியாக இணைக்கும்படி இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்திருக்கலாம். இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்கின்ற சர்வதேச ஆவணத்தில் இந்த ஏற்பாடு உள்ளதனால் அதற்கு மதிப்புச் செலுத்தும்படியும் இலங்கையைக் கேட்டிருக்கலாம். ஆனால் இந்தியா பேரினவாதச் சக்திகளை பகைக்கக்கூடாது என்பதற்காக மௌனம் சாதித்தது.

புலிகள் இந்தியாவுடன் நிற்கவில்லை என இதற்குக் காரணம் கூறலாம். ஆனால் இந்த உறுதிமொழி புலிகளுக்கூடாக

பாராளுமன்ற உரையின் போது மோடி இனப்பிரச்சினை என்றோ. தமிழர் என்றோ வாயே திறக்கவில்லை. குறைந்த பட்சம் 13வது திருத்தம் பற்றியும்கூட எதுவும் கூறவில்லை. தான் சமஷ்டிக் கொள்கையின் ஆதர வாளன் என்று மட்டும் கூறினார். சமஷ்டியிலும் பல வகையுண்டு. அவர் எந்தச் சமஷ்டியைப் பற்றிக் கூறினார் என்பதை அவரிடம் தான் கேட்கவேண்டும்.

தமிழ் மக்களுக்குக் கூறப்பட்ட உறுதிமொழியே. இதற்கு மதிப்புக் கொடுக்க வேண்டியது இந்தியாவின் கடமை. இது விடயத்தில் இந்தியா தமிழ் மக்களை நம்பவைத்து ஏமாற்றி விட்டது.

தற்போது வடக்கு - கிழக்கு இணைப்புக் கோரிக்கையைக் கைவிடும்படி கூட்டமைப்புக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கின்றது. பிரிப்புக்கு அரசியல் ரீதியான அந்தஸ்து கொடுக்கும் வகையில் பிரிக்கப்பட்ட மாகாணசபைகளில் போட்டியிடும்படி வற்புறுத்தியது. கூட்டமைப்பும் தற்போது வட-கிழக்கு இணைப்பினைக் கைவிட்டுவிட்டது. தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழக மண்ணில் வைத்தே வட-கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை எனக் கூறியிருக்கின்றார்.

இந்நிலையில் சர்வதேச ஒப்பந்தத்தில் கூறிய வார்த்தையையே இந்தியா கைவிடும்போது வெறுமனவே வாயால் சொன்னவற்றை எவ்வாறு நம்பமுடியும்.

இந்தியா தானும் சேர்ந்து உருவாக்கிய அரசாங்கம் என்பதால் அதனைப் பாதுகாப்பதற்காக எதிர்ப்பு அரசியலைக் கைவிடுங்கள் எனக் கூறுகின்றது. தமிழர்களைப் பொறுத்தவரை

(16 ஆம் பக்கம் பார்க்க)

# தலைநரைச்சதுகள் புரியவேணும்

**வ**ணக்கம் வணக்கம்

**நான் கல்வயல் கனகசிங்கம்**

**எப்படி உங்கட பாடு?**

**ஏதோ என்ர பாடும் போகுது.**

ஒரு மாதிரி மோடி ஐயாவும் வந்து போயிட்டார். மஹிந்த ஐயா வரேக்கை காட்டின கெடுபிடியளை சனம் பழையபடி மோடி ஐயாவின்ர வருகை காலத்தில நினைவு கூர்ந்திருக்கிறது.

தாச் கோட்டலில மோடியின்ர உத்தரவை சத்தம் சந்தடியில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தவையாம். தேடிவந்தவரிட்ட சம்பூர், கேப்பாபிலவு, வலிவடக்கு மீள் குடியேற்றம் பற்றியோ, காணாமல் போனதுகள், சிறையில இருக்கிற அரசியல் கைதிகள் பற்றியோ எந்தக் கதையும் சொல்லவில்லையாம். எல்லாம் எஜமான் விசுவாசம் தான் பாருங்கோ.




முதலில இன அழிப்பு தீர்மானத்தை மனுசன் நிறைவேற்றிச்சுது. இவை உள்ளூர் விசாரணையெண்டு சொல்ல இல்லையில்லை சர்வதேச விசாரணையெண்டு மனுசன் முகத்தில அடித்ததுபோல தீர்மானமே நிறைவேற்றிப் போட்டுது. 13ஆவது திருத்தச் சட்டத்தை வலுப்படுத்தச் சொல்லி இவையள் இந்தியாவிட்ட பவ்வியமாகக் கேட்க, விக்கியரோ 13 ஆவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொள்ளக்கூட ஏலாதெண்டு வெட்டொன்று துண்டு இரண்டாகச் சொல்லிப்போட்டுது. இப்ப இணக்க அரசியல் பேசுறவை அதிர்ந்துபோய் நிக்கினம். எல்லாத்துக்கும் கஜேந்திரகுமார் தரப்பின்ர உறுதிக்கும் நேர்மைக்கும் தான் மக்கள் நன்றி சொல்ல வேணும் பாருங்கோ. அவை போன 5வருசமா இதுகளை எல்லாம் வலியுறுத்தினதோட கூட்டமைப்பின்ர துரோகங்களையும் புட்டுவைச்சிருக்கா விட்டால் இண்டைக்கும் உது நடந்திருக்காது.

கூத்தமைப்பில இருக்கிற பலரதும் சாயம் ஏற்கனவே வெளுத்திட்டுது. இப்ப கிட்டடியில முன்னாள் பள்ளிக்கூட விவசாய வாத்தியாரின்ர பொட்டுக்கேடுகள் வெளிக்கத் தொடங்கியிருக்குது. விலாங்கு மீன் மாதிரி புலம்பெயர் உறவுகளுக்கு தேசியவாத முகத்தை காட்டி, கூத்தமைப்புத் தலைமையின்ர துரோகத்தனங்களுக்கு துணைபோற விசயம் அப்பட்டமாகத் தெரியத்தொடங்கியிட்டுது.

அவர் டக்ளஸ் பாணியில அரசியல் செய்யுறது. அதற்கு முழுக்க புலம்பெயர் உறவுகள் அள்ளிக் கொடுக்கிறதுகள் தான். அவரும் சரி, அவற்ற அல்லைக்கைகள் சரி படம் காட்டுறது முழுக்க, சுவிசில போய் பின்கதவு எம்பி கள்ளன், துரோகி, அவனை இல்லாமல் பண்ண வேணும் எண்டு சனத்தை உசுப்பேத்தி, தேசியவாதத்தையும் நல்லா பேச, அதைக் கேட்ட சனம், உணர்ச்சி வசப்பட்டு, சுயநிர்ணய உரிமைக்காக போராடுறார் அவரை பலப்படுத்த வேணும் எண்டு, பனியிலயும் குளிரிலயும் உறைஞ்சு உறைஞ்சு உழைச்சு பணத்தை அள்ளிக் குடுக்க. அந்த மனிசனோ யாழ்ப்பாணம் திரும்பினதும் தமிழினத்தை விக்கிற பின்கதவு எம்பியை கூட்டித்திரியிற வேலையில தீவிரமா ஈடுபட்டிருக்கிறார். அவரின்ர தலைமையோ புலம்பெயர் உறவுகளை பொத்திக் கொண்டிருக்கச் சொல்லி ஆலோசனை சொல்லிக் கொண்டே, புலம்பெயர் நிதியில இருந்து உதவிகள் வழங்குறதாக படம் பிடிச்சுப் போடுகினம். காசை அள்ளிக்கொடுங்கோ ஆனால் பொத்திக்கொண்டிருங்கோ எண்டு சொல்லுகினம் எவ்வளவு துணிச்சல்.

இதேவேளை உயர்பாதுகாப்பு வலயமெண்டு ஆக்கிரமிச்சிருக்கிற பகுதிகளை விடுவிக்கப் போறதாக ரணில் ஐயாவின்ர ஆட்கள் சொல்லிக்கொண்டு திரியினம். அதற்கேதுவாக ஓய்வில இருந்த முன்னாள் பிரதம செயலாளர் தொடக்கம், முன்னாள் அரச அதிபர் வரைக்கும் வேலை வாய்ப்பு வழங்கியிருக்கினம். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைச்சிதோ, என்னவோ இவையள் கொஞ்சப்பேருக்கு மீண்டும் சொர்க்க வாழ்வு கிடைச்சிருக்கு.

இப்ப இணக்க அரசியல் செய்ய எல்லோரும் அடிபடுகினம். முந்தி டக்ளசை போட்டிபோட்டுக்கொண்டு திட்டித் தீர்த்தவை இப்ப போட்டோவிற்கு போஸ் கொடுக்க முண்டியடிக்கினம். அதுவும் கொஞ்ச மாகாணசபைகாரர் இருக்கினம் அவையளிற்கு வேலையே எங்கேயாவது திறந்து வைக்கிறதும், மூடி வைக்கிறதும் தான். ஆனால் சனத்தின்ர அடிப்படைப் பிரச்சினையள் பற்றிப்பேசுறதுக்கு ஒரு ஜனநாயக வழி போராட்டம் செய்வமோ வெண்டு கேட்டுப்பாருக்கோ, ஒருத்தரையும் காணக்கிடைக்காது. அதுக்குள்ள "பொங்குதமிழ்" நாயகன் எண்டு சீன் வேறை

அடுத்தடுத்த மாதங்களில பாராளுமன்ற தேர்தல் வரப்போறதெண்டது உண்மை. மெத்தப்படிச்சவை, எங்கடை ஊர்காரன் எண்டெல்லாம் உறவுகள் சொல்லிக்கொண்டு பலரும் கொழும்பில இருந்து படையெடுத்து வரவும் போகினம். யோசிச்சு முடிவெடுக்க வேண்டியது எங்கடை சனத்திட்டைதான் இருக்குது. இனியும் புலிகள் உருவாக்கின கூட்டமைப்பு என்ற போர்வைக்குள் நின்று புலிகளை பயங்கரவாதிகளாக சித்தரித்து, அரசு செய்த போர்க்குற்றங்களில் இருந்து அரசை காப்பாற்ற போராடும் கூட்டமைப்புக்கே வாக்களித்து எதிர்காலத்தையும் இருண்டதாக்கப் போகின்றோமா மாற்றம் ஒன்றிற்காக வாக்களித்து விடியலை நோக்கிச் செல்லப் போகின்றோமா என்பதனை தீர்மானிக்கிற காலம் வந்திட்டுது பாருக்கோ..

# நையாண்டியார்

## பதில்கள்

**க.விதுரன்**
**குடத்தனை, பருத்தித்துறை.**

கேள்வி:- நம்ம அரச பங்காளி கட்சியான த.தே.கூ வின்ர எம்பியொருவர் "ரணிலை" மட்டும் கடுமையாக விமர்சித்து வருகின்றாரே?

பதில்:- **உறவுகளைத் தொலைத்துப்போட்டு கண்ணீருடன் அலைகின்ற மக்களை போன சனாதிபதி தேர்தல் காலத்தினில் தன்ர அலுவலகத்திற்கு வரச் சொல்லிப் போட்டு, இதே ரணில் ஐயாவை தன்ர அலுவலகத்துக்கு கூட்டிப்போய் அவர் தான் உங்கட தெய்வம் எண்டு காட்டினவர். அதுமட்டுமே விடுதலைக்குப் போராடி காணாமல் போன ஒரு வீரன்ர தாயை அவற்றை காலில விழுந்து அழவைச்சு தனது அரச விசுவாசத்தை காட்டினவர். ரணிலு(கடவுளு)க்கும் மக்களுக்கும் இடையில பூசாரி போல நிண்டவர். ஆனால் இப்ப அவர் காட்டின கடவுள் மக்களிட்ட தூதுவிடுறாராம். நீங்கள் இம்முறை பச்சைக் கட்சிக்கு வாக்களியுங்கோ கேட்கிறவரம் எல்லாம் நான் தாறன் எண்டும், இடையில பூசாரிக் கட்சி தேவை இல்லை எண்டும், அதால இந்த மனிசனுக்கு கலக்கம் பிடிச்சிட்டுதாம் சனம் இந்தமுறை பச்சைக் கட்சிக்கு வாக்குப் போட்டு தன்னை நடுரோட்டில விட்டிடுமோ எண்டு. அதுதான் இந்த ரணில் வசைபாடல் எல்லாம் பாராளுமன்ற தேர்தல் முடியும் வரையும்தான். அதற்குப் பிறகு மீண்டும் ரணில் ஐயாவை இதே எம்.பி மக்களிட்ட கொண்டுவந்து தன்ர விசுவாசத்தை ரணிலுக்கு காட்டுவார் பாருங்கோ.**

**ப.சஞ்சீவன்**
**புலோலி, பருத்தித்துறை.**

கேள்வி:- வடக்கு உள்ளூராட்சி மன்ற ஊழல், மோசடிகள் பற்றி விசாரிக்க வடமாகாண சபையில் குழுவாமே?

பதில்:- **வடக்கிலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் கூட்டமைப்பு வசமேயுள்ளன. அவ்வாறாயின் ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகள் யாருக்கென கேள்வி எழுகின்றது. எனினும் அண்மையில் நடந்த நியமனங்களின்போது பணம் சுருட்டிக் கொண்ட மக்கள் பிரதிநிதிகள் பற்றி பல்வேறு செய்திகள் உலாவுகின்றன. அந்த வகையினில் விசாரணைக்குழு முதலில் உள்ளக விசாரணையினையே நடத்த வேண்டியிருக்கும்.**

**ப.சிவனுயா**
**பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.**

கேள்வி:- மோடி விஜயத்தின் போது, யாழினில் முன்னெடுக்கப்பட்ட கவன ஈர்ப்புப் போராட்டம் பற்றி?

பதில்:- **மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்குப் பல தடைகள் போடப்பட்டன. டெல்லி கோபம் கொள்ளுமென அஞ்சி கூட்டமைப்புத்தலைமைகள் எவரும் அந்தப் பக்கம் எட்டிப்பார்த்திருக்கக் கூடவில்லை. யாழிலுள்ள துணைத் தூதுவராலயமும் அரசியல் சித்து விளையாட்டுக்களைச் செய்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும் துணிச்சலுடன் ஒரேயொரு அரசியல் கட்சியாக ஆதரவளித்து பங்கெடுத்தது.**

**பெ.மித்திரா**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

கேள்வி: போட்டி போட்டுக்கொண்டு திறக்கப்படுபவை தமிழரசுக்கட்சி அலுவலகங்களா? அல்லது கூட்டமைப்பு அலுவலகங்களா?

பதில் : **அது திறக்கிறவரை பொறுத்துதத்தான் அதன் பதில் இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகமென்ற பேரினில் திறக்கப்படுவது தமிழரசுக் கட்சி அலுவலகங்களே. திறப்பு விழாவில் கூட தமிழரசுக்கட்சி தலைவர் / ஊடகப்பேச்சாளர் ( ? ) பங்கெடுக்கின்றனர். திறந்து கொடுப்பவருக்கோ தமிழரசுக் கட்சியில் பதவிகளில்லை.**

**ப.சிவனுஜா**
**புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.**


கேள்வி: ஒரு புறம் உயர்பாதுகாப்பு வலயமென ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளை விடுவிப்பதாகக் கூறும் அரசு, மறுபுறம் மக்கள் மத்தியில் காணிகளை ஆக்கிரமிக்கின்றதே?

பதில்: **இது மைத்திரி - ரணில் அரசின் பாணி அது. கட்டியிருக்கும் கோவணமும் உருவப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தேர்தல் காலத்தில கட்டிய கோவணத்தை பாதுகாக்க வேண்டும் என்று கதை எழுதினவர்கள். இப்ப பின்கதவால மைத்திரியிட்டயும் ரணிலிட்டயும் தங்கள் தங்கள் குடும்பங்களுக்காக சலுகை கேட்டு அலையினமாம் தெரியுமே. கடந்த மூன்று வாரத்தினுள் மட்டும் இருபதிற்கும் மேற்பட்ட தனியார் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து வருகை தந்த நில அளவையாளர்கள் சத்தமின்றி அலுவல்களை முடிப்பதாகத் தகவல்.**

# இந்தியாவிற்கான பாதையை திறந்து விட்டமோடி

-பூரணன்-

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தனது இரண்டு தினப்பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பியிருக்கிறார். கொழும்புக்கு வெளியே அநுராதபுரம், தலைமன்னார், யாழ்ப்பாணம் என்பவற்றிற்குப் பயணம் செய்தபோதும் கிழக்கிற்கோ, மலையகத்திற்கோ பயணம் செய்யவில்லை. சம்பூரில் அனல்மின் நிலையத்திற்கான அடிக்கல்லை அவர் நாட்டுவார் என எதிர்பார்த்தபோதும் கடைசி நேரத்தில் அது தவிர்க்கப்பட்டிருக்கின்றது. சம்பூர் மக்களின் எதிர்ப்பும் திருகோணமலையை ஆக்கிரமிக்க இந்தியா முயல்கின்றது என்கின்ற இலங்கை தேசியவாதிகளின் பிரச்சாரமும் சம்பூர் பயணத்தைத் தடுத்திருக்கலாம்.




கொழும்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றியதோடு முக்கியமான அரசியல் குழுக்கள் எல்லாவற்றையும் சந்தித்திருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சி , ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையகக் கட்சிகளில் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் கட்சிகள் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பவற்றின் முக்கியஸ்தர்களைச் சந்தித்திருக்கின்றார். இதற்குப் புறம்பாக மகிந்த ராஜபக்ஷவினை தனியாகச் சந்தித்துப் பேசவும் அவர் தயங்கவில்லை.

கூட்டமைப்புடனான சந்திப்பின் போது அரசாங்கத்திற்கு எந்தவித கரைச்சலையும் கொடுக்கவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார். அதனை கேட்டுக் கொண்டார் என்பதைவிட கட்டளையிட்டார் எனக்கூறுவதே பொருத்தமாக இருக்கும். கேட்டுக்கொள்ளுதல் அல்லது வேண்டிக்கொள்ளுதல் என்பது நண்பர்கள் என்ற உறவு வட்டத்திற்குள்ளேயே சாத்தியப்படும். எஜமான் - அடிமை உறவிற்குள் அது ஒருபோதும் பொருந்தாது இந்தியாவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமுள்ள உறவுமுறை எஜமான்-அடிமை உறவே ஒழிய நண்பர்களுக்கிடையிலான உறவல்ல.

> **சிங்களத் தேசியவாதிகள் எழுச்சியடைவதற்கான எந்தச் சந்தர்ப்பமும் வழங்கக்கூடாது என்பதில் மோடி கவனமாகவே இருந்திருக்கிறார். இந்தியாவுடனான உறவு இலங்கைக்கு அதிக நன்மைகளே தரும் என்ற தோற்றத்தையே கொடுக்கமுயன்றார். பாராளுமன்ற உரையின் போது தமிழர், இனப்பிரச்சினை என்பதுபற்றி மட்டுமல்ல 13வது திருத்தம் பற்றியே மோடி வாய்திறக்கவில்லை.**

மலையகக் கட்சிகளுடனான சந்திப்பில் தமிழர்கள் ஐக்கியமாக இருங்கள் என்று கேட்டுக்கொண்டார். இந்தச் சந்திப்பில் பெருந்தோட்ட வலயம் இலங்கைத் தீவிற்குள் இன்னோர்தீவாக இருக்கின்ற நிலைமை சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம், சிறீமா -இந்திரா ஒப்பந்தம் என்பவற்றினால் மலையக மக்களின் எண்ணிக்கைப் பலம் குறைக்கப்பட்டமை என்பன பற்றி தாம் எடுத்துரைத்ததாக மனோகணேசன் தெரிவித்துள்ளார். அதேவேளை 20,000 வீட்டுத்திட்டத்திற்கு இந்தியா உதவவேண்டும் எனக்கேட்டுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார். மலையக மக்கள் பற்றிய தகவல்களை மோடி தெரிந்திருக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இவைபற்றி எழுத்து ரீதியாக எதுவும் கையளித்தார்களா? என்பது பற்றித் தகவல்கள் இல்லை.

உண்மையில் மோடியின் பயணத்தில் அடையாள நிமித்தம்கூட மலையக விவகாரம் அடங்கியிருக்கவில்லை. அவ்வாறிருந்தால் இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவராலயம் மலையக மக்கள் தொடர்பான தகவல்களை மோடிக்கு வழங்கியிருக்கும். மலையகக் கட்சிகளுடனான சந்திப்பு கடைசி நேரத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது போலவே தெரிகின்றது. மோடி பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதோ அல்லது அரச தலைவர்களுடனான சந்திப்பின் போதோ மலையக மக்கள் பற்றி எதுவும் கூறவில்லை.

மலையகத் தலைவர்கள் மலையக மக்களின் தனித்துவ அடையாளம் சிதைக்கப்படுகின்றது. மலையகத் தேசிய இனத்தின் தாங்கு தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பன எவ்வாறு அழிக்கப்படுகின்றது என்பது தொடர்பான விபரங்களை மோடியிடம் சமர்ப்பித்து இவற்றைப் பாதுகாப்பதற்கு உதவுங்கள் எனக் கேட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் இவை பற்றி வாயே திறக்கவில்லை. குறைந்த பட்சம் இவர்களுக்காவது இவைபற்றிய புரிதல்கள் இருந்திருக்குமா? என்பதும் சந்தேகமே.

முஸ்லிம் காங்கிரசுடனான சந்திப்பின்போது கிழக்கு மாகாண சபையில் ஒரு தேசிய நிர்வாகம் உருவாக்கியமைக்கு மோடி மகிழ்ச்சி தெரிவித்தார். இந்த மகிழ்ச்சி தமக்கு சார்பான அரசாங்கத்திற்கு சங்கடங்கள் வராமல் தடுக்கப்பட்டுள்ளது என்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சிதான். இங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தருகின்ற அமைச்சுக்களைப் பெற்றுக்கொண்டு இணையுங்கள் என அழுத்தம் கொடுத்தது இந்தியாதான் என்பது பலருக்குத் தெரியாத விடயம். கூட்டமைப்பு ஏதாவது கரைச்சல் கொடுத்தால் மைத்திரிக்குள்ள ஆயுதம் "இந்தியாவிடம் சொல்லி விடுவேன்" எனப் பயமுறுத்துவதே! இந்தியா என்ற சொல்லைக் கேட்டாலே சம்பந்தன் உடனடியாகப் பெட்டிப்பாம்பாகி விடுவார்.

இங்கு எழும் கேள்வி மோடியின் பயணநோக்கம் வெற்றியடைந்ததா?

மோடியின்பயண நோக்கம் மிகவும் தெளிவானது. சீனாவின் செல்வாக்கினை இலங்கையிலிருந்து அகற்றுவதே இதுவாகும். முதலில் சீனாவின் இராணுவ ரீதியான மூலோபாயங்களை முறியடிப்பது. இரண்டாவது சீனாவை மேவும் வகையில் இலங்கையின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துவது,

முதலாவது விடயத்தில் சீனாவின் துறைமுகநகர் செயற்பாட்டை நிறுத்துவதும், இந்திய புலனாய்வாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்குமான களத்தை உருவாக்குவதுமே முக்கியமான வேலைத்திட்டங்கள். இரண்டிலுமே இந்தியாவிற்கு வெற்றி கிடைத்துள்ளது என்றே கூறவேண்டும். துறைமுகநகர் அபிவிருத்தி வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன, அதற்கான ஆவணங்கள் ஒழுங்காக உள்ளதா? என்பதைப் பரிசீலிப்பதற்காகத்தான் நிறுத்தப்பட்டது என அரசாங்கத்தால் கூறப்பட்டது. ஆனால் முழுமையாக நிறுத்துவதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவே தகவல்கள் வருகின்றன. இந்த நிறுத்தம் சீனாவிற்கு மிகுந்த கடுப்பை ஏற்றியுள்ளது. இலங்கைக்கான சீனத் தூதுவர் கொழும்புத் துறைமுகம் இலங்கையினுடையதா? இந்தியாவினுடையதா? என்று கேட்கும் அளவிற்கு கடுப்பு உச்சத்திற்குச் சென்றுள்ளது. சிங்கள மக்கள் தவறாக நினைக்கக்கூடாது என்பதற்காக சுற்றாடல் நெருக்கடிகளையும், சட்டரீதியாக அனுமதி பெறப்படவில்லை என்பதனையுமே இலங்கை அரசாங்கம் காரணமாகக் காட்டமுறப்படுகின்றது,

இந்தியாவின் புலனாய்வாளர்கள் சுதந்திரமாக வந்து போகக்கூடிய வகையிலும், சுதந்திரமாக நடமாடக்கூடிய வகையிலும் இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் வைத்திருப்போர் விசா பெறத்தேவையில்லை என்கின்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது, தூதுவராலயங்கள் அனைத்தும் தமது அலுவலகங்களில் தமது நாட்டின் புலனாய்வுப் பிரிவினை வைத்திருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனாலும் ஒரு கட்டுப்பாடு இருக்கும். அலுவலர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தூதரகம் இருக்கும் நாடு அதில் ஒரு கண்காணிப்பை மேற்கொள்ளும். இந்தியாவிற்கு அந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்படப் போகின்றது.

புலனாய்வாளர்களின் சுதந்திர நடமாட்டம் இல்லாமல் சீன ஊடுருவல்களைக் கண்காணிக்க முடியாது, அரசியல் சக்திகளையும் கண்காணிக்கமுடியாது. பல்வேறு தரப்பட்ட சக்திகளுடன் தொடர்புகளையும் ஏற்படுத்தமுடியாது. அபிவிருத்தித் திட்டங்களும் புலனாய்வுக்கான பெரிய வெளிகளை உருவாக்கும். அபிவிருத்தித் திட்டங்களுக்கு வரும் பணியாளர்கள் வெறுமனே திட்டப்பணியாளர்களாக மட்டும் வருவதில்லை. உளவு பார்ப்பதற்காகவும் வருகின்றனர்.

தமிழ்த் தேசிய சக்திகளைக் கண்காணிப்பதற்கும் புலனாய்வாளர்களின் சுதந்திர நடமாட்டம் உதவும். யாழ்ப்பாணத்தில் இந்திய தூதரகப்பிரிவு உருவாக்கப்பட்டமை தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதற்கு அல்ல. மாறாக தமிழ்த் தேசிய சக்திகளை வலுவாகக் கண்காணிப்பதற்கே. தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் தற்போது இலங்கைப் புலனாய்வாளர்களின் கால்களில் தான் தடுக்கப்பட்டு விழுகின்றனர். இனிமேல் இந்தியப் புலனாய்வாளர்களின் மீதும் தடுக்கப்பட்டு விழலாம்.

பொருளாதார ஒப்பந்தங்களில் மோடி பெரிய கவனத்தைக் குவிக்கவில்லை. அரசாங்கத்திற்கு சங்கடங்களைக் கொடுக்கக் கூடாது என்பது இதற்குப் பின்னாலுள்ள காரணமாக இருக்கலாம். ஏற்கனவே இலங்கையுடனான பொருளாதார ஒப்பந்தங்கள் இந்தியாவிற்குத்தான் சார்பாக உள்ளன என சிங்களப்பத்திரிகைகளில் கட்டுரைகளும் காட்டூன்களும் வெளிவந்திருக்கின்றன. மோடி வருவதற்கு சில நாட்களுக்கு முன்னர் " அத " என்ற பத்திரிகை ஒரு பெரிய மீனின் சதைப்பகுதியை மோடி சாப்பிடுவதாகவும் வால்ப்பகுதியை மட்டும் மைத்திரி சாப்பிடுவதாகவும் காட்டூன் வெளியிட்டது, இதனால் என்னவோ சிங்கள மக்களை குளிரச் செய்யும் வகையில் ரயில் பாதைகளை தரமுயர்த்த 318 மில்லியன் டொலர் கடனுதவியை மோடி அறிவித்தார்.

சிங்கள மக்கள் இந்தியாவிற்கு எதிராகக்கிளம்பக்கூடாதுஎன்பதற்காகத்தான் சம்பூரில் அனல்மின் நிலையத்திற்கான

( 23 ஆம் பக்கம் பார்க்க.)

இன்றைய பெண்

வாரிஸ் டைரி

# போராடுபவள்



-எஸ்.சுஜாதா-

இன்றைய நாகரிக உலகிலும் பெண் உறுப்புச் சிதைப்பு என்ற கொடூரம் ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆசியாவில் பெருமளவில் அரங்கேறி வருகிறது. பெண் குழந்தைகளுக்கு எதிராக நிகழ்த்தப்படும் மிக மோசமான வன்முறை இது. உலகம் முழுவதும் 15 கோடிப் பெண்கள் இந்த வன்முறைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆண்டுதோறும் 30 லட்சம் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். பெண் உறுப்புச் சிதைப்பை எதிர்த்துப் போராடி வருகிறார் வாரிஸ் டைரி. உலகின் சூப்பர் மாடலாகவும் நடிகையாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் நல்லெண்ணத் தூதராகவும் பணியாற்றியவர். 'டெசர்ட் ஃப்ளவர் ஃபவுண்டேஷன்' மூலம் உலகின் பல நாடுகளிலும் பெண் குழந்தைகளைக் காப்பாற்றி வருகிறார்.

வாரிஸ் டைரி, சோமாலியாவில் ஒரு கிராமத்தில் பிறந்தார். வறுமை தாண்டவமாடும் அந்த நாட்டில் மாடு மேய்ப்பது, தண்ணீர் கொண்டு வருவது, வீட்டு வேலைகளைச் செய்வதுதான் பெண் குழந்தைகளின் பணி. மற்ற ஆப்பிரிக்கப் பெண் குழந்தைகளைப் போலவே ஐந்து வயதில் வாரிஸூம் அந்தக் கொடூரத்தைச் சந்திக்க வேண்டியிருந்தது. அம்மாவிடம் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தார். கடவுளின் விருப்பம் இதுதான் என்றார் அம்மா. 'கடவுளுக்கு என்னைப் பிடிக்க வேண்டாம். இப்படிப்பட்ட கடவுளை எனக்கும் பிடிக்கவில்லை' என்ற வாரிஸின் பேச்சு அம்மாவுக்குக் கலக்கத்தை உருவாக்கியது.

மறுநாள் அதிகாலை வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டார் வாரிஸ். பழைய பிளேடால் அவரது உறுப்பு சிதைக்கப்பட்டது. உயிரே போனதுபோல அப்படி ஒரு வலி. ரத்தம் பெருகி ஓடியது. முட்களால் தையல் போட்டுவிட்டுச் சென்றார் மருத்துவச்சி. பல நாட்கள் வலியால் துடித்த வாரிஸ், கொஞ்சம் கொஞ்சமாகத் தேறினார். 13 வயதில் அடுத்த கொடூரம் அவருக்குக் காத்திருந்தது. 60 வயதுக்கு மேற்பட்ட ஓர் ஆணைத் திருமணம் செய்து வைக்க விரும்பினார் வாரிஸின் அப்பா. வாரிஸால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அம்மாவிடம் அழுது புலம்பினார். வீட்டைவிட்டு ஓடி, எங்காவது பிழைத்துக்கொள்ளச் சொல்லிவிட்டார் அம்மா.

## வீட்டில் இருந்து விடுதலை

ஒருநாள் அதிகாலை. பணம், துணி, உணவு எதையும் எடுத்துக்கொள்ளாமல், வெற்றுக் கால்களுடன் ஓட ஆரம்பித்தார் வாரிஸ். எங்கிருந்துதான் அவ்வளவு தைரியமும் தெம்பும் வந்ததென்று தெரியவில்லை. இரவு, பகலாகப் பாலைவனத்தில் ஓடிக்கொண்டே இருந்தார். ஒருநாள் தூங்கி விழித்தபோது, அருகில் ஒரு சிங்கம் அமர்ந்திருந்தது. தன்னுடைய அத்தனை முயற்சிகளும் இந்தச் சிங்கத்துக்கு இரையாவதில் முடியப் போகிறது என்று எண்ணி கண்களை மூடிக்கொண்டார் வாரிஸ். எலும்பும் தோலுமாக இருந்த வாரிஸை உற்றுப்பார்த்து விட்டுச் சென்றுவிட்டது சிங்கம். நகரை நெருங்கும் நேரத்தில் ஒரு வாகன சாரதியால் பலாத்காரம் செய்யப்பட்டார் வாரிஸ். அப்போது விலங்குகளைவிட மனிதர்கள் ஆபத்தானவர்களாகத் தெரிந்தார்கள்.

300 மைல்களைக் கடந்து தன் சகோதரி வீட்டுக்கு வந்து சேர்ந்தார் வாரிஸ். அங்கு மிக மோசமாக நடத்தப்பட்டார். லண்டனில் உள்ள உறவினருக்கு வீட்டு வேலை செய்வதற்காக ஆட்கள் தேடிக் கொண்டிருந்தபோது, தானே வருவதாகச் சொன்னார் வாரிஸ். அங்கு சில ஆண்டுகள் பணிபுரிந்த நிலையில் உறவினர் மீண்டும் சோமாலியாவுக்கே சென்றுவிட்டார். வாரிஸ் பாஸ்போர்ட் இல்லை என்று கூறி அங்கேயே தங்கிவிட்டார். மெக்டொனால்ட் உணவகத்தில் வேலை செய்துகொண்டு, ஆங்கிலம் கற்றுக்கொண்டார். அப்போது டெரென்ஸ் டொனொவன் என்ற புகழ்பெற்ற புகைப்படக்காரரிடமிருந்து அழைப்பு வந்தது. வருமானம் இல்லாமல் லண்டனில் வாழ முடியாது. தன் அம்மாவுக்கும் பணம் அனுப்ப வேண்டும் என்ற காரணங்களால் அழைப்பை ஏற்றுக்கொண்டார் வாரிஸ். 1987-ம் ஆண்டு புகழ்பெற்ற பைரலி காலண்டரில் அவரது புகைப்படம் வெளியானது. அதிலிருந்து வாரிஸின் மாடலிங் பயணம் ஆரம்பித்தது. லீவைஸ், ரெவ்லான், சானல் போன்ற உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் வாரிஸ் வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டே இருந்தன. விரைவில் உலகின் சூப்பர் மாடலாக மாறினார். புகழ்பெற்ற ஃபேஷன் பத்திரிகைகளை அலங்கரித்தார். ஜேம்ஸ்பாண்ட் திரைப்படத்திலும் நடித்தார்.

## சிதைக்கப்படும் பெண் குழந்தைகள்

கனவிலும் எதிர்பார்க்காத வசதியான லண்டன் வாழ்க்கை, உலகப் புகழ் எல்லாம் கிடைத்தாலும் வாரிஸால் பெண் உறுப்புச் சிதைப்பை மறக்க முடியவில்லை. ஐந்து வயதில் ஏற்பட்ட கொடூரம் ஒவ்வோர் இரவும் அவரது தூக்கத்தைக் கலைத்தது. புகைப்படங்களில் அவர் புன்னகை செய்தாலும் அதற்குப் பின்னால் வார்த்தைகளில் விவரிக்க முடியாத வலி நிறைந்திருந்தது.

'ஐந்து வயதில் நிகழ்த்தப்பட்ட அந்த வன்முறையின் பாதிப்பு உயிர் உள்ள வரை போகாது. ஒவ்வொரு முறை சிறுநீர் கழிக்கும்போதும் உயிர் போய்விடும். மாதவிடாய் நேரத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. உறுப்புச் சிதைக்கப்பட்ட நான்கு குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் நோய்த் தொற்றால் மரணத்தைச் சந்தித்துவிடுகின்றன. என் சகோதரி கூட மரணம் அடைந்துவிட்டாள். கன்னித்தன்மையைப் பாதுகாப்பதற்காக மதத்தின் பெயரால் இந்த வன்முறை நிகழ்த்தப்படுகிறது. திருமணத்தின்போதுதான் தையலை வெட்டிவிடுவார்கள். குடும்பம் நடத்துவதும் குழந்தை பிறப்பும் கஷ்டம்.

**கனவிலும் எதிர்பார்க்காத வசதியான லண்டன் வாழ்க்கை, உலகப் புகழ் எல்லாம் கிடைத்தாலும் வாரிஸால் பெண் உறுப்புச் சிதைப்பை மறக்கமுடியவில்லை. ஐந்து வயதில் ஏற்பட்ட கொடூரம் ஒவ்வோர் இரவும் அவரது தூக்கத்தைக் கலைத்தது. புகைப்படங்களில் அவர் புன்னகை செய்தாலும் அதற்குப் பின்னால் வார்த்தைகளில் விவரிக்க முடியாத வலி நிறைந்திருந்தது.**

தாயும் குழந்தையும் இறந்துவிடும் அபாயம்அதிகம். ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளில் வசிப்பவர்கள் மட்டுமில்லை அங்கிருந்து வந்து ஐரோப்பாவில் வசிப்பவர்கள்கூட எவ்வளவு படித்திருந்தாலும் தங்கள் பெண் குழந்தைகளுக்கு இதைச் செய்யாமல் விடுவதில்லை. ' மதம் என்று வந்துவிட்டால் அங்கே கேள்விக்கே இடமளிப்பதில்லை' என்கிறார் வாரிஸ்.

1999-ம் ஆண்டு முதல் முறையாகத் தன் வாழ்க்கையையும் வலியையும் வெளியே சொன்னார் வாரிஸ். அதற்காக வாரிஸ் ஃபவுண்டேஷன் ஒன்றையும் ஆரம்பித்தார். பின்னர் அது 'டெசர்ட் ஃபவுண்டேஷன்' ஆனது. இந்தப் பணிகளுக்காக ஐக்கிய நாடுகள் சபை வாரிஸுக்குச் சிறப்பு நல்லெண்ணத் தூதுவர் பொறுப்பை அளித்தது. ஐந்து ஆண்டுகள் அந்தப் பொறுப்பைத் திறம்படச் செய்தார் வாரிஸ்.

## மாற்றம் சாத்தியமே

சூடான், எத்தியோப்பியா, கென்யா, சோமாலியா, பெர்லின், நெதர்லாந்து, ஸ்விட்சர்லாந்து போன்ற ஏராளமான நாடுகளில் வாரிஸின் ஃபவுண்டேஷன் இயங்கி வருகிறது. இவற்றின் மூலம் பெண் உறுப்புச் சிதைப்பைத் தடுக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. பெண் குழந்தைகளைக் காப்பாற்றி அவர்களுக்குக் கல்வி அளிக்கப்படுகிறது.

தன்னுடைய வாழ்க்கையைப் 'பாலைவனப் பூ' என்ற பெயரில் புத்தகமாக எழுதினார் வாரிஸ். 1 கோடியே 10 லட்சம் பிரதிகள் விற்றுச் சாதனை படைத்தது. பின்னர் திரைப்படமாகவும் வெளிவந்து உலகம் முழுவதும் பரவலான கவனத்தை ஈர்த்தது.

ஆண்-பெண் சமத்துவம், பெண்ணுரிமை, பெண்கல்வி, பெண்ஆரோக்கியம், மனித உரிமைகள் போன்ற வற்றுக்காகப்போராடும்வாரிஸ்டைரி, நான்கு குழந்தைகளுடன் போலந்தில் வசித்து வருகிறார்.

'என் வாழ்நாளில் ஒரு குழந்தைகூடப் பெண் உறுப்புச் சிதைப்பு என்ற வன்முறைக்கு இலக்காகவில்லை என்ற நிலையை எட்டவேண்டும் என்பதே என் லட்சியம். ஆனால் ஆப்பிரிக்க நாடுகளில் அரசாங்கங்களின் உதவி போதுமானதாக இல்லை. காலம் காலமாகக் கடைப்பிடித்துவரும் மத நம்பிக்கையைத் தகர்த்தெறிவது அவ்வளவு எளிதான விஷயமல்ல. பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்குப் பெண்கள் காரணமல்ல. அதனால் ஆண்களிடம்தான் புரிதலை ஏற்படுத்த வேண்டும். இரண்டு ஆண் குழந்தைகளின் தாயான நான், என் மகன்களிடம் தெளிவை உண்டாக்கிவிட்டேன். நீங்களும் அதைச் செய்தால் போதும். தொடர்ந்து போராடுவோம். பெண் குழந்தைகளுக்கான வன்முறைகளற்ற சமூகத்தை உருவாக்குவோம்' என்கிறார் வாரிஸ் டைரி.

# கர்ப்பத்தின் ஆரம்பத்தில் வாந்திக்குக் காரணம் ஓமோன் மாற்றங்களே

- டாக்டர் எம்.கே.முருகானந்தன்-

கர்ப்பமாயிருக்கும் போது உங்கள் உடலில் சில சுரப்பிகளின் (ஓமோன்களின் - hormone) தாக்கத்தாலும், உடலில் ஏற்படும் பல மாற்றங்களாலும், உங்களுக்குப் பல சிறு பிரச்சினைகளோ அன்றி அசௌகரியங்களோ ஏற்படலாம். இவைகளை ஏதோ கடுமையான நோய்கள் என்று எண்ணி மருள வேண்டியதில்லை. அல்லது இவை உங்களுக்கு மாத்திரம்தான் ஏற்பட்டிருக்கின்றன எனப் பயப்பட வேண்டியதும் இல்லை.

இவை அனேகமான கர்ப்பிணிகளுக்கு சாதாரணமாக ஏற்படுபவை. இவற்றை நிவர்த்திக்க பெரும்பாலும் மருந்துகளேதும் தேவைப்படாது. சாதாரண நடைமுறை வைத்தியங்களே போதுமானதாய் இருக்கும்.

அவற்றைப் பற்றி இனிப் பார்ப்போமா?

## ஓங்காளம், வாந்தி

கர்ப்பத்தின் ஆரம்ப காலத்தில் உங்களுக்கு உணவில் வெறுப்பு, ஓங்காளம், வாந்தி போன்ற குணங்கள் ஏற்படலாம். இவை பொதுவாக ஆறு முதல் பன்னிரெண்டு வாரம் வரை நீடிக்கலாம்.

முன்பு கூறியபடி ஓமோன் மாற்றங்களால் இவை ஏற்படுகின்றன. ஆயினும் பெற்றோர்களினதும், உறவினர்களினதும் அதீத கரிசனையால் இவை மேலும் அதிகரிக்கக்கூடும். எந்தவித மருத்துவமுமின்றி இவை தாமாகவே மறைந்துவிடும். இவை மிகக் கடுமையாக இருந்தால் அல்லது நீண்ட காலத்திற்குத் தொடர்ந்தால் உங்கள் வைத்தியரின் ஆலோனையைப் பெறுங்கள். சிலர் தமது கருவில் ஏற்பட்ட ஏதோ ஒரு சிக்கலால்தான் இது ஏற்படுகிறது என்று எண்ணிப் பயப்படுகிறார்கள். இதில் எந்தவித உண்மையுமில்லை.

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பொருட்களுக்கு அல்லது மணத்திற்கு ஓங்காளம் ஏற்படலாம். சிலருக்கு எண்ணெய்ப் பதார்த்த உணவுகளை உண்டால் அல்லது மணந்தால் கூட வாந்தி வரலாம். சிலருக்கு ஊறுகாய்க்குக் கூட ஏற்படுகிறது. வேறு சிலருக்கு சந்தன சோப்பின் மணத்திற்கும் ஏற்படலாம்.

எனவே உங்களுக்கு எவை எவை குமட்டலைக் கொண்டு வரும் என்று நாங்கள் சொல்ல முடியாது. சில நாட்களுக்குள் எந்த வகையான உணவிற்கு அல்லது எந்த மணத்திற்கு உங்களுக்கு வாந்திவரும் என்பதை நீங்களே புரிந்து கொள்வீர்கள் அந்த வகையான உணவுகளை உண்பதையும், அந்த மணங்களை நுகர வேண்டிய சந்தர்ப்பங்களையும் தவிருங்கள்.

இந்நேரத்தில் நீங்கள் உணவு சமைப்பதைத் தவிர்த்து வேறு யாரிடமாவது அப்பொறுப்பை அளிப்பது பொருத்தமாக இருக்கும். நீங்களே சமைப்பதைத் தவிர்க்க முடியாதவிடத்து உங்களுக்கு வாந்தியை ஏற்படுத்தாததும் மற்றவர்களுக்கு ஏற்றதுமான உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து சமையுங்கள்.

சில நேரங்களில் குளிர்ந்த நீர் (உ-ம்: ஐஸ் கலந்தது ) அல்லது ஐஸ் கலந்த தோடம்பழம் அல்லது தேசிக்காய் சாறு குடித்தால் வாந்தி குறையக்கூடும்.

அத்துடன் ஒரே நேரத்தில் அதிகம் உண்ணாது உணவைப் பிரித்து இடையிடையே உண்பது உதவக்கூடும். ஒரு நாளைக்கு மூன்றுவேளை தான் உண்ண வேண்டும் என்ற கட்டுப்பாட்டை உதறித் தள்ளிவிட்டு அடிக்கடி சிறிதளவு உணவு உண்பதும், வாந்தியை நிறுத்த உங்களுக்குப் பெரிதும் உதவக்கூடும்.

காலையில் விழித்தவுடன் சடுதியாக எழும்புவதும் சிலருக்கு ஓங்காளம், வாந்தி ஆகியவற்றை ஏற்படுத்துவதாக நம்பப் படுகின்றது. காலையில் வெறும் வயிற்றில் கோப்பி, தேநீர் போன்றவற்றைப் பருகுவதும் சிலருக்கு இவற்றை ஏற்படுத்துவதாகத் தெரிகிறது. எனவே காலையில் விழித்தவுடன் எழுந்து நடமாடாமல், படுக்கையில் இருந்தபடியே ஓரிரு பிஸ்கற்றையோ, ரஸ்க்கையோ உண்பதும் உங்களுக்கு வாந்தி ஏற்படாமல் தடுக்கக்கூடும்.

எண்ணெய், கொழுப்புச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட கனதியான உணவு வகைகள் வாந்தியை அதிகரிக்கக் கூடுமானதால் அவற்றைத் தவிருங்கள்.

ஆனால் பல கர்ப்பிணிப் பெண்கள் புரதச்சத்து நிறைந்த சிற்றுண்டிகளை விரும்பி உண்பது அவதானிக்கப்பட்டுள்ளது. மேலே சொல்லப்பட்டவையாவும் பொதுவான கருத்துக்கள் தான். இவை எல்லாம் உங்களுக்குப் பொருந்தும் என்று கூற முடியாது. அனுபவரீதியாக உங்களுக்கு ஏற்படும் விருப்பு, வெறுப்புக்களைக் கருத்திற் கொண்டு அதற்கேற்றவாறு உங்கள் உணவுகளைத் தேர்ந்து எடுங்கள்.

## எச்சில் ஊறல்

கர்ப்பத்தின் ஆரம்ப காலத்தில் பிரட்டு சத்தியுடன் எச்சிலூறுவதும், எரிச்சலூட்டும் ஒரு பிரச்சினையாக உங்களுக்கு இருக்கக்கூடும். உண்மையிலேயே அதிக எச்சில் ஊறுவதால் ஏற்படலாம். அல்லது உணவிற்கு விருப்பமின்மை ஏற்படுவது போல, எச்சிலை விழுங்க அருவருப்பு ஏற்பட்டு, அதை அடிக்கடி துப்புவதால் அதிக எச்சில் ஊறுவது போன்ற பிரமையைக் கொடுக்கலாம்.

இதுவும் எந்தவித வைத்தியமும் இன்றிச் சில நாட்களில் தானாகவே நின்றுவிடும் .

வளரும் கர்பப்பை சிறு நீர்ப்பையில் அமுக்குவதால் சிறு நீர்ப்பை நிறைந்துவிட்டது போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்பட்டு, அதனால் அடிக்கடி சிறு நீர் கழிக்கவேண்டும் போலிருக்கும்.

கர்ப்பகாலம் முழுவதும் இந்த உணர்வு ஏற்படக் கூடுமாயினும் கர்ப்ப காலத்தில் முதல் 12 வாரங்களிலும் கடைசி 4 வாரங்களிலும் இது மிக அதிகமாக இருக்கும். இதை நோய் என்று எண்ண வேண்டாம். மருந்தும் தேவைப்படாது.

ஆயினும் சிறுநீர் கழிக்கும் போது எரிவு ஏற்பட்டால் அல்லலு சிறு நீருடன் இரத்தம் கலந்து போனால் அல்லது காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரிடம் ஆலோசனை பெறுங்கள். ஏனென்றால் அவை சிறுநீர்ப்பையில் கிருமி தொற்றுவதனால் ஏற்படும் அறிகுறிகளாக இருக்கலாம். அப்படியாயின் வைத்தியர் உங்களுக்குப் பொருத்தமான மருந்துகளைத் தருவார்.


## தலைச்சுற்று

கர்ப்பமாயிருக்கும் காலத்தில் உங்களுக்கு அடிக்கடி ஏற்படக்கூடிய மற்றுமொரு அசௌகரியம் தான் தலைச் சுற்று.

படுத்திருந்துவிட்டு திடீரென படுக்கையில் இருந்து எழும்புவதினாலும் நீண்ட நேரத்தில் ஒரே இடத்தில் நின்றாலும் இது ஏற்படலாம். எனவே நீண்ட நேரம் நிற்பதையும், திடீரென எழும்புவதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.


(தொடரும்.....)

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பொருட்களுக்கு அல்லது மனைத்திற்கு ஓங்காளம் ஏற்படலாம். சிலருக்கு எண்ணெய்ப் பதார்த்த உணவு களை உண்டால் அல்லது மனைந்தால் கூட வாந்தி வரலாம். சிலருக்கு ஊறு காய்க்குக் கூட ஏற்படுகிறது. வேறு சிலருக்கு சந்தன சோப்பின் மனைத்திற்கும் ஏற்படலாம்.



தாயாகப் போகும் உங்களுக்கு – 5

# மாத்தறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலிற்குள் தமிழர்கள் அனுமதிக்கப்படுவதில்லை





**நல்லவடி தர்மராஜா**

கே.சன்ஜிவ்
இது நம் தேசத்திற்காக
தமிழில் - நட்டாஷா ராஜ்குமார்
நன்றி - ராவயா

> 1983ம் ஆண்டு கறுப்பு ஜுலையின் பொழுது இக்கோவில் முழுமையாக அழிக்கப்பட்டது. இங்கிருந்த பல தமிழர்கள் இந்தியாவிற்கு புலம் பெயர்ந்து சென்றனர். சிலர் யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்தனர். அதன் பின்னர் இக்கோவில் வரலாற்றில் சுபகாலம் பதிவாக வில்லையென மாத்தறையைச் சேர்ந்த எஸ். மாரியம்மா கூறினார். தற்பொழுது அவர் முதுமை நிலையினை அடைந்துள்ளார். இக்கோவிலின் முக்கிய மற்றும் பெறுமதி மிக்க சொத்துக்களை மற்றும் பொருட்களை சிங்களவர்கள் திருடிச்சென்ற கதையை மிகவும் ஆழ்ந்த மனக்குமுறலுடனேயே எமக்கு விபரித்தார்.

**மா**த்தறை நகர மத்தியில் வைத்தியர் சுகீஷ்வர விக்கிரமசிங்க பாதையில் திரும்பி சிறிது தூரம் செல்கையில் சுமார் நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த முருகன் கோவில் நம் கண்களிற்குத் தென்படும். இந்தக் கோவிலிற்குள் சென்றவுடனேயே நவீன முறையில் கட்டப்பட்ட பூஜை அறையே எம் கண்களை அலங்கரிக்கின்றது. கோவில் நுழைவாயிலிலுள்ள கண்ணாடி மாளிகையில் விஜயன்- குவேனியின் உருவச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இச்சிலைகளைக் கண்டவுடனேயே தற்சமயம் விஜயன் - குவேனியையும் வழிபட ஆரம்பித்து விட்டார்களோ என எண்ணத் தோன்றுகின்றது. நாம் மேற்கொண்ட விசாரணைகளின் பயனாக 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த கோவிலை மாத்தறை மாவட்ட உப பொலிஸ் அத்தியட்சகரான சந்தன விக்கிரமரட்ண நீண்டகாலம் உழைத்து நவீனமயப்படுத்தியதாக எமக்கு அறியக்கிடைத்தது.

இந்த 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவிலிற்குள் தமிழ் மக்கள் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இன்று சிங்களவர்களே இக்கோவிலின் உரிமையாளர்கள். சிங்கள பூசகரே இக்கோவிலில் பூசை செய்கின்றார். இக்கோவில் இன்று



முழுமையாக சிங்கள மயப்படுத்தப் பட்டுள்ளது. மாத்தறை நகரில் வாழும் தமிழ் மக்கள் இக்கோவிலில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி கேட்டபொழுது அது வழங்கப்படவில்லை.

## கோவிலின் வரலாறு

இக்கோவிலின் வரலாறு 1910ம் ஆண்டு வரையில் நீண்டு செல்கின்றது. 1905 ஆம் ஆண்டு காலி புகையிரத பாதையினை விஸ்தரித்தபொழுது வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து பெருந்தொகையான கதிர்காம யாத்திரிகர்கள் மாத்தறை நகரை நோக்கி வருகை தந்தார்கள். இப்பக்தர்களின் பயணக் களைப்பை போக்கவும், ஓய்வெடுக்கவும் இது உதவியது. 1910 ஆம் ஆண்டு இவ்விடம் யாத்திரிகர்கள் தங்கும் மடமாகவே காணப்பட்டது.

முன்னாள் சட்டசபை உறுப்பினர் அம்பலவாணர் கனகசபை அவர்களே இக்கோவிலின் ஆரம்பகால உரிமையாளராவார். இவரது காலத்தில் கோவில் மற்றும் தங்குமடம் ஆகியனவற்றை ஒரு நிர்வாகக் குழுவே நிர்வகித்தது. காலத்திற்குக் காலம் கோவிலின் உரிமையும் கைமாறியது. 1951 ஆம் ஆண்டு இல: 3537 சொத்துரிமை பத்திரத்தின் அடிப்படையில் நாகரத்தினம் பிள்ளை கிருஷ்ணதாஸ் கோவிலின் உரிமையாளராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இவரது காலப்பகுதியில் இக்கோவிலின் காணியானது புகையிரதப் பாதை நுழைவாயில் வரை விஸ்தரிக்கப்பட்டது. 1910 ம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட கோவிலின் அபிவிருத்திப் பணிகள் 1977 மற்றும் 1983 ம் ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டது. 1983ம் ஆண்டு கறுப்பு ஜுலை தினத்தன்று இக்கோவில் முற்றும் முழுதாக அழிக்கப்பட்டதாக அக்காலம் முதல் இன்று வரை மாத்தறை நகரில் வாழும் தமிழ் மக்கள் கூறுகின்றார்கள்.

## கோவிலைப் பற்றிய நினைவுகள்

நான் எனது சிறுபராயம் முதல் இக்கோவிலிற்கே செல்கிறேன். அக்காலத்தில் நாராயணன் என்றழைக்கப்படும் மலையாள குருக்கள் ஒருவர் இருந்தார். 1958 ஆம் ஆண்டு கிருஷ்ணதாஸன் ஐயா அவர்கள் இக்கோவிலை விஸ்தரித்து கும்பாபிஷேகத்தினை நடாத்தினார். அக்காலத்தில் பூமாலைகள் கோர்த்து இறைவனுக்கு சூடுவதே எங்கள் பணி. அன்றைய நாட்களில் 100ற்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் மாத்தறையில் வாழ்ந்தனர். அவர்கள் தினமும் இக்கோவிலிற்கே வருகை தருவார்கள். கதிர்காம யாத்திரைக்குச் செல்லும் பக்தர்களும் இக்கோவிலிற்கு வருகை தந்தமையினால் இக்கோவில் மிகவும் புகழ்பெற்று விளங்கியது.

1983ம் ஆண்டு கறுப்பு ஜுலையின் பொழுது இக்கோவில் முழுமையாக அழிக்கப்பட்டது. இங்கிருந்த பல தமிழர்கள் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து சென்றனர். சிலர் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்தனர். அதன் பின்னர் இக்கோவில் வரலாற்றில் சுபகாலம் பதிவாகவில்லையென மாத்தறையைச் சேர்ந்த எஸ். மாரியம்மா கூறினார். தற்பொழுது அவர் முதுமை நிலையினை அடைந்துள்ளார். இக்கோவிலின் முக்கிய மற்றும் பெறுமதி மிக்க சொத்துக்களை மற்றும் பொருட்களை சிங்களவர்கள் திருடிச்சென்ற கதையை மிகவும் ஆழ்ந்த மனக்குமுறலுடனேயே எமக்கு விபரித்தார்.

இவ்வாறு சிதைவடைந்த இக்கோவிலிற்கு அக்காலத்தில் அமைச்சராக இருந்த சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் தென்இந்தியாவிலிருந்து முருகன் சிலையொன்றினை தருவித்து கும்பாபிஷேகம் நிகழ்வொன்றினையும் நடாத்தியதாக முன்னோர்கள் மனமகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். ஆனால் இவையொன்றையும் இன்று இக்கோவிலில் காண இயலாது.

கம்உதாவ காலத்தில் அபிவிருத்தியடைந்த இக்கோவிலிற்கு பிற்காலத்தில் பீட்டர் சில்வா எனும் மாத்தறையிலுள்ள சண்டியனின் ஆளுகைக்குட்பட்டது. பீட்டர் என்ற சண்டியன் பத்மன் என்பவரை இக்கோயிலின் உரிமையாளராக நியமித்தார். இவரது நிர்வாக காலத்தில் மீண்டும் ஒருமுறை தமிழ் - சிங்கள மக்கள் கோவிலுக்குள் செல்வது தடைசெய்யப்பட்டதாக தற்போது கோவிலுக்கு அண்மையில் வாழும் மக்கள் குறிப்பிடுகின்றார்கள். பத்மனிற்கு பின்னர் கோவில் நிர்வாக நடவடிக்கைகள் ஜி.எச்.தர்மதாச அவர்களினால் முன்னெடுக்கப்பட்டது. இக்கோவிலின் உரிமையாளரிற்கான சட்ட ஆவணங்கள் தன்னிடம் இருப்பதாகவும் இவரால் கூறப்பட்டது. பிற்காலத்தில் இவர் தன்னுடைய மனைவி மற்றும் பிள்ளைகள் சகிதம் கோவில் பூமியில் குடியேறி கோவிலின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதாவது கோவிலுக்கு வரும் பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்குப் பணத்தை அறவிடுதல், கோவில் வளாகத்தில் அமைந்துள்ள கடைகளிலிருந்து வாடகை அறவிடுதல் போன்ற நடவடிக்கைகள் மூலமாக பெருந்தொகை பணத்தை ஈட்டினார். தற்போது தர்மதாச அவர்களின் மகனே இக்கோவிலின் பூசகராக உள்ளார். தற்பொழுது தோன்றியுள்ள அனைத்துப் பிரச்சினைகளிற்கும் பிரதான காரணி இந்நபரே.

## 2001

2001ம் ஆண்டு சிங்கள - தமிழ் பக்தர்கள் ஒன்றிணைந்து கோவிலிற்கு புதிய குருக்கள் ஒருவரை வரவழைத்தனர். அப்போதைய மாத்தறை பொலிஸ் அதிகாரியும் தற்போதைய உப பொலிஸ் அத்தியட்சகருமான சந்தன விக்கிரமரட்ண மற்றும் கோவில் உரிமையாளரான தர்மதாச அவர்களின் ஆசீர்வாதத்துடன் புதிய குருக்கள் வரவேற்கப்பட்டார். 2001 ஆம் ஆண்டு புதிய குருக்களின் வருகையுடன் சிங்கள - தமிழ் பக்தர்கள் மீண்டும் கோவிலில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். புதிய குருக்கள் தலைமையில் கோவில் திருவிழாவும் கோலாகலமாக நடந்தேறியது.

எனது பெயர் பெரிய அண்ணன் நல்லவடி தர்மராஜா. 2001ம் ஆண்டு மகா சிவராத்திரி தினத்தன்று என்னை இங்கே அழைத்து வந்தார்கள். எனது வருகையோடு மாத்தறை வாழ் தமிழ் மக்கள் மீண்டும் கோவிலுக்கு வருகைத்தர ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக இக்கோவில் அபிவிருத்தியடைந்தது. சுமார் 4000 சிங்கள - தமிழ் மக்கள் நிரந்தரமாக கோவிலுக்கு வருகை தருவார்கள். நாங்களும் வருடாந்தம் உற்சவங்களை நடாத்தினோம். எனது வருகையின் பின்னர் கோவிலின் அபிவிருத்தி மற்றும் மக்கள் என் மீது கொண்ட அதிக நம்பிக்கையின் காரணமாக கோவிலின் உரிமையாளரென கூறிக்கொண்டிருந்த தர்மதாச அவர்கள் என் மீது சினங்கொண்டார். கோவில் உற்சவத்தைநிறுத்துவதற்குநீதிமன்றஉதவியை நாடினார். ஒருசில சந்தர்ப்பங்களில் அடியாட்களைக் கொண்டு என்னைத் தாக்கினார். மாத்தறை மாவட்ட நீதிமன்றில் எனக்கெதிராக வழக்கு தாக்கல் செய்து நான் கோவிலில் பூசை செய்வதனையும் கோவிலுக்குள் செல்வதனையும் தடைசெய்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சி மாற்றத்தினால் தமிழ் என நான் நினைக்கவில்லை

தஞ்சாவூர் மாவட்டத்தின் தும்பத்திக் கோட்டை எனும் சிற்றூரில் பிறந்த ஓவியர் புகழேந்தி குடந்தை கவின் கலைக் கல்லூரியில் வண்ண ஓவியத்தில் இளங்கலைப் பட்டத்தையும், ஐதராபாத் மத்திய பல்கலைக்கழகத்தில் வண்ண ஓவியத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றவர். சென்னை கவின் கலைக் கல்லூரியில் தற்போது ஓவியப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.


1983 ஆம் ஆண்டு கல்லூரி மாணவனாக இருந்தபோது ஈழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். யுத்த நிறுத்த உடன்படிக்கை காலத்தில் ஒன்பது தடவை தமிழர் தாயகத்திற்கு வருகை தந்து போராளிகளுக்கும், மாணவர்களுக்கும் ஓவியப் பயிற்சியினை வழங்கியிருந்தார். தலைவர் பிரபாகரனுடனும் நெருங்கிய உறவினைக்கொண்டிருந்தார். ஈழப் போராட்டம் தொடர்பாக நூற்றுக்கு மேற்பட்ட ஓவியங்களை வரைந்து உலகெல்லாம் கொண்டு சென்றவர். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஓவியப்போராளி என இவரைக் கூறலாம்.

**ஈழத் தமிழர்களுடன் உங்கள் உறவு, நெருக்கம் பற்றிச் சொல்லுங்கள்?**

தமிழக மக்களுக்கு என்னைப் பற்றித் தெரிந்ததை விட ஈழ மக்களுக்குத் தெரிந்தது அதிகம். அந்த வகையில் அவர்களின் உணர்வோடு கலந்து வாழ்கிறவன். 1983 ஆம் ஆண்டில் இருந்து ஈழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்ந்து இயங்கி வருகின்றேன். என்னுடைய ஓவியக் கண்காட்சி ஈழத்தில் 15 க்கும் மேற்பட்ட இடங்களில் நடாத்தப்பட்டது. 2005 ஆம் ஆண்டு ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு நிதி சேகரிக்கும் வகையில் 100 ஓவியங்கள் வரையப்பட்டு அது உலகம் முழுவதும் காட்சிப்படுத்தப்பட்டன. இதனை முக்கியமான ஒன்றாக நான் கருதுகின்றேன். தொடர்ந்தும் அதற்கான தேவைகள் இருந்து கொண்டே இருக்கின்றன. எனது ஈழ விடுதலைப் பயணத்தில் ஒவ்வொரு காலகட்டமும் ஒவ்வொரு மைல் கல்லாகவே இருந்து வருகின்றது. 2005 இல் மாதிரி நாடு ஈழத்தில் உருவாக்கப்பட்டபோது, அதன் கட்டமைப்பில் பங்கேற்றவன் என்கிற வகையில் இனி அதற்கு அழிவே இல்லை என்று நான் கருதினேன். ஆனால், மீண்டும் பேரழிவை எதிர்நோக்கினோம். விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்தும் நான் பயணிக்கிறவன்.

**தலைவரோடு, ஈழ மக்களோடு உங்களுக்கு இருந்த உறவுகள்?**

தலைவரோடு எனக்கு மிக நெருங்கிய உறவு இருந்தது. இதனைப் போராட்டத்தில் மிக முக்கியமான ஒன்றாக நான் கருதுகின்றேன். பொதுவாக இந்தப் போராட்டத்தில் மக்கள் பட்ட துன்பங்களும் துயரங்களும் இன்னல்களும் தான் இந்தப் போராட்டத்தின்பால் என்னை இழுத்தது. தலைவரைத் தெரிவதற்கு முன் இந்தப் போராட்டத்தில் அந்த மக்கள் பட்ட வேதனைகளும், துன்பங்களும் தான் என் கண்களுக்குத் தெரிந்தன. என் இதயத்தைத் தாக்கியதும் அது தான். இதன் பிறகு தான் இந்தப் போராட்டத்தின் தேவை, இது எவ்வளவு முக்கியம் என்பதனை உணர்ந்தேன். இந்தப் போராட்டத்தை




வழிநடாத்த வேண்டிய தலைவர்கள் பல பேர் அந்தக் காலகட்டத்தில் இருந்தார்கள். பிரபாகரன் இருந்தார். பாலகுமார் இருந்தார். பத்மநாபா இருந்தார், உமாமகேஸ்வரன் இருந்தார். இதில் எனக்கு பிரபாகரனையும் பாலகுமாரையும் மிகவும் பிடிக்கும். இவர்கள் இருவரையும் தமிழகத்தில் இருக்கும் போதே மிகவும் பிடிக்கும். அதில் ரொம்பவே நேசித்தது தலைவர் பிரபாகரனைத் தான். இந்தப் போராட்டத்தில் தொடர்ச்சியான பங்களிப்பும், ஒரு கலைஞனாக நான் செய்த செயல்களும் தலைவருக்கு மிகவும் பிடித்திருந்தது. இதனால்தான் மிக நெருக்கமாக நான் அவரோடு இருக்கமுடிந்தது. பின்னாட்களில் பல பணிகளையும் அவர் சொல்லி நான் செய்ய முடிந்தது. மகத்தான ஒரு மனிதர், தலைவர். அவரோடு இணைந்து பணியாற்றிய பாக்கியம் எனக்குக் கிடைத்திருப்பது எனக்கு மிகப்பெரிய வரலாற்றுக் கொடுப்பினை இருந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

**ஈழத்துக்குச் சென்று போராளிகளுக்கு ஓவியப் பயிற்சி கொடுத்துள்ளீர்கள். நீங்கள் அவர்களிடம் கண்ட விடயங்கள் அல்லது கற்றுக் கொண்ட விடயங்கள் என்னென்ன?**

நான் தலைவருடன் பல்வேறு விடயங்கள் குறித்து விவாதித்துக் கொண்டிருக்கும் போது, போராளிகளுக்கு ஓவியப் பயிற்சி கொடுக்கவேண்டும் என்று உள்ளுக்குள் எனக்கு ஒரு ஆசை இருந்தது. எவ்வளவோ விடயங்கள் பேசியிருந்தும் தலைவர் ஏதும் நினைத்து விடுவாரோ என்று இது குறித்துப் பேசாமல் இருந்து விட்டேன். தமிழீழக் கல்விப் பொறுப்பாளர் அவர்களின் வழிகாட்டலில் பள்ளி ஓவிய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஓவியப் பயிலரங்கு நடாத்தப்பட்டது. அப்படி நடாத்திக் கொண்டிருந்த நேரத்தில் இடையில் ஒருநாள் தலைவர் கூப்பிட்டார். பாடசாலைகளில் ஓவியம் சொல்லிக் கொடுப்பது நல்ல விடயம் தான். மாணவர்கள், ஆசிரியர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதை அவர்கள் சொந்தத் தேவைக்கு பயன்படுத்திக் கொள்வார்கள். போராளிகளுக்குச் சொல்லிக் கொடுத்தால் நாட்டுக்குப் பயன்படும் என்றார்.

மீண்டும் தலைவர் சொன்னார், லியானோ டாவின்சி ஓவியராக இருந்ததனால் தான் ஹெலி எப்படி இருக்கவேண்டும் என வரைந்து காட்டி அதன் உருவாக்கத்திற்குத் துணை புரிந்தார். அவர் அப்படிச் சொன்னதும் நான் வியந்து போனேன். இது ஓவியர்கள் பலபேர்களுக்கு கூடத் தெரியாது. எந்தத் துறைக்கும் அடிப்படை ஓவியம் தான் என்று சொன்னார். ஓவியப் பயிற்சியை போராளிகளுக்கு நடத்தனும் என்று சொன்ன உடன் எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி. சாதாரணமாக நான்கு ஆண்டுகள் சொல்லிக் கொடுக்க வேண்டிய விடயத்தை நான்கு மாதங்களுக்குள் அடக்கி ஒரு புதிய பாடத்திட்டத்தை உருவாக்கினேன். பல்வேறு நிலைகளில் இருந்து வந்த நாற்பதுக்கும் மேற்பட்ட போராளிகளுக்கும், தளபதிகளுக்கும் ஓவியம் வரையக் கற்றுக் கொடுத்தேன். தலைமைக் கழகத்தால் அறிவிப்புச் செய்யப்பட்டு தலைவரின் கீழ் நேரடியாக ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி அது. புலிகளின் ஒவ்வொரு படைத்துறைக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டு யார் யாருக்கெல்லாம் ஓவியத்தில் ஈடுபாடு இருக்கின்றதோ அவர்களை பயிற்சியில் பங்கேற்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. என்னுடைய பணியில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் அது.



**குறிப்பிட்ட ஒரு போராளியிடம் நீங்கள் கண்டு வியந்தது?**

துப்பாக்கியைக் கையில் பிடித்திருப்பவர்களின் கையில் தூரிகையைக் கொடுக்கும் போது அது பன்மடங்கு ஆற்றலுடன் வெளிப்படுகின்றது. என்னிடம் பயின்ற போராளி ஒருவர் களத்துக்குப் போக முதல் ஓவியம் ஒன்றை வரைந்து பொறுப்பாளரிடம் எனக்குக் கொடுக்கச் சொல்லி சென்றுவிட்டார். ஆனால், அவர் மீள வரவில்லை. அந்தத் துயரம் இன்னும் என்னை அழுத்துகின்றது.

**ஈழப் போராட்டத்துக்கு உங்களின் ஓவியங்களின் பங்கு?**

ஓவியம் மூலமா இந்தப் போராட்டத்துக்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்ததன் விளைவு தான் ஈழ மக்களின் துயரங்களை ஓவியம் வழியாக உலகின் பார்வைக்குக் கொண்டு செல்கின்றது. 1983 இனக்கலவரத்தில் தமிழ் மக்கள் கொல்லப்


➡

# மக்களுக்கு எதுவும் கிடைக்கும்

## ஓவியப் போராளி புகழேந்தியுடன் ஒரு நேர்காணல்


நேர்கண்டவர் :- செல்வநாயகம் கிரிசாந்

பட்ட சம்பவத்தை ஓவியங்களாக வரைந்து அதனை உலகின் பல பாகங்களுக்கும் கொண்டு சென்றேன். 87 இல் குறித்த ஓவியங்களுக்கு மாநில, தேசிய விருதுகள் கிடைத்தன. ஈழ விடுதலைப் போராட்டம் ஊடாகத் தான் எனக்கு உலகப் பார்வை கிடைத்தது. பின்னர் உலகம் எங்கும் மக்கள் துன்பப்பட்டாலும், கதறினாலும் அவர்களுக்காகவும் என் தூரிகை பேசியது. தேசத்தின் எல்லைகளைக் கடந்து ஒடுக்கப் பட்ட மக்களின் விடுதலைக்காக என் ஓவியங்கள் பேசத் தொடங்கின. எங்களின் துன்பங்களை மட்டும் பேசுவதைவிட மற்ற உலக மக்களின் துன்பங்களையும் இணைத்துப் பேசும் போது அது இன்னும் வலிமையானதாக மாறுகின்றது. அது மட்டுமல்லாமல் எங்களின் போராட்டம் அந்த மக்களிடமும் போய்ச் சேர்கின்றது.



**ஆட்சிமாற்றம் ஒன்று தற்போது வந்திருக்கின்றது, இந்நிலையில் ஈழத்தில் தற்போது நிலவுகின்ற அரசியல் சூழலை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

முன்னர் இருந்ததை விடவும் கூடுதலான நெருக்கடியில்தான் இப்போது ஈழம் இருப்பதாக நான் கருதுகின்றேன். ராஜபக்ஸ முன்னர் இருந்ததனாலேயோ அல்லது அவர் தற்போது தோல்வியடைந்த தனாலேயோ, மைத்திரிபால தற்போது வெற்றி பெற்று வந்து ஜனாதிபதியாக இருக்கின்ற தனாலேயோ எந்த ஒரு மாற்றமோ அல்லது ஏற்றமோ தமிழர்களுக்குக் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், ஒரேயொரு விடயத்தை மட்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். ராஜபக்ஸ மேல் தமிழ் மக்களுக்கு ஒரு மிகப்பெரிய கோபம் இருந்தது. அந்தக் கோபத்தை இந்த முறை தமிழ் மக்கள் தேர்தலில் காட்டி இருக்கின்றார்கள். இதன் மூலம் அவர்கள் மிகப் பெரியதொரு செய்தியை உலகத்துக்குச் சொல்கின்றார்கள். தமிழ்மக்கள் மைத்திரிபால விடம் எதையும் எதிர்பார்த்து, அதனை அவர்கள் செய்வார்கள் என்று வாக்களித் திருப்பார்கள் என நான் நம்பவில்லை.



இந்த நிலையில் இலங்கையில் இருக்கின்ற அறிவுஜீவிகள், நடுநிலையாளர்கள், முற்போக்குவாதிகள் போன்றவர்களுக்கு மிக முக்கியமான கடமை இருப்பதாக நான் கருதுகிறேன். ராஜபக்ஸ ஒரு கொடுங்கோலன் என்கிற தோற்றம் மிகப் பெரிய அறிவுஜீவிகளுக்கு கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் பின்னடைவை ஏற்படுத்தி இருந்தது. ஒரு தொலைக் காட்சிக்கோ, ஊடகத்துக்கோ கருத்துச் சொல்ல முடியாத நிலை இருந்தது. தற்போது மைத்திரி வந்திருக்கின்ற காரணத்தினால் இதில் ஒரு நெகிழ்வுப் போக்கு உருவாகலாம். இதனைப் பயன்படுத்தி சிங்களத்தில் இருக்கின்ற முற்போக்குவாதிகளும், இடது சாரிகளும் தமிழர் விவகாரத்தை விரிந்த ஒரு பார்வையோடு அணுக வேண்டும் என நான் கருதுகின்றேன்.

**தேர்தலுக்குப் பிறகு புதிய அரசியல் சூழல் ஒன்று உருவாகி யுள்ளது. தமிழ் மக்களுக்கு சாதகமாக இருந்த போர்க்குற்றம் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய தேவை, அரசியல் தீர்வைக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் எல்லாமே மஹிந்த ராஜபக்ஸவுக்கு தான் இருந்தது. ஆனால், அந்த நிர்ப்பந்தங்கள் எல்லாம் தற்போது காணாமல் போயுள்ளன. இந்த நிலையில் புதிய சூழலுக்கு தமிழ் மக்கள் எப்படி முகம் கொடுப்பது?**

உண்மையில் ராஜபக்ஸ மீண்டும் வந்துவிடக்கூடாது என்று நினைக்கின்ற அந்த நிலையில், அவர் தோல்வியடைந்து பொறுப்புக்களில் இருந்து விலகுகின்ற நிலையில், ஒரு சர்வதேச நெருக்கடி அவர் மீது திணிக்கப்படாது. அழுத்தங்கள் பிரயோகிக்கப்படாத ஒரு நிலைமை உருவாகும் என்பதனையும் உணர்ந்து தான் இருந்தோம். அதே நேரத்தில் சர்வதேச விசாரணை, சர்வதேச நாடுகள், சரியான முறையில் இந்தப் பிரச்சினையில் அக்கறையுள்ளவர்களாக இருந்தால் ராஜபக்ஸ . பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். ஏனென்றால், போர்க்குற்றம், இனப்படுகொலை என்பது தொடர்பில் தற்சமயம் பதவி வகிப்பவர்கள் சம்பந்தப்படாமல் இருந்தாலும், ஏற்கனவே இருந்தவர் செய்திருந்தால் அதன் மீது விசாரணை நடாத்தி தண்டனை வழங்கிய வரலாறு உலகத்தில் இருந்திருக்கின்றது.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு செய்த கொலைக் குற்றங்கள், போர்க்குற்றங்கள் என்பவற்றை விசாரணை செய்து தண்டனைகள் வழங்கப்பட்டிருப்பதை நாங்கள் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் படிக்கின்றோம். சமீபத்தில் கூட பாரிய இன அழிப்புக்குக் காரணமானவர்கள் விசாரணை நடாத்தப்பட்டுத் தண்டிக்கப் பட்டு இருக்கின்றார்கள். சர்வதேசம் தன்னுடைய நலனுக்குத் தான் ஈழப் பிரச்சினையைப் பயன்படுத்துகின்றது என்கிற அடிப்படையில் பின்னிற்கலாம். ஆனால், இதை எதிர்த்து அழுத்தம் கொடுக்க வேண்டிய கடப்பாடு தமிழர்களுக்கு இருக்கின்றது.

ராஜபக்ஸ பதவியில் இல்லாவிட்டாலும் அவர் மீது சுமத்தப்பட்டிருக்கின்ற போர்க்குற்றம், இனப்படுகொலைக் குற்றச் சாட்டு தொடர்ந்து நீடிக்கிறது. தமிழர்களாகிய நாம் இனப்படுகொலை என்கிறோம். உலக நாடுகளோ போர்க்குற்றம் என்கின்றது. எதுவாக இருந்தாலும் இவை ராஜபக்ஸவால் நிகழ்த்தப்பட்டவை. இன்னும் சொல்லப் போனால் தற்போது ஆட்சியில் இருக்கின்ற பொன்சேகாவுக்கும் அதில் பங்கு இருக்கின்றது. வெற்றிக்கு நான் தான் காரணம். அதனால் வரக்கூடிய சர்வதேச விசாரணைகளை எதிர்கொள்ள நான் தயாராகவே இருக்கிறேன் என்று முன்னாள் படைத் தளபதியான பொன்சேகாவே சொல்கிறார். இந்த அரசில் முக்கியமானவராக இருக்கும் பொன்சேகாவுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கின்ற படியால் இந்த அரசுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கின்றது என்று தானே பொருள். ஆட்சி செய்கின்ற நபர் தான் மாறி இருக்கின்றார். இதனால் சர்வதேசத்துக்கு நாங்கள் தான் இன்னும் கூடிய அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும். நம்முடைய பணி இன்னும் கூடியிருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

**சர்வதேச சக்திகளைப் பொறுத்தவரை அவர்கள் தங்களுடைய நலன்களில் இருந்து தான் செயற்படுகின்றார்கள். அவர்கள் சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுத்ததே இலங்கையில் இருந்து சீனாவை அகற்ற வேண்டும் என்கிற நோக்கில் தான். இப்போது ஆட்சி மாற்றம் வந்து விட்டது. இந்த நிலையில் அவர்கள் சர்வதேச விசாரணையை முன்னுக்கு கொண்டு போவார்கள் என்று நீங்கள் நம்புவீர்களா?**

எனக்கும் அதில் நம்பிக்கை இல்லை. ராஜபக்ஸவை அகற்றியதன் மூலம் சீனாவின் ஆதிக்கத்தையும் இலங்கைத் தீவில் இருந்து அகற்றி விட்டார்கள். அந்தத் திருப்தி அவர்களுக்கு இருக்கின்றது. இனி அந்த இடத்தில் அமெரிக்காவோ அல்லது வேறு நாடுகளோ அங்கு சென்று ஆதிக்கம் செலுத்தும் வகையில் தான் தேர்தல் முடிவுகளும் இருக்கின்றது. இதனால் அவர்கள் தமிழர் பிரச்சினையை கைவிடுவார்கள் என்பது தான் உண்மை. ஆனால், அதனைக் கைவிடாத அளவிற்கு தமிழர்கள் மேலும் மேலும் அழுத்தத்தைத் தரவேண்டும்.

# தமிழ்த் தேசியத்தின் குரலை வலுப்படுத்தும் புலம்பெயர் மக்கள் இயக்கம் “மாற்றத்திற்கான குரல்” ஆக கனடா ரொறன்ரோவில் கருக்கொண்டது




“ஈழத்தமிழரது தனித்துவ அரசியல் பேரியக்கத்தின் வலுவான தொடர்ச்சியை மீளக் கட்டமைப்போம்” - கனடா ரொரான்ரோவில் மாற்றத்துக்கான குரல்

தாயக அரசியல் முன்னெடுப்புகளில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தி தாயகம் - தேசியம் - தன்னாட்சியுரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை விட்டு விலகாத வகையில் எமது அரசியல் நகர்வுகள் முன்னெடுக்கப்படவேண்டும். தற்போதைய ஜனநாயகச் சூழலில் இம் மாற்றத்தை முன்னெடுக்கத் தவறுவோமாயின் அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்குள் ஈழத்தமிழரின் இருப்பு கேள்விக் குறியாகிவிடும் என ‘மாற்றத்துக்கான குரல்’ செயற்பாட்டாளர் தெரிவித்தனர்.

‘மாற்றத்துக்கான குரல்’ என்ற செயற்றிட்டம் குறித்த நிகழ்வு இரவு விருந்தாக இரா விருந்து மண்டபத்தில் மார்ச் 15 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஏறக்குறைய 350 பேர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

மாற்றத்துக்கான குரல் என்ற செயற்றிட்டம் பற்றிய விரிவான விளக்கம் இந்த நிகழ்வின் பின்னரே பலருக்கும் தெரியவந்தது என்பதே உண்மை. செயற்பாட்டாளர்களில் ஒருவரான திரு. குயின்ரஸ் துரைசிங்கம் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

திரு. திருமதி. ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதியினரும் திரு. திருமதி. குணநாதன் தம்பதியினரும் திருமதி. ஜோசப் பரராசசிங்கம் அவர்களும் மங்கல விளக்கேற்றினர். வரவேற்பு ஆடலை ஆடலகம் மாணவியர் வழங்கினர். மாற்றத்துக்கான குரல் என்பது என்ன? என்ற பலரதும் கேள்விகளுக்கும் விடையளிப்பதாக அந்த ஆடல் அமைந்திருந்தது.

அடுத்து திரு. பொன்னையா விவேகானந்தன் உரையாற்றும்போது, மாற்றத்துக்கான குரல் ஒரு செயற்திட்டத்தின் பெயரே தவிர, அது ஒரு அமைப்பு அல்ல. ஒரு அமைப்புக்கான எந்தத் தோற்றமும் இல்லாது ஒரு பொது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகப் பலர் ஒன்றிணைந்திருக்கும் செயற்பாடே இது. இந்த செயற்பாடு நிறைவேற்றப்பட்ட பின் நாம் கலைந்து விடுவோம் எனத் தன் உரையின்போது இவர் குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜனநாயகத் தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருக்கும் இலங்கையின் அரசியல் களத்தில் நாமும் எமது எமது அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக்கொடுக்காது வலிமையோடு நாம் பயணிக்க வேண்டும். அடுத்து வரக்கூடிய தேர்தலினூடாகத் தெரிவுசெய்யப்படும் தமிழர் தலைமை ஈழத்தமிழரின் தேசிய நலன் சார்ந்தே செயற்படவேண்டும்.

தற்போது தமிழரது தலைமையாகத் திகழ்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவ்வாறு தொடர்ந்து பயணிக்க வல்லவர்களா? என்ற வினா பலருக்கும் எழுந்துள்ளது.

தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை போன்ற அடிப்படைக் கோட்பாடுகளை கைவிட்டமை, வட-கிழக்குப் பிரிப்பை ஏற்று அதற்கு அரசியல் தகுதியை வழங்கியமை, மாகாண சபையைத் தமிழருக்கான தீர்வாக ஏற்றுக்கொண்டமை, இனப்படுகொலையை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரச நிகழ்வுகளில் இணைந்து கொண்டமை, எந்த நிபந்தனையுமின்றி ஆட்சிமாற்றத்துக்கு ஆதரவு வழங்கி ஐ.நாவரை முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலை விசாரணையை முடக்கியமை, தாயக உறவுகளுக்கு அரணாகத் திகழும்புலம்பெயர்ந்தோரது உணர்வுகளை மதிக்காது அவர்களைக் கண்டிக்க முனைந்தமை, போன்ற குற்றச்சாட்டுகள் பலராலும் கூட்டமைப்பின் மீது சுமத்தப்படுகின்றன. இந்நிலையில் அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்குக் கூட்டமைப்பினரை நம்பி எம் எதிர்காலத்தை முழுமையாக ஒப்படைக்க முடியுமா?

இந்த வினாவோடு வெறுமையடைந்த நம்மில் சிலர் ஒன்றுகூடினோம். நிறையவே பேசினோம். அதன் விளைவே ‘மாற்றத்துக்கான குரல்’

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரது அரசியல் பேரியக்கத்தின் தொடர்ச்சியாகும். அதனை அழிக்க முயல்வதோ மாற்றுத் தலைமைகளைத் தோற்றுவிப்பதனூடாக அதனை வலுவிழக்கச் செய்வதோ எமது நோக்கமல்ல. எனினும் ஜனநாயகத்தின் திறவுகோலான மக்கள் பலத்தைக் கொண்டு கூட்டமைப்பை அரசியல் வலு சமநிலைக்குட்படுத்தி அதன் போக்குகளை நெறிப்படுத்தலாம் என நம்மில் சிலர் கருதினோம். இது விரைவாகவும் கருத்தொருமித்தோரை இணைத்தும் முன்னெடுக்கப்படவேண்டிய அவசியத்தையும் உணர்ந்தோம்.

எமது அடிப்படைக் கோட்பாடுகளை விட்டு விலகாத, பெரிதும் தமிழரது தேசிய நலனை நோக்காகக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து ஒரிருவரை எதிர்வரும் தேர்தலினூடாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்தல் வேண்டும். இத்தெரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தன்னிச்சையான போக்குகளைக் கட்டுப்படுத்துவதாகவும் தமிழரது அடிப்படை உரிமைப் போராட்டம் வலுவிழக்காமல் இருக்கவும் உதவும் எனவும் எண்ணினோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுடன் பேசினோம், பலதடவை கலந்துரையாடினோம். எமது சிந்தனைகளும் அவர்களது இலக்குகளும் ஒரு புள்ளியில் இணைந்தன. அதன்பின்னர் எதிர்வரும் தேர்தலில் இக்கட்சியினரை ஆதரிப்பதுடன், வெற்றிக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதென முடிவு செய்தோம்.

இந்தவேலைத்திட்டமே ‘மாற்றத்துக்கான குரல்’ என்ற செயற்பாடாக உருப்பெற்றது.

எமது செயற்திட்டத்தின் முதன்மைப் பணி இக்கட்சிக்காக கணிசமான வாக்குகளைத் திரட்டுவதே. அறிக்கைகளும் கூட்டங்களும் ஊடகச்செய்திகளும் தாயக மக்களது அரசியல் விழிப்புணர்வுக்கு வழி காட்டாது என்பதை நாம் நன்கறிவோம். வாக்காளரோடு நேரிடையாகத் தொடர்பு கொண்டு சொல்லோடு சொல்லாடி அரசியல் தெளிவை ஏற்படுத்துவதே சிறந்த வழி என முடிவு செய்தோம். அதற்கான வலைப்பின்னலை உருவாக்கி வருகின்றோம். வாக்காளரைத் திரட்டமுடியும் என்ற இலக்கை நிர்ணயித்து அதற்கான செயற்பாடுகளில் இறங்கினோம். ஆறுவாரத்திற்குள் இலக்கின் காற்பங்கினைக் கடந்துவிட்டோம்.

பிரித்தானியா இலண்டனில் இதே போன்று செயற்திட்டம் உருவாக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களும் கணிசமான வாக்குகளைத் திரட்டவுள்ளனர். இக்கட்சிக்குப் பெருகிவரும் செல்வாக்கு அரசியல் விழிப்புணர்வைப் பரவலாக ஏற்படுத்தி வருகின்றது.

இச்செயற்பாடுகள் எம் செயலூக்கத்தை வலுவடையச் செய்கின்றன.

வாக்குளைத் திரட்டுவதோடு கட்சியின் பரப்புரைக்காகச் சிறுதொகை நிதியை வழங்குவதுவும் அவசியம் என்பதை நாம் உணர்ந்தோம். சிறியளவிலான இரவுவிருந்து ஒன்றினூடாக குறிப்பிடப்பட்டளவு நிதியைத் திரட்டும் நோக்கோடு இனநலன் நாடும் வணிகரை அணுகினோம். இந்த மண்டபத்தையும் உணவையும் ஈந்தார் ஈகத்தைப் போற்றும் ஓர் ஈகையாளர். தொடர்ந்து பெருகிய ஆதரவு இரண்டே வாரத்தில் எம் இலக்கை இலகுவாகக் கடக்க உதவியது. இத்தருணத்தில் உதவியோர் அனைவரையும் நன்றியோடு நினைவுகூருகின்றோம்.

அக்கட்சியின் கொள்கைகள் அனைத்தையும் முழுமையாக ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல நாங்கள். எமக்கும் அவர்களுக்கும் இடையே இடைவெளிகள் உள்ளன. முரண்கள் உள்ளன. ஆனால் பொது நோக்கில் உன்னதமானதோர் இலக்கில் நாம் ஒன்றுபட்டிருக்கின்றோம். இவ்விலக்கை நோக்கிய இச்செயற்றிட்டம் நிறைவடைந்ததும் ‘மாற்றத்துக்கான குரல்’ கலைக்கப்பட்டுவிடும் என்பதால் இது ஓர் அமைப்பல்ல என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

**தாயகம் தேசியம் தன்னாட்சியுரிமை போன்ற அடிப்படைக் கோட்பாடுகளை கைவிட்டமை, வட, கிழக்குப் பிரிப்பை ஏற்று அதற்கு அரசியல் தகுதியை வழங்கியமை, மாகாண சபையைத் தமிழருக்கான தீர்வாக ஏற்றுக்கொண்டமை, இனப்படுகொலையை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசநிகழ்வுகளில் இணைந்து கொண்டமை, எந்த நிபந்தனையுமின்றி ஆட்சிமாற்றத்துக்கு ஆதரவு வழங்கி ஐ.நாவரை முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலை விசாரணையை முடக்கியமை, தாயக உறவுகளுக்கு அரணாகத் திகழும் புலம்பெயர்தோரது உணர்வுகளை மதிக்காது அவர்களைக் கண்டிக்க முனைந்தமை, போன்ற குற்றச்சாட்டுகள் பலராலும் கூட்டமைப்பின் மீது சுமத்தப்படுகின்றன.**

# மகளுக்குத் தண்டனை வேண்டாம்!

## கண்ணாடிச் சுவரை விட வாழ்க்கையின் துன்ப துயரங்கள் பெரிது.

-தமிழில் - ஜீவிதன்-

சீகிரியாவின் கண்ணாடிச் சுவரில் பெயரொன்றைக் கிறுக்கினாரென்ற குற்றச் சாட்டில் அநுராதபுரம் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருக்கும் மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி உதய ஸ்ரீ என்ற யுவதியின் நலனை விசாரிப்பதற்காக அவரின் தயாரான சின்னத்தம்பி தவமணி (61) அவர்களை கடந்த சில தினங்களுக்கு முன்னர் சென்று சந்தித்திருந்தோம்.

சிறைச்சாலை அதிகாரிகள் வழங்கிய 5 நிமிடம் என்ற குறைந்த நேர இடைவெளிக்குள் உதய ஸ்ரீ தன் தயாரிடம் கண்ணீருடன் சொன்னது....

'அம்மா நான் அறிந்து எந்தத் தவறையும் செய்யவில்லை. ஏன் இன்னும் என்னை விடுதலை செய்யவில்லை. என்ன தவறு செய்ததற்காக என்னை சிறையில் அடைத்தார்கள்? நீதிமன்றத்தில் அவர்கள் சொன்ன விடயங்கள் எதுவும் எனக்கு புரியவில்லை."

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிகமாக அறிந்து கொள்வதற்காக நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள சித்தாண்டி கிராமம் நோக்கிப் பயணமானோம்.

இந்தப் பயணத்தில் அம்பாறை மற்றும் கல்முனை பிரதான நகரங்களைக் கடந்து திருகோணமலை நோக்கிச் செல்லும் பாதையில் மண்டூர், செங்கலடி, மாவடிவேம்பு, வந்தாறுமூலை, காத்தான் குடி ஆகிய சில நகரங்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் சந்திக்கும் சித்தாண்டி நகரத்தில் ரயில் பாதையைக் கடந்து பயணித்த போது பின் தங்கிய இடமாகக் காணப்படும் சித்தாண்டி கிராமத்தைக் கண்டோம். உதயாவின் வீடு சித்தாண்டி விநாயககிராமம், நல்லையா வீதியில் அமைந்திருந்தது.

நாங்கள் அந்த வீட்டுக்குச் சென்ற பொழுது அயலவர்கள் அந்த வீட்டுக்கு வந்திருந்ததைக் கண்டோம். அங்கு சின்னத்தம்பி உதயஸ்ரீயின் தாயார், சகோதரர் மற்றும் சகோதரி ஆகியோர் வீட்டின் வாசல் படியில் அமர்ந்தபடி பெரும் தண்ணீர் தாகத்துடன் இருப்போர் ஒரு துளி நீர் கூடக் கிடைக்காதோ என்ற ஏக்கத்துடன் இருப்பது போல் பாதையை நோக்கிப் பார்த்துக் காத்திருந்தனர்.

'ஐயா! நாங்கள் அனைவரும் சோகத்தில் தான் இருக்கின்றோம். இந்த அப்பாவிப் பெண்ணுக்கு நடந்தது பற்றி சொல்ல வார்த்தைகள் இல்லை. இது பற்றி பெரிய இடங்களுக்குத் தெரிவித்து இந்தப் பெண்ணை பொது மன்னிப்பில் விடுவிக்க உதவி புரியுங்கள்."

அங்கிருந்த அயல் வீட்டில் குடியிருக்கும் பெண் தனக்குத் தெரிந்த சிங்களத்தில் எமக்குத் தெரிவித்தார். அவரின் மொழி பெயர்ப்பு உதவியை தொடர்ச்சியாகப் பெற்றுக் கொண்ட நாங்கள் அங்கிருந்த அனைவரதும் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டோம்.



அதன்படி சின்னத்தம்பி தவமணி அவர்கள் தன் மகள் முகம்கொடுத்த சம்பவம் குறித்து கண்ணீருடன், நெஞ்சத்தை ஈரமாக்கும் வகையில் இவ்வாறு தெரிவித்தார்.

'எனக்கு 61 வயதாகின்றது. எனது கணவர் இறந்து 28 வருடங்கள் ஆகின்றது. எனக்கு 5 பெண் பிள்ளைகளும், ஒரு மகனும் இருக்கின்றார்கள். 1987 ஆம் ஆண்டு தான் என் கணவர் இறந்தார். அன்றிலிருந்து நான் ரொம்ப கஷ்டப்பட்டுத்தான் என் பிள்ளைகளை வளர்த்து எடுத்தேன்.

மட்டக்களப்பு பூலாவெளியில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றுக்கு எனது மகள் வேலைக்கு சென்றார். நாட்சம்பளம் 650 ரூபா. ஆனால் மாதமொன்றிற்கு ரூ.15000 கிடைத்தது. இந்தப் பயணத்திற்கு செல்ல முதல் மகள் என்னிடம், 'வேலை செய்யும் இடத்தில் அனைவரும் சீகிரியாவுக்கு சுற்றுலா செல்கின்றார்கள் நானும் செல்லவா?" என்று கேட்டார். எங்களிடம் அந்த சுற்றுலா செல்லும் அளவுக்குப் பணம் இல்லையே. நீங்கள் போக வேண்டாம் என்று சொன்னேன்.

பஸ்சிற்கு மட்டும் 350 ரூபா கொடுக்கவேண்டும் என்று சொன்னதால் தான் நான் அவரை அனுப்பி வைத்தேன்.
அன்று அவர் சீகிரியாவை பார்க்கச்சென்ற சந்தர்ப்பத்தில் வெள்ளைக்காரர் இருவர் படமெடுப்பதை பார்த்திருக்கின்றார். மகள் யோசித்திருக்கின்றார். கண்ணாடிச்சுவரில் தனது பெயரை எழுதிச் சென்றால் நல்லதென்று. அவர் தனது நண்பி பக்கத்தில் இருக்கும் போதுதான் 'உதயா" என்ற பெயரை எழுதினார்.

இந்த சம்பவம் குறித்து சில ஊடகங்களில் தன் காதலரின் பெயரை எழுதினார் என்று குறிப்பிட்டு இருக்கின்றார்கள். அப்படி ஒரு பெயரை அவர் அங்கு எழுதவில்லை. மகள் அந்தப் பெயரை எழுதி முடிக்கும் நேரத்தில் ஒருவர் அவ்விடத்திற்கு ஓடி வந்து உதயா என்பவர் யார் என்று கேட்டிருக்கின்றார். நான் தானென்று எனது மகள் பதிலளித்துள்ளார். அப்பொழுதான் பெயர் எழுதியது தவறு என்று அறிந்து கொண்டுள்ளார்.

அவர் அருகில் வந்த அந்த நபர் இதை எழுதியமைக்காக 5 இலட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டிவரும். அத்துடன் 5 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிவருமென்று தெரிவித்திருக்கின்றார். அதைக் கேட்ட மகள் சீகிரியா குன்றிலிருந்து பாய்ந்து தற்கொலை செய்ய முயற்சித்திருக்கின்றார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவரது நண்பி தர்சினிதான் காப்பாற்றியிருக்கின்றார். சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குதான் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அத்தினமே கைது செய்யப்பட்டு தம்புள்ள பொலிசாரினால் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். நான்கு முறை நீதிமன்றம் அழைக்கப்பட்டு நான்காவது முறைதான் தீர்ப்பு வழங்கப்பட்டு மகள் 2 வருடங்களுக்குச் சிறை அனுப்பப்பட்டார்.

நீதிமன்றத்தில் நீங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்கின்றீர்களா? என்று கேட்ட போது இந்தப் பிரச்சினையின் பாரதூரம் அவருக்குப் புரியவில்லை. ஒன்றையும் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. மகள் ஒன்றும் சொல்லவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் அங்கிருந்த முஸ்லிம் ஒருவர் தனக்கு இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருக்கின்றார்.

நான் ஜனாதிபதி அவர்களிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால் 'என் மகளை விடுதலை செய்து தாருங்கள்." நாங்கள் வாழ்வதற்கு உதவி புரிந்தது என் மகள் தான். இரவு பன்னிரெண்டு மணிவரைக்கும் மா இடித்து அவற்றை காலையில் மட்டக்களப்பில் கடைகளுக்கும், வீடுகளுக்கும் விற்றுத்தான் எங்களுக்கு கொஞ்சமாவது பணம் கிடைத்து வந்தது. அதுவும் இந்தப் பிரச்சினைக்குப் பின்னால் இல்லாமல் போய்விட்டது.

என் மகளுக்கு மொழி தெரியாது. அவர் இப்பொழுது மொழி தெரியாதவர் மத்தியில் இருக்கின்றார். அவருக்கு ஒன்றும் தெரியாது. ஜனாதிபதி ஊடாக அவரை விடுவித்துத் தாருங்கள். மகள் தவறு செய்திருந்தால் நான் காலில் விழுந்து வணங்குகின்றேன் மகளை விடுவித்துத் தாருங்கள்."

**அவர் அருகில் வந்த அந்த நபர் இதை எழுதியமைக்காக 5 இலட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டிவரும். அத்துடன் 5 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிவருமென்று தெரிவித்திருக்கின்றார். அதைக் கேட்ட மகள் சீகிரியா குன்றிலிருந்து பாய்ந்து தற்கொலை செய்ய முயற்சித்திருக்கின்றார்.**

வந்தாறுமூலை மகா வித்தியாலத்தில் சாதாரண தரம் வரை கற்ற 28 வயதான சின்னத்தம்பி உதய ஸ்ரீ, மட்டக்களப்பு புலாவெளி பிரதேசத்தில் தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றி வந்துள்ளாரென்றும் அவர் இதுவரையும் வேண்டுமென்றே எந்தத் தவறையும் செய்ததில்லை என்றும் எங்களிடம் தெரிவித்தார்கள்.

அவர் நண்ப, நண்பிகளிடம் நல்லுறவுடன் பழகியதாகவும் இன்று அவர் சிறைத்தண்டனை அனுபவிக்குமளவிற்கு என்ன தவறை செய்தார் என்று அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

சின்னத்தம்பி செந்தில்குமார் - எதனோல், போதைப் பொருள் விற்பனை செய்யும் பாரதூரமான குற்றச் செயல்கள் புரியும் நபர்கள் சுதந்திரமாகச் சுற்றித்திரியும் இந்த சமுதாயத்தில் என் சகோதரி அறியாமல் செய்த தவறுபற்றி குறித்தவிடயத்தில் கவனம் செலுத்தி மன்னிப்பு வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

வடக்கு கிழக்கு வாழ்வோதயம் சமூகநலன் அமைப்பின் தலைவர் எஸ்.லோகநாதன் அவர்கள் - 2 வருட காலத்திற்கு ஒரு யுவதி சிறைத்தண்டனை அனுபவிப்பதென்பது அந்த யுவதியின் வாழ்க்கையில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தும். அவர் திருமணமாகாதவர், குடும்பம் அவரது உழைப்பையே நம்பியிருந்தது. மிகவும் வறிய குடும்பத்தின் அப்பாவிப்பெண். சுனாமியின் போது வீட்டினை இழந்த இவர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றே வீட்டைக் கட்டி வழங்கியது. இந்த நாட்டில் தவறு புரிபவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது பலர் தவறு புரிந்தவர்களாகவே இருக்கின்றார்கள். தவறுகள் புரிந்த சுறாக்கள் வெளியில் இருக்கும்போது. இந்த அப்பாவிப் பெண் ஏன் தண்டனை பெறவேண்டும்?

எங்கள் அமைப்பின் சார்பாக ஜனாதிபதி அவர்களைக் கேட்டுக்கொள்வதென்னவென்றால் மனிதாபிமான ரீதியாக இந்தப் பெண்ணை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுங்கள்.

சீகிரியாவை ரசிக்கச் சென்ற சித்தாண்டியைச் சேர்ந்த யுவதியான சின்னத்தம்பி உதயஸ்ரீக்கு நடந்த இடர் பற்றித் தகவல் சேகரிக்கச் சென்ற நாங்கள் மீண்டும் எங்கள் இடம் நோக்கி திரும்பி வந்தது, உதயஸ்ரீக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன்....

மவ்பிம பத்திரிகைக்காக - தீகவாப்பிய நிமா சதுவந்தி மற்றும் கோணாகொல்ல பிரேமதாச அரபேகெதர

# பயமில்லை ஜெயமுண்டு



-ஆனந்தகிருஷ்ணா-

எந்த விஷயத்துக்காக பயம் ஏற்படுகிறதோ அதை அடிக்கடி எதிர்கொள்வதும் பயத்தை தணிக்கும். தனிமையில் இருப்பது, உயரத்தில் இருப்பது பயம் என்றால் தானாகவே முன்வந்து, தன்னை தயார்படுத்திக் கொண்டு அத்தகைய சூழ்நிலைகளை அடிக்கடி எதிர்கொள்ளவேண்டும்.

பெரும்பாலான மனிதர்களின் தோல்விக்கோ வெற்றிபெற முடியாததற்கோ காரணம் அவர்களின் பயம் என்கிறார் அமெரிக்க உளவியலாளர் சூசன் ஜெப்பர்.

பயம் என்பது ஒருவரது ஆற்றலையும் சக்தியையும் குறைக்கும் சக்தி படைத்தது. பயந்தவர்கள் நிதானமாக சிந்திக்கும் திறனை இழந்து விடுவார்கள்.

பயத்துக்கான காரணம் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. பல்லி முதல் பாம்பு வரை, இருட்டு முதல் உயரம் வரை, வெற்றி முதல் தோல்வி வரை, தெரியாதவை முதல் புரியாதவை வரை என பல வேறு காரணங்கள். சிலருக்கு சாதாரணமாய் தோன்றும் விஷயங்கள் மற்றொருவருக்கு பயத்தை ஏற்படுத்தும் சாகசமாய் தோன்றும்.

பயத்துக்கான அளவுகோலும் ஒருவருக்கொருவர் வேறுபடுகிறது. பயத்தின் அளவைப்பொறுத்து அதன் வெளிப்பாடும் விளைவுகளும் வேறுபடுகின்றன. இதுவே பலவிதமான உளவியல் பிரச்சினைகளுக்கும் உடல் நலக்குறைவுக்கும் கூட வித்தாகிறது. ஒருவரின் மன அமைதியையோ, அவரைச் சார்ந்தவர்களை பாதிக்கும் வகையிலோ, அல்லது கல்வி மற்றும் வேலையில் அவரது வளர்ச்சியை பாதிக்கும் வகையிலோ பயம் இருந்தால் கண்டிப்பாக அதற்கான தீர்வைக்காண வேண்டியது முக்கியம்.

பயத்தின் அளவு, காரணம் மற்றும் விளைவுகளைப் பொறுத்து அதைக் கையாள மேற்கொள்ளும் முறைகளும் வேறுபடுகின்றன. சில நேரங்களில் இத்தகைய நபர்களின் பயத்தையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் கையாள, மருத்துவ மனோதத்துவ மற்றும் வாழ்வியல் மாற்ற நிபுணர்களின் ஒருங்கிணைந்த அணுகு முறை தேவைப்படுகிறது.

## கையாளும் முறைகள்

பயம் ஏற்படும்போது அதனுடன் போராடுவதோ, பயத்தைப் போக்க முற்படுவதோ பலனைத் தராது. மாறாக முதலில் உடலையும், மனதையும் அமைதியான சகஜ நிலைக்குக் கொண்டு வரவேண்டும். ஒரு டீயைக் குடிப்பதோ, வெளியில் தூய்மையான காற்றில் கொஞ்ச தூரம் நடப்பதோ, அல்லது மிதமான வெந்நீரில் குளிப்பதோ என தன்னால் முடிந்ததைச் செய்யலாம்.

சுவாசப்பயிற்சி மனதையும் உடலையும் நிலைப்படுத்தி கட்டுக்குள் கொண்டுவருவதில் பெரும்பங்கு வகிக்கிறது. சுவாசப் பயிற்சியின் போது நிதானமாக மூச்சை உள்ளிழுக்க வேண்டும். அதைவிட நிதானமாகவும் நீண்ட நேரத்திலும் மூச்சை வெளியே விடவேண்டும். இதைத்தொடர்ந்து செய்யும் போது உடலும் மனமும் நம் வசப்படும்.

உடலும் உள்ளமும் அமைதியான பிறகு தனது பயத்துக்கான காரணத்தைத் தெளிவாக ஆராயலாம்.

புதியவைகளை எதிர்கொள்ளும் சூழ்நிலைகளில் (புதிய வேலை, புதிய மனிதர்கள், பணி மாற்றம், இடம் மாற்றம்) அவற்றைப்பற்றிய விவரங்களை முன் கூட்டியே திரட்டி ஓரளவுக்கு தயாராக இருப்பது பலனைத் தரும்.

தனது பயம் தோல்வியைப் பற்றியோ, மற்றவர்கள் முன்பு தனது செயலோ பேச்சோ அடையப்போகும் மோசமான விமர்சனம் பற்றியோ இருந்தால், அத்தகைய தோல்வி மற்றும் மோசமான விமர்சனத்தால் ஏற்படப்போகும் மிக மோசமான பின் விளைவுகளைக் கற்பனை செய்து பார்க்கலாம். அத்தகைய சூழ்நிலைகள் வாழ்வின் முடிவல்ல. மேலும் நல்ல சந்தர்ப்பங்கள் காத்திருக்கின்றன என்ற தெளிவு ஏற்படும். அத்தகைய தெளிவு முன்கூட்டியே வரும் பயத்தையும் தெளிவிக்கும்.

எதற்குப் பயப்படவேண்டும், என்ன தான் நடந்துவிடும் என்று பார்த்துவிடலாம் என்ற மனோபாவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பயம் என்பது கோழைத்தனம். குழம்பிய மனநிலையில் உள்ளவர்களையே பயம் தாக்கும். எனவே தைரியத்தையும் ஆற்றலையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பயம் ஏற்படும்போது, தனக்கு நல்லதே நடக்கும், எந்தத் துன்பமும் வராது, நடப்பவை எல்லாம் நல்லதுக்கே போன்ற ஆரோக்கியமான எண்ணங்களை வளர்த்துக்கொண்டால் பயம் நாளடைவில் தானாய் மறைந்து விடும்.

எந்த விஷயத்துக்காக பயம் ஏற்படுகிறதோ அதை அடிக்கடி எதிர்கொள்வதும் பயத்தைத் தணிக்கும். தனிமையில் இருப்பது, உயரத்தில் இருப்பது பயம் என்றால் தானாகவே முன்வந்து, தன்னை தயார்படுத்திக்கொண்டு அத்தகைய சூழ்நிலைகளை அடிக்கடி எதிர்கொள்ள வேண்டும்.

பயம் ஏற்படும் நேரங்களில் தனக்குப் பிடித்த விஷயங்களைக் கண் முன் கற்பனை செய்து பார்க்கலாம். தனது மனதை சந்தோஷப்படுத்தும் நிகழ்வையோ, கடவுள் படத்தையோ, அழகான காட்சியையோ கண் முன் பார்க்கும்போது பயத்துக்கான காரணம் தானே அகன்று விடும்.

உலகின் தலைசிறந்த மனிதர்களுக்கு பயம் இருந்ததில்லை என்பதை அடிக்கடி நினைத்துப்பார்க்க வேண்டும்.

நம்முள் இருக்கும் தாழ்வு மனப்பான்மையை அகற்றிவிட்டால் பயமும் அகன்றுவிடும் என்ற உண்மை புரிய வேண்டும்.

பயம் என்பது முடிவை நோக்கிய பயணம். வெற்றியை நோக்கிய நம் பயணத்தில் பயத்துக்கு இடமில்லை.

---

(6 ஆம் பக்க தொடர்ச்சி)

(மோசமான ஏமாற்றத்தை.....)

அரசாங்கம் மட்டும் பிரச்சினை அல்ல. அரசே பிரச்சினை என்ற உண்மையை கூட்டமைப்பினர் விளக்க முன்வரவில்லை. இலங்கை அரசு என்பது சிங்கள பௌத்த அரசு. யார் ஆட்சிக்கு வந்தாலும் அது தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறையையே கட்டவிழ்த்து விடும் என்பதே உண்மையாகும். இந்த உண்மையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விளக்கியிருக்க வேண்டும்.

மோடியின் பயணத்தினால் தமிழக தேசிய சக்திகளும் பலவீனமடைந்துள்ளனர். மோடி யாழ்ப்பாணம் சென்றுள்ளார். வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் உட்பட பலர் அவரை வரவேற்றிருக்கின்றனர். கூட்டமைப்பினர் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கின்றனர்.

தமிழகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உள்ள தமிழ்த் தேசிய சக்திகள் பலவீனமடைவதற்கு இவை மட்டுமே போதும். தாயகத்தில் ஆதிக்கம் செலுத்தும் கட்சி தமிழ்த் தேசிய அரசியலைக் கைவிட்டால் தாயகத்திற்கு வெளியே நிற்பவர்களினால் என்ன தான் செய்ய முடியும்.

ஈழத்தில் மோடியை மக்கள் வரவேற்கின்றனர். இந்திய அரசும் இலங்கை அரசும் தமிழர்களுக்கு நல்லதையே செய்கின்றது. நீங்கள் அவற்றைக் குழப்பாமல் வாய் பொத்திக்கொண்டிருங்கள் என்று கூறுவதாகவே கூட்டமைப்பின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

தமிழ் மக்கள் ஆட்சி மாற்றத்திற்குக் காரணமாக இருந்தாலும் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் என்பவற்றிற்கு அப்பால் இயல்பு நிலையினைக் கொண்டு வருதலில்கூட மைத்திரி அரசு எதுவும் செய்யவில்லை. தமிழ் மக்களது காணிகளை மீள ஒப்படைத்தல், சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல், இராணுவத்தை அகற்றுதல், அரசியற் கைதிகளை விடுவித்தல், காணாமல் போனோர் விவகாரத்திற்குத் தீர்வு காணுதல் என்பவை இயல்பு நிலையினைக் கொண்டு வருதலில் முக்கியமானவை. இவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எவற்றையும் மைத்திரி அரசு காட்டவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன அழிப்பிற்கு பொறுப்புக் கூறலும் இனப் பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமையுடைய அரசியல் தீர்வும் மிக மிக அவசியம். இவையெல்லாவற்றிற்கும் முதற்கட்ட நிபந்தனை இயல்பு நிலையினைக் கொண்டு வருதலே.

இவ்விடயங்களுக்கான உத்தரவாதங்கள் இல்லாமல் இணக்க அரசியல் என்பது சரணாகதி அரசியலே! இந்த சரணாகதி அரசியலைச் செய்யுமாறு தான் மோடி வற்புறுத்துகின்றார். சரணாகதி அரசியலைச் செய்யுங்கள் என போதிப்பதற்குத்தான் யாழ்ப்பாணத்திற்கு மோடி வந்திருக்கின்றார் என்றால் அதைவிட வராமலே விட்டிருக்கலாம்.

ஏமாற்றத்தையாவது பொறுத்துக் கொள்ளலாம். படுமோசமான ஏமாற்றத்தை எவ்வாறு பொறுத்துக்கொள்ளமுடியும்.

---

(11 ஆம் பக்க தொடர்ச்சி) (மாத்தறை.....)

நாங்கள் மேன்முறையீடு செய்தோம். அதாவது இத்தடையை நீக்கி என்னையும் பக்தர்களையும் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்குமாறு கூறினோம். நாங்கள் பொலிஸிலும் முறைப்பாடு செய்தோம். ஆனாலும் தர்மதாச அவரது புதல்வர்கள் மற்றும் அடியாட்கள் எங்களை கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கவில்லை. தற்போதைய உதவி பொலிஸ் அத்தியட்சகர் தர்மதாச அவர்களின் தேவைக்கமையவே செயற்படுகின்றார். இக்கோவிலை இந்நிலைக்கு தள்ளியமைக்கு பிரதான காரணிகளுள் ஒருவராக இவ்வுதவி பொலிஸ் அத்தியட்சகர் விளங்கினார். இன்று கோவிலை மூடி அதனை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்வதும் இவரே.

(23 ஆம் பக்கம் பார்க்க)

# அழிக்கப்பட்ட கிராமம்

## தோணி தாட்டமடு படுகொலை

- விஜயன் -

மட்டுநகர் மண்ணில் கடல் வளமும், வயல் வளமும் சிறந்து விளங்கும் கிராமங்கள் பல. உழைத்துச் சேமித்து இலட்சாதிபதியாய், கோடீஸ்வரராய் வாழ நினைப்பவர்கள் மிக இலகுவில் நிலையை அடைந்துவிடமுடியும். இலட்சத்துக்கு அதிபதிகளாகி தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாடுகளை மறந்து மனிதநேயத்தை இழந்து, மொத்தத்தில் தமது சுயத்தையே மறந்து வாழும் மனிதர்களாக வாழ விரும்பாத, இன மகத்துவத்தைக் காக்கின்ற மக்களே இத்தகைய வளமிகு கிராமங்களில் வாழ்வதை அவதானிக்கமுடிந்தது. ஆண்டாங்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருக்கின்ற வாகரை, கதிரவெளி, பனிச்சங்கேணி, வெருகல், தோணிதாட்டமடு என்னும் கிராமங்களும் இத்தகைய வளங்களை நிறையக் கொண்டிருந்தன. நிலமிருந்தும் வளமிருந்தும் நாளாந்தம் தமது வாழ்வுக்குப் போதுமானதை மட்டும் உழைத்து மற்றவர்க்கும் கொடுத்து, தாமும் உண்டு வஞ்சகம், சூது, பொறாமை, தந்திரம், ஏமாற்று என்ற கெட்ட எண்ணங்கள் கொண்ட துட்ட மனிதர்களை இங்கு காண்பது அரிது.

கடலைத்தொட்டு நின்று, அகன்று நீண்டுவிரியும் பனிச்சங்கேணி ஆறு வாகரையிலிருந்து தோணிதாட்டமடு கிராமத்தைப் பிரித்து நிற்கின்றது, சேனைப் பயிர்ச் செய்கைக்காகவும், வயற்செய்கைக்காகவும் தோணிதாட்டமடுவிற்கு வாகரையிலிருந்து மக்கள் சென்று வருவார்கள். பருவ காலப் பயிர்ச்செய்கைக்கான இடம்பெயர்வுக் கிராமமாக இக்கிராமமிருந்தது. இக் கிராமத்தை பிரித்தும், தொட்டும் பாய்கின்ற பனிச்சங்கேணி ஆற்றில் இறாலும், நண்டும், மீனும், கொழுத்துக் கிடக்கும்.


1987ஆம் ஆண்டு, வைகாசித் திங்கள், 27ஆம் நாள் தோணி தாட்டமடுக் கிராமத்தின் இருண்ட நாள் இந்த நாள் தான்.

'விடிய 5.00 மணிக்கு ஆத்துப் பக்கமா வெடிகேக்குது 'எங்க நாசம் பண்ணுறாங்களோ தெரியல்ல. கடவுள் தான் காப்பாத்தனும்' எனக் கடவுளத்தான் வேண்டினம். வாகரை, கதிரவெளி, வம்மிவெட்டுவான், மாவடி ஓடை இராணுவமுகாமில இருந்தெல்லாம் றக்கிலவந்த ஆமி வடிச்சல பிள்ளையார் கோவிலடியிலிருந்து இறங்கி நடந்து போயிருக்கிறான். குடிலுக்குள்ளேயும் சேனைப்புலவுக்கேயும் காவலுக்குக் கிடந்தவங்களையெல்லாம் சுத்தி வளைச்சுப்பிடிச்சான். இதுக்குள்ள பாலப்பழம் பிடுங்கப் போனவங்களும் மாட்டீட்டாங்கள். படபடவெண்டு வெடிச்சத்தங்கள் கேட்குது. விடிஞ்சு பொழுது நல்லா மேலவந்திட்டுது. தோணிதாட்டமடுவில ஆமி ஆக்கள வெட்டியும் சுட்டும் எரிச்சுக் கருக்கீட்டு போயித்தானாம் என கேள்விப்பட்டு ஓடிப்போனன். அங்க போனா என்னத்த பாக்கிறது. கொஞ்சப்பேரை வெட்டிப்போட்டு அரைகுறையாய்க் கருக்கியிருந்தான். சிலரை சுட்டுப்போட்டு கருக்கியிருந்தான். கண்டுபிடிச்சிட்டன். எரிஞ்சு கரிக்கட்டையாய் கிடந்த அவரை எடுத்திட்டு வந்து இஞ்சதான் தாட்டம். ஈவிரக்கம் இல்லாத அவங்களைக் கொல்லணும் மகன். குணமெண்டு ஓராள சுட்ட உடன பொஞ்சாதி ரெண்டு சின்னப்பிள்ளையளை இடுப்பில தூக்கிட்டு ஓடியிருக்காள். அவளச் சுட்டிட்டுப் பிள்ளயள உயிரோட நெருப்பில் தூக்கிப்போட்டிருக்கிறான். இவங்களயெல்லாம் விட்டுவைக்கக்கூடாது மகன்' என ஆத்திரமும் அழுகையும் பொங்கக் கூறினாள் வேலுப்பிள்ளை மாரிமுத்து என்ற மூதாட்டி. தாய், சகோதரிகளின் பிள்ளைகள் எனப் பலரைப் பறிகொடுத்த தர்மலிங்கம் பூமணி என்பவரின் துயரக் கதையை கேட்பதற்காகச் சென்றேன். வாகரைக்கும் கால்சேனைக்குமிடையே பிரதான வீதியோரத்தினருகே இருந்த சிறிய குடிசை. குடிசைக்குள் புகுந்து இருக்கக்கூடியளவுக்கு இடவசதியில்லை. வெளியே முற்றத்து மண்ணில் அமர்ந்தேன்.

'விடியச் சாமத்தில படுபாவியள் வந்துட்டாங்கள். ஊரைச்சுத்தி வளைச்சுச் சுடத் துவங்கீட்டான். நான் நம்மட பிள்ளையள இழுத்திட்டு கடவுள நேர்ந்து கொண்டு ஓடினன். தவமணியின் குழந்தையளும், கமலாவும் கமலான்ர பிள்ளையளும் மாட்டிட்டாங்கள். கமலாவை சுட்டிட்டு பிள்ளைகளையெல்லாம் எரியிற நெருப்பில வீசிட்டான். சுத்திச் சுத்தியெல்லோரும் வயல் குடிலுக்க தான் இருந்தனாங்கள். அண்ணன் இரத்தினசீலன் அவங்கட பொஞ்சாதி பூப்பா. அவங்கட பெண்குழந்தை எல்லோரையும் சுட்டிட்டான். பால் குடி மாறாத குழந்தை இரக்கமேயில்லாமல் சுட்டு எரிச்சிட்டான். சுடச்சுட ஓடினதால நானும் பிள்ளையளும் தப்பிக்கொண்டம். என்னைப்போல ஓடித்தப்பினது நாலு பேர் மட்டும்தான். மற்ற எல்லாரையும் சுட்டிட்டான் என சொல்லிக்கொண்டிருந்த பூமணியின் உடல் நடுங்கியது.

படுகொலையில் அகப்பட்டுக் கொண்டவர்கள்

இ.சொக்கலிங்கம்
க. வேலுப்பிள்ளை
செ. கணேஸ்வரன்
வீ. தங்கத்துரை
சி. பவாநந்தம்
சி. இரத்தினசீலன்
இ.கமலா
சி. கண்ணாச்சி
சி. நடராஜா
இ. பூப்பா முருகுப்பிள்ளை



'விடியச் சாமத்தில படுபாவியள் வந்துட்டாங்கள். ஊரைச்சுத்தி வளைச்சுச் சுடத் துவங்கீட்டான். நான் நம்மட பிள்ளையள இழுத்திட்டு கடவுள நேர்ந்து கொண்டு ஓடினன். தவமணியின் குழந்தையளும், கமலாவும் கமலான்ர பிள்ளையளும் மாட்டிட்டாங்கள். கமலாவை சுட்டிட்டு பிள்ளைகளையெல்லாம் எரியிற நெருப்பில வீசிட்டான். சுத்திச் சுத்தியெல்லோரும் வயல்குடிலுக்க தான் இருந்தனாங்கள்.

**எத்தனை நாள்**
**துயின்றிருப்பாய்**
**என்னருமை**
**தாய்மண்ணே..!**

# அரசு அதிகாரத்தின் பங்காளிகளாக மலையக மக்கள் மாற்றப்படவில்லை

மலையகத் தமிழரின் அடையாளம் என்பது பன்முகப் பரிமாணங்களுடையதாகும்.

அவர்கள்:

- தென்னிந்திய தமிழர்களின் வழிவந்தவர்கள்
- செம்மொழியாகிய தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்கள்.
- தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டு அடையாளங்களையுடையவர்கள்
- பெருந்தோட்ட உற்பத்தி உறவோடு 191 வருடகால பிரிக்கமுடியாத உறவுடையவர்கள்.
- தோட்டத் தொழிலாளர்களை அடிப்படை இயங்குசக்தியாகக் கொண்டவர்கள்,
- தாமொரு தனித்துவமான மக்களினம் என்ற உளவியல் உணர்திறன் கொண்டவர்கள்.
- நாட்டின் 12 இலட்சம் ஹெக்டர் பரப்பளவை தமது வாழ்வாதார பிராந்தியமாகக்கொண்டிருப்பவர்கள்.


இம்மக்களினம் தனித்தன்மை வாய்ந்ததோர் தேசிய இனப்பிரிவாகும். அவர்களின் அடையாளம் அரசியலமைப்பு சட்டரீதியாகவும் சர்வதேச சாசனங்களூடாகவும் அங்கீகரிக்கப்படவேண்டும்.

"மலையகத்தமிழர்கள்" என அடையாளப்படுத்தப்படும் இம்மக்களினம் தன்னை ஒரு தேசமாக உருமாற்றிக்கொள்ள வேண்டிய வரலாற்று ரீதியான சூழலும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை இம்மக்களினம் இழக்குமானால், இனி என்றென்றைக்குமான பின்னடைவுகளை சந்திக்க நேரிடலாம்.

நாம் போராடும் வல்லமையும் அறிவாற்றலும், சிந்தனைத் திறனுமிக்க சக்தி மிக்க, செயலூக்கமுள்ள தலைமைகளைக் கொண்டிருக்கவில்லை என்பது எமது சாபக்கேடாகும்.

ஏனெனில்

- 1911 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த சனத்தொகையில் 13% மாகவும் இரண்டாவது தேசிய இனப்பிரிவாகவும் இருந்த நாம் இன்று 4.8 வீதம் குடித் தொகையுடையோராய் மாற்றமுற்று நான்காவது தேசிய இனப்பிரிவாக மாறியுள்ளோம்
- எமது குடித்தொகை வளர்ச்சிவீதம் வேகமாக வீழ்ச்சியுற்று வருகின்றது.



- பெருந்தோட்ட உற்பத்தி உறவுகளில் இருந்து 2/3 பங்கு மக்கள் வெளியேறியுள்ளார்கள்.
- சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எம்மை கொத்தடிமைகளாக புலம்பெயர்க்கும் எத்தனங்கள் இடம் பெறுகின்றன.
- எமது பேரம் பேசும் ஆற்றல் வீழ்ச்சியுறத் தொடங்கியுள்ளது.
- பண்பாட்டு சூழல் வேகமாக மாற்றமுறத் தொடங்கியுள்ளது. அதிகார சமநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வல்லமையுள்ள மக்களினமாக நாம் மாற வேண்டும்.
- தென்னாசிய சூழலில் எமதிருப்பு வேகமாகத் தேய்வடையும் ஏதுநிலை காணப்படுகின்றது.
- பெருந்தேசியவாத அரசியந்திரங்களின் ஒருங்கிணைவு அதிகாரமற்ற மக்களினங்களின் பேரழிவுக்கு ஏதுவாயமைந்துள்ளது.

நாம் போராடும் வல்லமையும் அறிவாற்றலும், சிந்தனைத்திறனுமிக்க சக்தி மிக்க, செயலூக்கமுள்ள தலைமைகளைக் கொண்டிருக்கவில்லை என்பது எமது சாபக்கேடாகும்.

எமது மூதாதையர் தென்னிந்தியாவிலிருந்து புலம் பெயர்வதற்கு ஏதுவான வரலாற்று சுழலில் புலம் பெயர்ந்தவர்கள் தென்னாபிரிக்கா, பிஜி, மடகஸ்கார், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தேசத்தின் குடிமக்களாக, பங்காளிகளாக ஓரளவுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் 191 வருட கால வரலாறுடைய நாம் சர்வதேச சட்டங்களுக்கும் சமவாயங்களுக்கும் உட்பட்ட பிரஜாவுரிமையையோ, வாக்குரிமையையோ கூடக் கொண்டிருக்கவில்லை என்பது ஒரு கவனத்திற்குரிய விடயமாகும்.

அரசியலமைப்பு ரீதியான அரசதிகாரத்தின் பங்காளிகளாக மாற்றப்படவுமில்லை. காணி, வீடு, தொழிலுரிமைகளைக் கொண்டிருக்கவுமில்லை என்பது வெளிப்படையானது.

இந்தப் பின்புலத்தில் மலையகத் தமிழரின் காணி, வீட்டுரிமைக்கான கோரிக்கை சில மூலோபாயத் தேவைகளையும் உள்ளடக்கியதாக அமைவது அவசியமாகும்.

காணி வீட்டுரிமை அரசியலமைப்பு சட்டவாக்க ஏற்பாடுகள்

**மலையகத் தமிழர்களின் பல்வேறு சமுதாய கூறுகளுக்கும் காணியுரிமை வழங்கப்படவேண்டும்**

இக்கூறுகளாவன:

1. தோட்டத் தொழிலாளர்கள்
2. தோட்ட சேவையாளர்கள்
3. அரச ஊழியர்கள்
4. தனியார் துறை ஊழியர்கள்
5. சுய தொழில் முயற்சியாளர்கள்
6. வணிகர்கள்
7. விவசாய மற்றும் பால் பண்ணை செய்கையாளர்கள்
8. ஓய்வு பெற்ற தொழிலாளர்களும் தொழிலாளர் அல்லாதவர்களும்
9. பொது பயன்பாட்டுக்குரிய நீர்நிலைகள், மேய்ச்சல் தரைகள், காடுகள். பொழுதுபோக்கு இடங்கள்.
10. சமய கலாசார நிறுவனங்களுக்கான காணி உரிமை

**காணியுரித்துடமைக்கான சட்ட வாக்கத்தின் முக்கியத்துவம்.**

கடந்த காலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் காணியும், வழங்கப்பட்டுள்ளன.

1911 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த சனத்தொகையில் 13 வீதமாகவும் இரண்டாவது தேசிய இனப்பிரிவாகவும் இருந்த நாம் இன்று 4.8 வீதம் குடித் தொகையுடையோராய் மாற்றமுற்று நான்காவது தேசிய இனப்பிரிவாக மாறியுள்ளோம். எமது குடித்தொகை வளர்ச்சிவீதம் வேகமாக வீழ்ச்சியுற்று வருகின்றது. பெருந்தோட்ட உற்பத்தி உறவுகளில் இருந்து 2/3 பங்கு மக்கள் வெளியேறியுள்ளார்கள்.

**-புதிய பண்பாட்டு அமைப்பு-**

அவையாவன.

1. தனியார் தோட்டக்காணி தொழிலாளருக்கான சம்பளம் மற்றும் EPF, ETF கொடுப்பனவுக்கு ஈடாக பகிர்ந்தளிக்கப்பட்டவை
   அ. காணியுரித்துடையவை
   ஆ. காணியுரித்தில்லாதவை
2. மகாவலித் திட்டத்தில் புலம் பெயர்ந்தோருக்குக் காணியுடமையின்றி நிர்மாணிக்கப்பட்ட குடியிருப்புக்கள் இவை இரட்டை வீட்டுத் திட்டங்களாகும்.
3. சுய உதவி வீடமைப்புத் திட்டங்கள்

i. பெருந்தோட்ட வீடமைப்பு கூட்டுறவு சங்கம் மூலம் நிர்மாணிக்கப்பட்டவை.
ii. EPF கடனுதவியில் நிர்மாணிக்கப்பட்டவை.
iii. கொடையாளிகளால் நிர்மாணிக்கப்பட்டவை.
iv. தோட்ட வீடமைப்பு அமைச்சின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டவை.
  i. தனிக்குடியிருப்புகள்
  ii. மாடிக் குடியிருப்புகள்
  iii. இரட்டை வீட்டுக் குடியிருப்புக்கள்

எனினும் இக்குடியிருப்புக்கள் அனைத்தும் 50000 குடியிருப்புகளைத் தாண்டவில்லை எனக் கருதப்படுகின்றது. இவற்றின் பயன்பாடு குழப்பகரமானதாகவுள்ளது. இவற்றுக்கான கடன் உதவித் திட்டங்கள் நீண்டகால அடிப்படையிலானவையாகவும் காணி வீட்டுரிமை தொடர்பான எத்தகைய உத்தரவாதமும் கொண்டிராதவையாகக் காணப்படுகின்றன.

காணியுடமையின்றி பல்வேறுபட்ட வீடமைப்புத் திட்டங்களில் குடியேற்றப்பட்ட தொழிலாளர்கள் அவ்வீடுகளை விற்றுவிட அல்லது கைவிட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எனவே காணி, வீட்டுரிமைக்கான அடிப்படை சட்டவாக்கம் அவசியமாகும்.

**அதன் ஏற்பாடுகள்:**

- மலையக தமிழரின் காணி, வீட்டுரிமையானது கணவன், மனைவி இருவரதும், வயது வந்த பிள்ளைகளதும் இணை உரித்தாக வழங்கப்படவேண்டும்.

**அதேவேளை**

- அக்காணி 100 வருடங்கள் அல்லது ஐந்து தலைமுறைகளுக்கு உரிமை கைமாற்ற முடியாத சட்ட ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவேண்டும் (இது சுவர்ண பூமி, ஜெயபூமி காணி உரித்துகளுக்கு சமாந்தரமாக காணப்படலாம்). அதே வேளை எதிர்கால தலைமுறையினர் தமது குடியிருப்புகளை நிர்மாணித்துக் கொள்ளக்கூடிய இடவசதிகள் உடையதாகவும் அமைதல் அவசியமாகும்.
- மலையக மக்களின் காணி வீட்டுரிமை அரசியலமைப்பினூடாக உறுதி செய்யப்படல்வேண்டும்.

(தொடரும்)







4

# மாதொருபாகன்

(நாவல்)



– பெருமாள் முருகன்–

பெருமாள் முருகன் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர். இவருடைய "மாதொருபாகன்" என்னும் இந்தநாவலை எதிர்த்து சாதி அமைப்புகளும் மதவாத அமைப்புகளும் ஹர்த்தால் போராட்டங்களை நடாத்தின. இதனால் கவலையுற்ற பெருமாள் முருகன் தான் ""மாதொருபாகன்" நாவலை திரும்பப் பெறுவதாகவும் இனிமேல் எதுவும் எழுதப் போவதில்லை எனவும் பகிரங்கமாக அறிவித்தார். அவரைத் தொடர்ந்தும் எழுதுமாறு வேண்டுகின்றோம். அவருக்கு ஆதரவுதெரிவித்து இந் நாவலை தொடராக வெளியிடுகின்றோம்.

**கா**ரப்பக்கடாவையும் கச்சாயத்தையும் தின்று முடித்துக் கையைத் துடைத்துக் கொண்டிருக்கும்போது பொன்னா இன்னொரு தட்டில் பலகாரத்தையும் சொம்பு தண்ணீரையும் எடுத்து வந்தாள். விருந்தாட வந்தால் இருப்பு பூவரசம் மரத்தடி தான். இரவானாலும் பகலானாலும் அது தான் கிடை. காட்டுக்குள் வீடு தனித்து இருந்ததால் தொந்தரவு ஒன்றுமில்லை. தூறல் எதுவும் வந்தால் திண்ணைக்குப் போவான். வீட்டுக்குள் போவதேயில்லை ஒரு வீடும் பட்டாசாலையும் தான். அதற்குள்ளே மச்சினன், அவன் மனைவி, ஒரு குழந்தை, மாமனார், மாமியார் என்று எத்தனை பேர்? மாமனாரின் இருப்பும் திண்ணையோடு சரி. பட்டிக் குடுசுதான் அவருக்கு. மச்சினன் ராத்திரி படுப்பதற்குத் தான் உள்ளே போவான்.

'நோம்பிச் சீரு வாங்கிக்கிட்டயா?' என்றான் பொன்னாவிடம்.

'அது ஒன்னுதான் கொறையாக் கெடக்குது. கையில ஒன்னு வவுத்துல ஒன்னுன்னு இருந்தனா, 'குடுடா தாயோலி வளா' ன்னு எங்கப்பனையும் அண்ணனையும் கழுத்துல துண்டு போட்டுக் கேப்பன். ஒன்னுக்கும் வழியில்லாம போச்சே. குடுத்தா வாங்கிக்கலாம். குடுக்காட்டிக் கேக்க வேண்டாம்.'

இரண்டு வருசமாகத் தேர் நோம்பிக்கு வரவில்லை. வந்து கொண்டிருந்த வரைக்கும் புதுச்சேலை, வேட்டி, துண்டு என்று தடபுடலாக இருக்கும். தேர்க்காசு என்று எப்படியும் பத்திருபது ரூபாய் கிடைத்து விடும். எதையும் அவன் எதிர்பார்க்கவில்லை என்றாலும் அவள் மனதை அறிந்து கொள்ளக் கேட்டான். ஆசையாக அவள் கைகளைப் பற்றி கட்டிலில் உட்கார வைத்தான். நெகிழ்ந்த மாராப்பினுள் குறுகுறுவென்று அவன் பார்வை புகுந்தது. மாராப்பை இழுத்துவிட்டுக் கொண்டு' மட்ட மத்தியானத்துல கண்ணு போவுது பாரு' என்றாள். ' நான் பாக்கறதுக்கில்லாத வேறெதுக்காம்' என்று சிணுங்குவது போலக் கேட்டான்.

'அடியே பொன்னா இங்க வாடி. இந்தப் பருப்பக் கொஞ்சம் பாரு. நான் எத்தனயப் பாக்கறது' என்று அவள் அம்மா கத்தினாள்.

'கெழவிக்கு ஒன்னும் முடியில போ' என்று சொல்லியவாறு எழுந்தாள். அவன் முக ஜொலிப்பைப் பார்த்துச் சிரித்துக் குடுமியைப் பற்றி இழுத்து அவிழ்த்துவிட்டு ஓடிப்போனாள்.

எப்போதும் அவன் குடுமிமேல் அவளுக்குப் பிரியம் அதிகம். அவிழ்த்துச் சடை போட்டு விளையாடுவாள். ' என்னோடத விட உனக்குத்தான் மயிரு அடம்பு மாமா' என்பாள். ' இதப் புடிச்சு இழுத்துத் தோள் மேல ஏற ஒரு பூங்கையி இல்லயே' என்று முடிப்பாள்.

எதையும் குழந்தையோடு முடிச்சுப் போடுவது அவளுக்கு வழக்கமாகிவிட்டது. உள்ளுக்குள்ளே மறைத்து வைத்துக் கொள்ளக்கூடிய குறை அல்ல இது. எப்படியும் எல்லோருக்கும் தெரிந்து விடும். எந்த நிமிசமும் யாராவது இதைப் பற்றி விசாரிப்பார்கள் என்று எதிர்பார்த்துப் பார்த்து அதை எதிர்கொள்ளும் யோசனையைத் தவிர வேறு ஒன்றும் இருப்பதில்லை.

**தங்கள் பொச்சு எப்படி நாறினாலும் கவலையில்லை. மற்றவனுடையதைக் கவிழ்ந்து படுத்து நோண்டி நோண்டி எதையாவது எடுத்துக் காட்டிக் கொண்டு திரிவதில் தான் எத்தனை இன்பம். ஒரு பொது இடம் என்பது கூடவா நினைவில் இல்லாமல் போய்விடும்? தன்னிடமிருப்பது மற்றவனிடம் இல்லை என்றால் மிகப் பெரிய தலைக்கிறுக்கு வந்து விடுகிறது. எல்லாருக்கும் எல்லாம் இருக்கிறதா? எப்போதும் எதாவது குறையத்தான் செய்யும்.**

நோம்பியின் போது ஊருக்குப் போகாவிட்டால் என்ன என்று போன வருசம் தேர் பார்க்கப் பொன்னாவைக் கூட்டிப் போனான். பெரிய தேர் வடம் பிடிக்கிற நாள். சுத்துப்பட்டி கிராமத்து மக்கள் எல்லாரும் திருச்சங்கோடு வீதியில் மொய்த்துக் கொண்டு கிடந்தார்கள். கூட்டமாகச் சேர்ந்தாலே மனம் கொண்டாட்டம் போடத் தொடங்கி விடுகிறது. இரண்டு பேரும் கடைகளைச் சுற்றிக் கொண்டிருந்த போது, ' டேய் காளி நல்லாருக்கறயா' என்ற கத்தல் காதில் விழுந்தது. திரும்பிப் பாத்தான்.

கூட்டத்தின் அக்கரையில் பொம்மிடி மணி சிரித்தான். அவன் ஊரைவிட்டுப் போய் வருசக்கணக்காகிவிட்டது. பொம்மிடியிலேயே நிலம் வாங்கிக் குடியேறிவிட்டான். அங்கிருந்தே கத்தினான். 'கொழந்த இருக்குதா?' காளிக்கு முகத்தில் ஈயாடவில்லை. கூட்டம் அதன் போக்கில் இருந்தாலும் அந்தக் கேள்வியால் எல்லோரும் தன்னையே திரும்பிப் பார்ப்பதாக உணர்ந்தான். நல்ல வேளையாகப் பொன்னா வளையல் கடைக்குள் இருந்தாள்.

சங்கடத்தோடு அவன் இல்லை என்று கையசைத்தான். உடனே மணி தலையில் அடித்துக் கொண்டு 'இன்னொரு கல்யாணம் பண்ணிக்க' என்றான். சிரித்தபடி .கூட்டத்தில் கலக்க வேண்டியதாயிற்று. தங்கள் பொச்சு எப்படி நாறினாலும் கவலையில்லை. மற்றவனுடையதைக் கவிழ்ந்து படுத்து நோண்டி நோண்டி எதையாவது எடுத்துக் காட்டிக்கொண்டு திரிவதில் தான் எத்தனை இன்பம். ஒரு பொது இடம் என்பது கூடவா நினைவில் இல்லாமல் போய்விடும்? தன்னிடமிருப்பது மற்றவனிடம் இல்லை என்றால் மிகப் பெரிய தலைக்கிறுக்கு வந்து விடுகிறது. எல்லாருக்கும் எல்லாம் இருக்கிறதா? எப்போதும் எதாவது குறையத்தான் செய்யும்.

எல்லா இடத்திலும் இதை நினைவுபடுத்துவதற்காகவே யாராவது வந்து விடுவார்கள்.' எனக்கு கொழந்த இருந்தா இருக்குது, இல்லாட்டிப் போவுது. உனக்கென்னடா மயிரு. மூடிக்கிட்டுப் போ' என்று கத்திச் சொல்லவேண்டும் போலிருக்கும். ஆனால் முடிவதில்லை. முகத்தில் அடித்த மாதிரி அவர்களைப் போலப் பேச என்ன தடையா இருக்கிறது? பொன்னா கொஞ்சம் துடுக்காக் கேட்டு விடுவாள். அவனுக்கு அது முடிவதில்லை.

அம்மாவுக்கு எதுவென்றாலும் கல்லிப்பாளையத்துக் குறிகாரநாடாரைப் பார்த்தால் தீர்ந்துவிடும் என்பது நம்பிக்கை. வாரத்தில் ஒருநாள் தான் குறி பார்ப்பார். மரமேறிவிட்டுப் பத்து மணிவாக்கில் அவர் காட்டுப் பால மரத்தடி முனி முன்னால் வந்து உட்கார்வார். பூஜை எளிமையாக நடக்கும். எலுமிச்சை அறுத்து பலியிடுவது முக்கியம். பிரித்து வலக்கை கொட்ட முத்தை இரு கைகளிலும் அள்ளிக் குலுக்குவார். இரட்டை இரட்டையாக அடுக்குவார். ஒற்றை மிஞ்சினால் சாதகம் இரட்டையாக முடிந்தால் பாதகம். காளிக்கும் பொன்னாவுக்கும் பார்த்த எல்லாச் சமயத்திலும் ஒற்றை தான். அதனால் குழந்தைப் பாக்கியம் கண்டிப்பாக உண்டு என்பது அவர் நம்பிக்கை.

'பரம்பரையில ஏதோ சாபமிருக்குது. அது என்னன்னு தெரிஞ்சு பரிகாரம் பண்ணுனா செரியாப் போயிரும்' என்றார் ஒருமுறை.

(தொடரும்....)

ஜெ.பிஸ்மி

# (The Color of Paradise)

# த கலர் ஆஃப் பாரடைஸ்

## மக்கிப்போய்க் கொண்டிருக்கும் மனிதத் தன்மை

**அவனுக்கு நேர்மாறான மனநிலையில் அவனது அப்பா ஹாசிம்! பார்வையற்ற மகனை சுமையாகக் கருதும் அவரால் மகிழ்ச்சியாய் இருக்க முடியவில்லை. மாறாக அவன் மீது அவருக்கு வெறுப்பு மண்டுகிறது.**

சுயநலம் பல நேரங்களில் மனிதர்களை ஈவிரக்கமில்லாதவர்களாக்கி விடுகிறது. தன்னைப்பற்றி மட்டும் சிந்திக்கிற மனிதன் பிறர் நலத்தை எண்ணிப் பார்க்கத் தவறிவிடுகிறபோது அவனது சுய நலத்துக்கு எவரும் தப்புவதில்லை.பெற்ற பிள்ளைகளேகூட சுமையாகத் தோன்றி, அவர்களை நிராதரவாக்கித் தவிக்க வைத்துவிடுகிறான். கள்ளங்கபடமில்லாத குழந்தைகளோ பொய்யாகிப்போன மனிதத் தன்மையையும், பேரன்பையும் அவர்களிடம் எதிர்பார்ப்பதோடு, அதற்காக ஏங்கவும் செய்கின்றன.

இப்படித் தன் தந்தையிடம் அன்பையும், பாசத்தையும் எதிர்பார்த்து, அவை மறுக்கப்பட்டதால் ஏமாற்றமடையும் எட்டு வயது சிறுவனின் கதை தான்.. 'த கலர் ஆஃப் பாரடைஸ்' (The Color of paradise) என்ற ஃபார்லி மொழித் திரைப் படம். உலகத்தரமிக்க படங்களில் முதன்மையாய் கருதப்படும் 'சொர்க்கத்தின் குழந்தைகள்' (The Children of Heaven) படத்தை இயக்கிய இராணிய இயக்குநர் மஜித் மஜிதி (Majid Majidi) இயக்கி, 1999இல் வெளியான 'த கலர் ஆஃப் பாரடைஸ்' படம் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டபோது பார்வையாளர்களின் மத்தியிலிருந்து எழுப்பப்பட்ட கரகோஷம் அடங்கவே வெகுநேரம் பிடித்தது. மிக சமீபத்தில் எந்தவொரு படமும் இத்தனை

**பறவைக் குஞ்சை பத்திரமாக எடுத்து, தன் செவித்திறன் மூலம் அந்தக் குஞ்சின் தாய்ப்பறவை வசிக்கும் கூட்டைக் கண்டு பிடித்து அதில் பறவைக் குஞ்சை பாதுகாப்பாகச் சேர்ப்பிக்கிறான்.**

வரவேற்பைப் பெற்றதில்லை என்பதோடு, கலந்து கொண்ட அனைத்து உலகப் படவிழாக்களிலும் விருதுகளைக் குவித்தது 'த கலர் ஆஃப் பாரடைஸ்' திரைப்படம்.

மொஹம்மதுக்கு எட்டு வயது. பார்வையற்ற சிறுவன். டெஹ்ரானில் உள்ள பார்வையற்றோர் பள்ளியில் படிக்கும் மொஹம்மது விவரிக்க முடியாத உற்சாகத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறான். கோடை விடுமுறை தொடங்கிவிட்டது. இன்றைக்கு அப்பா வருவார். தன்னை சொந்த ஊருக்கு அழைத்துச் செல்லப் போகிறார். சகோதரிகளையும், பாட்டியையும் பார்த்து எத்தனை நாட்களாகின்றன? இதோ அப்பா வந்துவிடுவார், எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் காத்திருக்கிறான் மொஹம்மது.



மற்ற சிறுவர்களின் பெற்றோர்கள் வர ஆரம்பித்துவிட்டனர். மொஹம்மது உடன் படிக்கும் சிறுவர்கள் தங்களை அழைத்துச்செல்ல வந்தவர்களுடன் சந்தோஷமாக சொந்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கின்றார்கள். அப்பா வந்த உடனே புறப்பட்டுவிடவேண்டியது தான். பயணம் குறித்த முன்னேற்பாட்டுடன் இருக்கும் மொஹம்மதுவின் உற்சாகமும், சந்தோஷமும் நேரம் செல்லச்செல்ல மறைந்து போய், மாறாகக் கலக்கமடைகிறான். சோகம் கவிழ்கிறது அவனுக்குள். மணிக்கணக்கில் காத்திருந்ததில் மனசு வலிக்க, எழுந்து அந்தப் பள்ளி வளாகத்திலிருக்கும் புல்வெளியில் நடக்க ஆரம்பிக்கிறான்.

புல்வெளியில் நடந்துவரும் மொஹம்மதுவுக்கு ஒரு புதரிலிருந்து பறவையின் குஞ்சு ஒன்று கத்துகிற சப்தம் கேட்கிறது. உலகத்தை அவனால் பார்க்க முடியாவிட்டாலும், மனக்கண்ணால் தான் பார்க்கும் உலகத்தை உணர்ந்து கொள்ளும் திறமை கொண்ட மொஹம்மது, அதன் சப்தத்தைக் கொண்டே அது இருக்கும் இடத்தை உணர்கின்றான். பறவைக் குஞ்சை பத்திரமாக எடுத்து, தன் செவித்திறன் மூலம் அந்தக் குஞ்சின் தாய்ப்பறவை வசிக்கும் கூட்டைக் கண்டு பிடித்து அதில் பறவைக் குஞ்சை பாதுகாப்பாகச் சேர்ப்பிக்கிறான்.

நேரம் விரைந்து கொண்டிருக்கின்றது. இப்போது மொஹம்மதுவின் முகத்தில் தெரியும் உணர்ச்சிகளை சுலபமாக புரிந்து கொள்ளமுடிகிறது.

பறவைக் குஞ்சை அதன் தாய்ப் பறவையின் கூட்டுக்குள் வைத்துவிட்டோம். நாம் நம் கூட்டுக்கு எப்போது போகப் போகிறோம்?

இனி தன் அப்பா வரமாட்டார் என்று ஏறக்குறைய அவன் நம்பிக்கையை இழந்த நிலையில், வெகு நேரம் கழித்து வருகிறார் அவனது அப்பா ஹாசிம். நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளியான ஹாசிம் மனைவியை இழந்தவர். அப்பா வந்து விட்டதை அறிந்து மகிழ்ச்சியில் ஊருக்குப் புறப்படத் தயாராகும் மொஹம்மது, ஆசிரியையிடம் தன் அப்பா பேசுவதைக் கேட்டு இடிந்து போகிறான். அவனை அங்கேயே நிரந்தரமாக வைத்துக் கொள்ளமுடியுமா என்று கேட்கிறார் ஹாசிம். ஆசிரியை மறுக்க, மன்றாடுகிறார் அவர். கடைசியில் வேறுவழியில்லாமல் மொஹம்மதுவை அழைத்துக் கொண்டு ஊருக்குப் புறப்படுகிறார்.

வடக்கு ஈரானில் உள்ள ஒரு மலைக்கிராமம் தான் மொஹம்மதுவின் கிராமம். ஊருக்குச் செல்லும் வழி நெடுக, அவன் உணரும் விஷயங்கள் அவனை சந்தோஷத்தில் ஆழ்த்துகின்றன. அவனுக்கு நேர்மாறான மனநிலையில் அவனது அப்பா ஹாசிம்! பார்வையற்ற மகனை சுமையாகக் கருதும் அவரால் மகிழ்ச்சியாய் இருக்க முடியவில்லை. மாறாக அவன் மீது அவருக்கு வெறுப்பு மண்டுகிறது.

வீட்டுக்கு வரும் மொஹம்மதுவை அவனது பாட்டியும், இரு சகோதரிகளும் பாசத்தோடு வரவேற்கின்றனர். அன்பும் பாசமும் நிறைந்த அந்தச்சூழல் அவனைப் பரவசத்தில் மூழ்கடிக்கிறது. கோழிக்கூட்டிலிருந்து முட்டைகளை எடுத்துச் சேர்ப்பது, காட்டுப் பூக்களைப் பறிப்பது, பறவை எழுப்பும் விதம்விதமான ஒலிகளைக் கேட்டுரசிப்பது என நாட்கள் நகர்கின்றன.

சினிமா

ஹாசிமுக்குத்தான் மொஹம்மதுவைக் கண்டாலே பிடிக்கவில்லை. காரணம் உண்டு! மனைவியை இழந்த ஹாசிம் மறுமணம் செய்து கொள்ளவிருக்கும் நிலையில் பார்வையற்றவனான மொஹம்மது அதற்குப் பெரும் தடையாக இருப்பான் என்று குருட்டுத்தனமாக நம்பிக்கொண்டிருக்கிறார். அதனால் அவனை எப்படியாவது வீட்டை விட்டு வெளியேற்றிவிடவேண்டும் என்று நினைக்கிறார். அதில் வெற்றியும் பெறுகிறார். பக்கத்து ஊரில் இருக்கும் பார்வையற்ற தச்சுத் தொழிலாளியிடம் மொஹம் மதுவை வேலைக்குச் சேர்க்க முடிவெடுக்கிறார். தன் குடும்பத்தைவிட்டுப் பிரிய விரும்பாத மொஹம்மது வேறு வழியே இல்லாமல் மிகுந்த மனவருத்தத்தோடும், இனி தன்னை யாரும் விரும்பமாட்டார்களோ என்ற பயத்தோடும் வீட்டிலிருந்து விடை பெறுகிறான்.

புதிய இடம், புதிய சூழல், பார்வை உள்ளவனுக்குத்தானே இதெல்லாம் பிரச்சினை? மொஹம்மதுவோ வெகு சீக்கிரமே புது இடத்தில் பொருந்திப் போகிறான். அவனுக்கு தச்சுத் தொழில் கற்றுத் தரும் முதலாளியிடமிருந்து தொழிலை மட்டுமின்றி, வாழ்க்கையையும் கற்றுக் கொள்கிறான் மொஹம்மது.

"கடவுள் தெரிவதில்லை. எங்கும் இருப்பார். நம்மால் உணரத்தான் முடியும் பார்க்க முடியாது ஆனால் நீ உன் கைகளால் இந்த உலகத்தைப் பார்க்க முடியும்." என்றார் முதலாளி.

மொஹம்மதுவின் தந்தை ஹாசிமுக்கும், பாட்டிக்கும் சண்டை வலுக்கிறது. ஒரு கட்டத்தில் பாட்டிபடுத்த படுக்கையாகறாள். ஹாசிமின் மறுமணத் திட்டம் தடைப்படுகிறது அத்தோடு மொஹம்மது மீதான கடமையைத் தவிர்க்கக்கூடாது. அவனுக்கான எதிர்காலத்துக்கு பொறுப்பேற்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறார் ஹாசிம்.

மொஹம்மதுவுக்கு அவன் தந்தையின் அன்பும் அரவணைப்பும் கிடைத்ததா?

மனிதத்தன்மை மக்கிப்போய்க் கொண்டிருக்கும் இன்றைய சூழலில், அது குறித்துப் பேசுகிற ' த கலர் ஆஃப் பாரடைஸ்' திரைப்படத்தை உலகமே போற்றுவது ஆரோக்கிமான விஷயமே! •

## ஒரு நாள்

தொழிற்சாலைப் பட்டியொன்றில்
பகலைச் சுற்றிவிட
கடுகதித் தெரு மாலையை விழுங்கியது.

இரவுக்கெனக் கதவு திறந்த பின்...
வார்த்தைகள் அரிசிகளாய்
புழுங்கி அவிந்து கொள்ளும்.
ஒவ்வொரு வாழ்வும்
உள்ளிப் பல்லுகளோடு உடைக்கப்பட்ட
எண்ணங்கள் வெங்காயமாய் உரிந்து
இமை அணைக்குள்
கடல்களைக் கட்டிவைக்க
படிமமோ, குறியீடோ
உப்புப் புளியாய் கரைந்து சேர்ந்தது.
சிந்தனை சூடாகி கொதித்துக்
குழம்பில் வழிந்தது.

ஆசைகள் வதங்கி
மணித்துளியில்
பொரிந்து வடிந்தன....
இடியப்பமாயச் சிக்கி, புட்டோடு உருட்டி
பாணில்ப் பொங்கியது போதும்
எப்போதும் தெரிந்தது.
ஒரே சொல்தான்.

காற்றில் வியர்வை
மூக்கில் வடிந்து எச்சிலாய்
எல்லார் வாயிலும் ஊற
பாம்புச் சீறல்கள்
குழந்தைகளைக் கொத்தி
பின் கண்ணீரில்க் கரையும்.

இன்னொரு முறை அணிய
துணிகளோடு துவைத்துக் காய்கிறாள்.
ஆவியாகிக் கொண்டிருக்கும்
அவள் ஈரலிப்புக்கள்.
சவர்க்கார நுரையில் புகுந்து
வானவில்களில்
புதிது புதிதாய் நிறங்களைப் பெருக்கி
பாத்திரங்களோடு கழுவிக் காய்கின்றன...

இயலாமை உடலைத் தின்ன
எல்லார் வெறுப்பிலும்
வயோதிபமடையும் மனது.

இருளின் பரபரப்பில்
எழுத்து, சொல், வசனம்...
நினைவைச் சுற்றி விரவி
அடுத்த நாளுக்கு
படிமமாகிறது.
இத்தோடு
எத்தனை கவிதைகளை
விமர்சித்தாயிற்று.

தேத்தண்ணி ருசிக்குள்
அவள் பிறப்பு கேள்வியாக
புகைந்து கருகிய கவிதைகளை
மேகக் கூட்டம் பொழிந்து தொலைத்தது.

கௌசலா

## "அவன்"கள்

எனக்குள் விரிகின்ற
மௌன சிறகுகள்
வளைந்து போகும்
பெண்மையின்
கர்வ பாரத்தில்.

அசையாப் பெண்மையின்
ஜனன ரகஸ்யத்தின் அச்சுறுத்தலில்
அசையும்
ஆண்மையின்
நிச்சயமின்மைப் பதட்டங்கள்.


குருதி கண்ட குழப்பத்தில்
தம்மை சிவப்பாக்கி
அடக்கும்
ஆளுமை நாடகங்கள்.

அகண்ட பிரமாண்டம்
தன்னை
உணராது
அறியாயமாய் அடங்கிப் போகும்
"அவள்"கள்.

ஆழம் அறிய முடியா,
அவள்
அடி முடி
காண
விழைந்து
சோர்ந்து
அவநம்பிக்கையுடன்
இன்னமும்
வளைய வந்த படியே
"அவன்"கள்.

-வசந்தி-

## தடுமாற்றம்



தொடக்கத்திலேயே
குதிரைகள் கேட்டன
எங்களுக்கு சமவெளி
மைதானங்கள் வேண்டுமென.
கழுகுகள் கேட்டன
எங்களுக்கு சிகரங்கள் வேண்டுமென.
பாம்புகள் கேட்டன
எங்களுக்கு குகைகள் வேண்டுமென.
ஆனால் மனிதர்கள் மட்டும்
இன்னும் தடுமாற்றத்திலேயே.....!

இப்ராஹீம் நஸ்ரல்லாஹ்
தமிழாக்கம்:- பாரிமைந்தன்

## இந்தளவேதான் நான்


புதுவை இரத்தினதுரை



இன்றாகவும் நாளையாகவும் இருக்கலாம்.
இல்லையெனில்,
இன்னும் சில நாட்களின் பின்னராவது
இது நடக்கும்.
அன்று மூச்சைத் துறந்து முடங்கிப் போவேன்.
கட்டிலில் வளர்த்திக் கதறிச்
சுற்றம் அழும்.
தெரிந்த சிலர் கூடியிருந்து
கற்பனைக்குத் தக்கபடி கதைப்பர்
கோயிற் கொலு துறந்து வந்து
என்சீமாட்டி சூலில் உருவெடுத்த 'சூட்டி'
மகள் துடிப்பாள்.
அடைவைப்பின் கடைக்குஞ்சு
'அப்பா' எனக் கத்தும்.
கொள்ளிக்கு நான் வளர்க்கும் பிள்ளை
ஊனுருகி ஒழுக அழுதபடி
என் சிதைக்கு தீயிடுவான்.
அந்தரித்துப் போவாள் மனைவி.
அவள் பாவம்
எந்த நிழலும் இளைப்பாற இருக்காது.
அஞ்சாறு நாள்வரைக்கும்
ஆரேனும் பேசுவர்.
பின்னர் பெஞ்சாதிவாய்மட்டும் பேசும்.
அதுவும் கொஞ்சநாள் வரையும்தான்
அதன் பிறகு என்ன நடக்கும்?
எதுவும் நடக்காது.
கால மழையிற் கரைந்து
என் நாமம் அழிந்து
மெல்ல, மெல்ல இல்லாது போவேன்.
மாரிவரும்
பொன்னாவரசும், என்வீட்டுப் பூவரசும்
பூத்துச் சொரியும்.
கோடை வரும்
எல்லாம் ஆடையிழந்து அலங்கோலமாகும்.
முதிர்ந்தவை உதிரும்.
புதிய தளிர்கள் பிறந்து பேசும். சிரிக்கும்.
என்னையெவரும் நினைவிருத்த
மாட்டார்கள்.
வந்ததுக்கும்,
இருந்ததுக்கும்,
போனதுக்கும் கூட
எந்தச் சுவடுமின்றி "இவன் வாழ்வு" முடியும்.
எனக்குத் தெரியும், இந்தளவேதான் நான்.

**தமிழீழ விடுதலைப்புலிகளின் கலைப்பண்பாட்டு அமைப்பின் பொறுப்பாளராக இருந்த புதுவை இரத்தினதுரை 2009 இல் படையினரால் கைதானார். இதுவரையில் அவர் பற்றிய தகவல் இல்லை.**

## ஞாயிறு ஓலம்



அரியாலையூர்
வே. ஐயாத்துரை

உதித்திடும் போது என்னை
உவப்புடன் மலர்கொண் டேத்தி
மதிப்புடன் மக்கள் வாழ்த்த
வைகறைப் பொழுதை நீக்கி,
விதிப்படி நாளொன் றெண்ண
மேல்நோக்கி விரையும் வேகக்
கதிர்ப்படிந்(து) தவிக்கும் மாந்தர்
கடிந்துமே உரைப்பர்! காணீர்!

வளம்பொலி வையங் காண
மழையோனுக் குதவவேண்டும்.
தழையவீழ்ந் திதழ்கள் மீளத்
தாமரைக் குதவ வேண்டும்

உழுதெழும் பயிர்கள் ஓங்க
ஒளியினைப் பரப்ப வேண்டும்
தொழுதெழும் மக்கள் தம்மைச்
சுட்டிடில் தூற்று வாரே!

வாரத்தின் முதன்நா ளென்பர்
மதத்தினர் ஞாயி றென்பர்
நேரத்தைக் குறித்துக் காட்டும்
நிர்ணயப் பொருளாய்க் கொள்வர்
தூரத்தி லிருக்கு மென்றன்
சுடரொளி பட்டுச் சுட்டால்
வீரத்தின் வாயின் வென்றோர்
வீண்மொழி புகலு வாரே!

# கூடுகள் சிதைந்த போது...

அகில்





சென்றவாரத் தொடர்ச்சி...

'நான் விசரன்..... நான் பைத்தியக்காரன்......" ஓலமிடும் என் மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் வேகவேகமாக நடக்கிறேன்.

'ஐயோ அம்மா எனக்கு பயமாயி ருக்குதம்மா. என்னைக் கட்டிப்பிடியுங்கோ அம்மா' மூத்தக்காவின் நான்கு வயது மகன் கயன் அனுங்குவது இப்போதும் என் காதுகளில் கேட்கிறது. நாலாபுறமும் குண்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அக்கா மகனை அள்ளியெடுத்து அணைத்துக் கொள்கிறா. கயன் அவள் மார்போடு ஒட்டிக்கொள்கிறான். அவன் உடல் பயத்தில் நடுங்குகிறது. கண்கள் குழிவிழுந்து, எலும்பும் தோலுமாய் கயன்....

'தம்பி இனி இங்க இருக்கேலாது போல இருக்குது. சனமெல்லாம் வெளிக் கிடுதுகள். நாங்களும் அங்கால போவம். எல்லாத்தையும் இழந்திட்டம். இனி இதுகளையும் இழக்க ஏலாது. பார் பொடியன் பயத்தில நடுங்கிற நடுக்கத்தை' என்கிறா மூத்தக்கா.

இரணைமடுவில இருந்து வெளிக்கிட்டு இது மூன்றாவது இடம். சனத்தோட சனமா அள்ளுப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறம். எங்கட இடப்பெயர்வுக்கு ஒரு முடிவு இல்ல. எனக்கு சசியை நினைச்சால் தான் பயமும், கவலையும். சசிக்கு இப்ப ஏழு மாதம். வயிறு நல்லா வெளியில தெரியுது. அவளைப் பார்க்க எனக்கு நெஞ்சு பகீர் எண்டு இருக்கும். அவள் சுகம் பெலமாகப் பிள்ளையப் பெத்தெடுக்க வேணும் என்றதுதான் என்ர பிரார்த்தனையாக இருந்தது.

'அவளால வரிசையில நிக்க ஏலுமா?'

நான்தான் பாணோ, பருப்போ வரிசையில நிண்டு என்னெண்டாலும் அவளுக்கு வாங்கிக்குடுக்கிறது.

'எத்திைனநாள் நான் சாப்பிட்டிட்டன் எண்டு பொய் சொல்லி அவளச் சாப்பிடப் பண்ணியிருப்பன்'

கலியாணங்கட்டி ரெண்டு வருஷ த்துக்குப் பிறகுதான் சசிக்கு வயித்தில குழந்தை தங்கினது. அந்த செய்தி கேட்ட சந்தோசம் நீடிக்காமல் இந்த நாட்டுப் பிரச்சினையும் தொடங்கிற்றுது. அந்த நாள்த் தொடக்கம் ஆனசாப்பாடு கூட இல்லை. பயம்... பசி.... பட்டினியோட.... பிள்ளை எப்பிடி பிறக்கப் போகுதோ எண்டு சில நேரங்களில யோசிக்க பயமாகத்தான் இருந்துது.

ஒவ்வொருக்காலும் அவளப் பத்திரமா பங்கருக்குள்ள இறக்கி, ஏத்தி..... எப்பிடி இருக்க வேண்டியவள். நாரி நோ, முதுகு நோ எண்டுகொண்டு அந்த வெறும் தரையிலயும், மண்புழுதீக்கையும் படுத்தெழும்பேக்க எனக்கு செத்திரலாம் போல இருக்கும். அவளும்தான் எலும்பும் தோலுமாய்....ஆன சாப்பாடு கூட இல்லாமல்.....

எத்தினை இரவுகளை அவள் பங்கருக்குள்ளயே கழிச்சிருக்கிறாள். குண்டுக்குப் பயப்படுகிறத விட அவளுக்குப் பாம்பு, பூச்சியளுக்குத்தான் கூடப் பயம். ஆனால் கடைசியில.....

அடுத்த நாள் ஆமிக்காரங்கள் நாங்க இருந்த முள்ளிவாய்க்கால் பகுதியைச் சுத்திவளைச்சுட் டாங்கள். அக்கா வெளிக் கிடுவம் எண்டு சொல்லி யும் யோசிச்சுக்கொண் டிருந்தது எவ்வளவு பிழை யெண்டு அப்பதான் தெரிஞ்சுது. பீரங்கி, பல் குழல்....பத்தாததுக்கு பிளேனுகளும்விட்டுவைக்கஇல்லை. இந்தத் தாக்குதல் கடைசித் தாக்குதலாம் என்று எல்லாரும் கதைக்கினம். சனம் காடு கரம்பையளுக்குள்ளாலயும், கடல் பக்கத் தாலயும் வெளியேறப் போறதாய்க் கதைச் சவை. சனத்தோட சனமா நாங்களும் வெளிக்கிட்டம்.

சசிக்கு நடக்க ஏலாமல் இருந்துது. எனக்கு சில நேரம் கோபம் கூட வந்தது. இந்தப் பயங்கரத்தைத் தாண்டினால் காணும் எண்டு இருந்துது எனக்கு.

'கெதியா நடவப்பா. இன்னும் கொஞ்சத் தூரம்தான்' எண்டு அவளை அவசரப்படுத்தினேன். குண்டுகள் நாங்க வந்த பாதைகளில் எல்லாம் விழுந்து வெடிச்சுது. செத்தவெ சாக மிச்சமான ஆக்கள் நடந்துகொண்டிருந்தம்.

'ஐயோ... என்ர பிள்ளை. என்ர பிள்ளை...' திடீரென்று பின்னால வந்துகொண்டிருந்த அக்கா கத்திக் குழறினா. அக்காவின்ர கையில இருந்து ரெத்தம் வடிஞ்சுது. அவா கயனைத் தூக்கிக்கொண்டு வந்தவா. கயனுக்கு மண்டையில காயம்பட்டி ருந்துது. நான் சசியின்ர கையில இருந்த உரபாக்கில இருந்து ஒரு சீலையக் கிழிச்சு கயனுக்கு கட்டுப்போட்டன்.

'சசி நீ இதுகளைப் பார்க்கக்கூடாது. அங்கால போ" மெல்லிய குரலில நான்தான் சொன்னன். அவள் விறைத்துப் போய் பார்த்துக்கொண்டு நின்றாள். தலை இல்லாத முண்டங்கள், கை கால் இழந்த உடல்கள் என்று எத்தினையக் கடந்து அவள் வந்துட்டாள். இதென்ன பெரிசா.....!!!

கட்டியிருந்த துணியையும் மீறிக் கொண்டு கயனுடைய தலையில இருந்து இரத்தம் வந்துகொண்டிருக்குது. கயன் அப்ப வும் மயக்கமாகத்தான் கிடக்கிறான். பேச்சு மூச்சில்லை. அக்கா மயங்கி விழுந்திட்டா. கொஞ்சநேரத்தால தானே கண்ணை முழிச்சிட்டா.

'வவுனியாவுக்குள்ள போயிட்டால் பிள்ளைக்கு ஏதாவது மருந்துபோடலாம்' யாரோ சொல்ல அத்தான் கயனைத் தூக்கிக்கொண்டு வேகவேகமாக நடந்தார். அக்காவும் அவருக்குப் பின்னால ஓடினா.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கிட்டவாகக் கேட்குது. ரெண்டுபக்கமும் சரியான சண்டை நடக்கிறமாதிரி சத்தம் கேக்குது. சனத்தோட சனமா நாங்களும் நடந்தம். சசியும் மூச்சிரைக்க நடந்து வந்தாள். நடக்க ஏலாமல் கஷ்டப்பட்ட சசியைப் பத்திரமா பிடிச்சுக்கொண்டு நடந்ததில நான் அக்காவையளையும் தவறவிட்டுட்டன்.

கட்டியிருந்த துணியையும் மீறிக்கொண்டு கயனுடைய தலையில இருந்து இரத்தம் வந்து கொண்டிருக்குது. கயன் அப்பவும் மயக்கமாகத்தான் கிடக்கிறான். பேச்சு மூச்சில்லை. அக்கா மயங்கி விழுந்திட்டா. கொஞ்சநேரத்தால தானே கண்ணை முழிச்சிட்டா.

நேரமும் இருட்டிக்கொண்டு வந்துது. என்ன பாம்பு, பூச்சி எங்க கிடக்குதோ தெரியாது. நான் புதர்களை விலக்கிக்கொண்டு சசிக்கு முன்னால நடக்கிறன். அப்பதான் அந்த இடிமாதிரிப் பெரிய சத்தம்....

நான் ஒரு புதருக்குள்ள விழுந்து கிடந்தன். எனக்குக் கையில காயம் பட்டு ரெத்தம் ஓடிக்கொண்டிருந்துது. கண்ணைத் திறக்க முடியாமல் கண்ணுக்குள் மண்ணும், தூசியுமாய்.... புழுதி மண்டலம் அடங்க சில நிமிசங்கள் எடுத்துது. அழுகுரல்களும், ஓலமும் தான்.....

'சசி.....'

'என்ர சசி....' நெஞ்சு பதைபதைக்க சசியைத் தேடினேன்.

சசி ஒரு தென்னைமரத்தோடு குப் புறக்கிடந்தாள். அவள் கிடந்த தோரணை....?

'ஐயோ சசி....!'

'ஓம் என்ர சசி செத்துப்போயிட்டாள்'

'என்ர சசி என்னை விட்டுட்டுப் போயிட்டாள்...'

'சசியோட சேர்ந்து வயித்தில இருந்த பிள்ளையும்........'

சன்னங்கள் அவளின்ர கழுத்து, நெஞ்சு, வயிறு என்று எல்லா இடங் களிலையும்துளைச்சிருந்துது. அவளின்ர ஒரு கால்ல முழங்கால் மட்டும் தான் இருந்துது. ஒரே இரத்தவெள்ளம்.

'ஐயோ சசி... என்ர சசி....'

'நான் என்ர சசிக்காக அழுவா? இல்ல வயித்திலயே அழிஞ்சுபோச்சுதே அந்த என்ர குழந்தைக்காக அழுவா.....?' முகத்திலயும், தலையிலயும் அடிச்சுக்கொண்டு அழுகிறன்.

'டொக்டர் ஆம்பிளைப் பிள்ளை எண்டு சொன்னவர்...'

'நான் கண்ட கனவெல்லாம் அழிஞ்சுபோச்சுது. எனக்கினி ஆரு.....'

ஆறுதல்ப்படுத்த யாருமில்லாமல் பைத்தியக்காரனைப் போல கொஞ்சநேரம் அவளை என்ர மடியில போட்டுக்கொண்டு இருந்தன். என்ர காயத்தின்ர வலியோ, அதில இருந்து ரெத்தம் வடிகிறதோ எனக்கு தெரியேல்ல.

'எவளின்ர மடியில என்ர உயிர் போகவேணும் என்டு நினைச்சனோ, இன்றைக்கு அவள் பிணமா என்ர மடியில.....'

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் இப்ப இன்னும் கிட்டத்தில கேட்குது.

ஆட்கள் ஏதோ சொல்லிக்கொண்டு போகினம். என்ர காதில எதுவுமே விழேல்ல. குண்டுகள் விழுந்து வெடிச்சுப் புழுதி கிளம்புது. சன்னச் சிதறல்கள் நெருப்புப் பொறிகளாத் தெறிக்குது. துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கிட்டவாய்க் கேட்குது. நாய், நரியளின்ர ஊளைச் சத்தங்களும் தூரத்தில கேட்குது.

'தம்பி அழுதுகொண்டிருக்க இப்ப நேரமில்ல. எழும்புங்க தம்பி' யாரோ ஒரு வயதானவர் என்னை நெருங்கி என்ர நிலமையைப் பார்க்கிறார். என்ர கைக்காயத் தைப் பார்த்து தன்ர இத்துப்போன சாரத்தின்ர ஒருமூலையைக் கிழிச்சுக் கட்டுப்போடுறார்.

(தொடரும்)

இது நம்தேசம்

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத் துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் நம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல:96, கிருல வீதி, கொழும்பு-05
தொலைபேசி: 011-5353635 பெக்ஸ்: 011-5335500
ஈமெயில்: peesl@peesl.lk இணையத்தளம்: www.pccsl.lk

(05 ஆம் பக்க தொடர்ச்சி)

(விடுதலைப்புலிகளின்....)

என்பதை எந்த ஒரு முஸ்லிம் மகனும் மறுப்பதற்கில்லை.

அந்த இக்கட்டான நேரத்தில் முஸ்லிம் தலைமைகளும் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களின் ஆதரவை, அரவணைக்கக் கோரியபோது தயங்காது களத்தில் இறங்கி பேரினவாதச் சக்திகளுக்கு எதிராக தமிழ் மக்கள் செயற்பட்டனர்.

தமிழ் மக்களுக்கான அரசியல் பயணம் முள்ளிவாய்க்காலையும் விட மிக மோசமான பயணமாக இருக்கப்போகிறது. சுமார் இரு வருடங்களுக்கு முன் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் தீர்க்க தரிசனமாகக் கூறிய வார்த்தையை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்:

"தமிழ் மக்களுக்கு எதிரான உண்மையான போர் தற்போதுதான் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அது முள்ளி வாய்க்கால் போரினை விட மோசமானது. கொடூரமானது. இந்தப் போர் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த இருப்புக்கும் ஆபத்தாக முடியும். இனம், மொழி, கலாசார ரீதியில் பெரும் அழிவுக்குத் தமிழ் மக்களை இட்டுச்செல்வதாக அமையும்."

ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இந்த எச்சரிகையை ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்தித்தாக வேண்டும். தமிழ் மக்களின் இருப்பு, பாதுகாப்பு, சுயகௌரவம், உரிமைகள், குறித்து பேசியபோதெல்லாம் சிங்களத் தலைமைகளும் தென்னிலங்கை பேரினவாதச் சக்திகளும் அது தனிநாட்டுக்கான கோரிக்கையென மறுத்திருந்தனர். அதுபோல் முஸ்லிம் தரப்பினரின் தமிழர் விரோதப்போக்கு குறித்து பேச முற்படும் போது அது தமிழர்களின் இனவாதப் போக்குகளை சித்திரிக்க முற்படுவர். அதற்காக தமிழர்கள் பக்க நியாயத்தை எதிர்பார்ப்பைக் கூறாதிருக்க முடியாது.

முஸ்லிம் மக்களுக்கு தமிழ் மக்களே நேச சக்தியாக இருக்க முடியும். சிங்களத் தரப்பு அல்ல? தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களத் தரப்பு முஸ்லிம் மக்களையும் முஸ்லிம் தலைமைகளையும் பயன்படுத்தியமை வரலாற்றுப் பதிவுகளாக பல உள்ளன. தமிழர்களுக்கு எதிரான பயணத்தில் சிங்களச் சக்திகளுடன் முஸ்லிம் மக்களும் முஸ்லிம் தலைமைத்துவங்களும் கைகோர்த்து நடந்தபோதும் சிங்களத் தரப்பு அவர்களை நேச சக்தியாகக் கருதி அரவணைத்துச் செல்வதற்கு தயாராக இல்லை என்பதை அண்மைக்கால சம்பவங்கள் நிரூபித்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவின் கைகளில் இருந்து மைத்திரிபால சிறிசேனவின் கைகளுக்கு ஆட்சி மாறியதானது முஸ்லிம் மக்களின் அல்லது தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்ற முடிவுக்கு வருவதற்கான எந்தவித உத்தரவாதத்தையும் வழங்குவதாக இல்லை என்பதை தமிழ் பேசும் மக்கள் உணர்ந்தாக வேண்டும். அந்த வகையில் தமிழ், முஸ்லிம் இனங்கள் புரிந்துணர்வுடன், விட்டுக் கொடுப்புடன் நல்லிணக்கத்துடன் கைகோர்த்துப் பயணிப்பதே இலங்கை அரசியலில் தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை பயப்பதாக அமையும்.

(08 ஆம் பக்க தொடர்ச்சி)

(இந்தியாவிற்கான......)

அடிக்கல் நாட்டுகையும் தவிர்க்கப்பட்டுள்ளது போலத்தெரிகின்றது, சீபா உடன்படிக்கை பற்றியும் கூட எதுவும் பேசப்படவில்லை. சுங்க நடவடிக்கைகளில் ஒத்துழைப்புடன் செயற்படுவது பற்றி மட்டும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது, அத்துடன் றுகுணு பல்கலைக்கழகத்தில் ரவீந்திரநாத்தாகூர் நூதனசாலை அமைக்கவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது,

சிங்களத் தேசியவாதிகள் எழுச்சியடைவதற்கானஎந்தச்சந்தர்ப்பமும்வழங்கக் கூடாது என்பதில் மோடி கவனமாகவே இருந்திருக்கிறார். இந்தியாவுடனான உறவு இலங்கைக்கு அதிக நன்மைகளே தரும் என்ற தோற்றத்தையே கொடுக்கமுயன்றார். பாராளுமன்ற உரையின் போது தமிழர், இனப்பிரச்சினை என்பதுபற்றி மட்டுமல்ல 13வது திருத்தம் பற்றியே மோடி வாய்திறக்கவில்லை. சிங்கள மக்கள் மனங்குளிரும் வகையில் சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்றும், சிங்கள மன்னர்களின் பெருமை பற்றியும், பௌத்த மதத்தின் பெருமை பற்றியுமே கூறியிருந்தார்.

ஒருவகையில் மோடியின் இந்தப் பயணம் சீனாவின் செல்வாக்கினை இலங்கையிலிருந்து அகற்றும் முதலாம் கட்ட வேலைத்திட்டத்திற்கான பயணம் எனக் கூறலாம். இந்தப் பயணத்தில் அடித்தளங்களை இடுவது தான் மிகப்பெரிய பணியாக இருந்தது, மோடியின் பாராளுமன்ற உரை சிங்கள மக்களை இந்திய உறவிற்கு இசைவாக்கி ஒரு வலுவான அடித்தளத்தினை உருவாக்குவதில் பெரும்பங்காற்றியிருந்தது. சீனாவின் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கின்றமை முதல் கட்ட வேலையின் மிகப்பெரிய வெற்றி. இராஜதந்திரிகளுக்கு விசா இல்லாத பயண வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது, அது இன்னோர் வெற்றி. அனைத்துத் தரப்புடனும் ஒரு தொடர்பு ஏற்பட்டிருக்கின்றது அதுவும் ஒரு வெற்றி தான்.

எதிர்காலத்தில் இந்தியா இலகுவாக நகர்வதற்கான பாதை திறக்கப்பட்டு விட்டது. இது இரண்டாம், மூன்றாம் கட்ட வேலைத்திட்டங்களை மேலும் இலகுவாக்கும்.
கூறியிருந்தார்.

# நூல் அறிமுகம்

## விலக்கப்பட்ட தாள்கள்

**ஆசிரியர்** – ஈழவாணி
**வெளியீடு** - மித்ரா பதிப்பகம்
**விலை** - 80.00 (இந்திய விலை)




வவுனியாவில் பிறந்து சென்னையில் வசிக்கும் ஈழவாணி "விலக்கப்பட்ட தாள்கள்" என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டிருக்கிறார். அண்மையில் சென்னைப் புத்தகத் திருவிழா இடம்பெற்ற போது மித்திரா பதிப்பகத்தின் முன் இவரது கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டது. ஏற்கனவே "சிதறல்", "தலைப்பு இழந்தவை", "ஒரு மழை நாளும் நிசிதாண்டி ராத்திரியும்" என்ற பெயரிலும் கவிதைத் தொகுதிகள் வெளியிட்டிருக்கிறார்.

இவரது இந்த கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகளுக்கேற்ற ஓவியங்களும் வரையப்பட்டுள்ளமை கவிதைக்கு சிறப்புச் சேர்ப்பதாக உள்ளது. பெண்களின் வாழ்வியல் நெருக்கடிகளை கவிதைகள் அதிகம் பேசுகின்றன.

அவரது ஒரு கவிதை பெண் சந்திக்கும் நெருக்கடிகளில் ஒள்றை இவ்வாறு கூறுகின்றது.

நிகழ் வறுமை புரியாது
நீண்ட மறுதலிப்பின் வலிகளில்
கொட்டிய வார்த்தைகளும்
தாங்கிய அணைப்புக்களுமே
கூலிகளாய்...
வலிந்தேற்றிய சுமைகளுடன்
இன்னும் ஒருத்தி

ஈழவாணி கவிதைகள் மட்டுமல்ல சிறுகதைகள், குறு நாவல் என்பவற்றையும் எழுதியிருக்கின்றார். "நிறங்கள்", "நிர்வாண முக்தி" ஆகிய சிறுகதைத் தொகுதிகளும் "ஒரு மல்லிகை சிவப்பாகிறது" என்ற குறு நாவலும் ஏற்கனவே வெளிவந்திருக்கின்றது" "ஈழத்து நாட்டார் பாடல்கள்" என்ற ஆய்வு இலக்கிய நூலும் வெளிவந்திருக்கின்றது.

இவை மட்டுமல்ல ஈழவாணி ஒரு குறும்பட இயக்குநரும்கூட, "அம்மா வருவா" "திவலை" ஆகிய குறும்படங்களையும் "எழுத்தாணி", "ஈழநாட்டியம்", தமிழகத்தில் ஈழஅகதிகள்" ஆகிய ஆவணப்படங்களையும் தயாரித்து இயக்கியிருக்கிறார்.

ஈழவாணியின் "விலக்கப்பட்ட தாள்கள்" என்கின்ற கவிதைத் தொகுதியுடன் மேற்கூறிய படைப்புக்களையும் இணைத்துப்பார்க்கின்ற போது அவரது பன்முக ஆளுமையின் வீச்சம் தெரியும்.

**சி.அ.யோதிலிங்கம்**

(16 ஆம் பக்க தொடர்ச்சி)

(மாத்தறை.....)

### என்னையும் என் மகளையும் தாக்கினார்கள்

குருக்களிற்கு கோவிலுக்குள் சென்று பூசை செய்வதற்கு நீதிமன்றம் அனுமதித்த பின்னர் நாங்கள் 22.01.2015, C 04 169/260 இலக்கத்தின் கீழ் மாத்தறை பொலிஸில் முறைப்பாடு செய்துவிட்டு 23.01.2015 அன்று கோவிலுக்குள் சென்றோம். அவ்வேளை உருட்டுக் கட்டைகள், வாள்கள் சகிதம் கோவிலுக்குள் வருகை தந்த தர்மதாச மற்றும் அவரது அடியாட்கள் எங்கள் மீது சரமாரியாக தாக்குதல்கள் நடாத்தினார்கள். எனது மகளை கடுமையாக தாக்கினார்கள். நாங்கள் அவளை வைத்தியசாலையில் அனுமதித்தோம். என்னுடைய கையடக்க தொலைபேசியும், தங்க மாலையும் திருட்டுப் போய்விட்டது. நாங்கள் 23.01.2015 அன்று மீண்டும் பொலிஸில் முறைப்பாடுசெய்தோம். ஆனால் குற்றவாளிகள் இன்று வரை தண்டிக்கப்படவில்லை. பிரதேச செயலாளரினால் பௌத்த விவகார அமைச்சிற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் இந்நிலத்தின் பெறுமதியானது ரூ.230 மில்லியன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.



மோடியின் யாழ் வருகையின்போது அவரது
கவனத்தை ஈர்ப்பதற்கான போராட்டம்



காணி பறிப்புக்கு எதிரான போராட்டம்
புதுக்குடியிருப்பில்








ரொறன்ரோ கனடாவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவாக "மாற்றத்திற்கான குரல்"
அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாபெரும் ஒன்றுகூடல்



நஞ்சு கலந்த நீரைப் பருகியதால் பாதிக்கப்பட்ட
யாழ். ஏழாலை மயிலங்காடு சிறி முருகன்
வித்தியாலய மாணவர்களை மருத்துவமனையில்
பார்வையிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்





யாழ். ஏழாலை மயிலங்காடு சிறி முருகன் வித்தியாலய
குடிநீர்த் தாங்கியில் நஞ்சு கலந்த விசமிகளை கைது
செய்யக்கோரி சுன்னாகம் பஸ் நிலையத்தின் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்





ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையை வெளியிடும்படி வற்புறுத்தி
ஜெனிவாவில் இடம்பெற்ற ஈழத்தமிழர்களின் போராட்டம்



இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தக்கோரி ஜெனிவாவில்
நடைபெற்ற மாநாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்
கஜேந்திரகுமார் மற்றும் கனடா பல்கலைக்கழக பேராசிரியர்
ஸ்ரீரஞ்சன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

**இது நம்தேசம் வார இதழாக வெளிவரத்தொடங்கியுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருவதில் மகிழ்வடைகின்றோம்.**
**வாசகர்களே...! உங்கள் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் போன்றவற்றை எங்களுக்கு அனுப்புங்கள்**
**அனுப்பவேண்டிய முகவரி: இல. 43, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 23.03.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.